# திருகோணமலை – மட்டக்களப்பு மறைமாவட்ட சுருக்க வரலாறு

கிழக்குக் கரையோரத்தில் கிறிஸ்தவம் வந்த சரித்திரம் 15ம் நூற்றாண்டில் போர்த்துகேயர் காலம் வரை செல்கிறது. அருட்திரு. பிறயர் சைமன் டி கொய்ம்கரா போர்த்துக்கல் அரசர் மூன்றாம் அருளப்பருக்கு எழுதிய கடிதத்தில் மட்டக்களப்பு இளவரசரைத் திருமுழுக்கிற்குத் தயார் செய்ததாகக் குறிப்பிடுகிறார். மோனிஸ் பரெட்டோ தலைமையில் வந்த குழு 1549ம் ஆண்டு மட்டக்களப்பை அடைந்தபோது இராணுவத்துடன் வந்த பிரான்சிஸ்கன் சபைக் குருக்கள் இளவரசருக்கு திருமுழுக்கு அளித்து டொம் லூயிஸ் எனும் பெயரையும் இட்டனர்.

மேலும் இளவரசிக்கும் இக்குழந்தைகளுக்கும் குடம்பத்தினருக்கும் மறை அறிவிப்பாளர்களால் திருமுழுக்கு அளிக்கப்பட்டது. 1547 முதல் 1552ம் ஆண்டு வரை ஒரு வன்னிச்சி பெண்மணி பனிச்சங்கேணியையும் அவளது சந்ததியினரையும் அரசாட்சி செய்ததாக திரு ச. ஓ. கனகரெட்ணம் தனது மட்டக்களப்பு மாவட்டத்தை பற்றிய நூலில் குறிப்பிடுகிறார்.

1549 முதல் 1552ம் ஆண்டு வரை திருகோணமலை நிலைமையின்படி அரசாட்சி சம்பந்தமாக ஏற்பட்ட சர்ச்சையினால் திருகோணமலையில் அரச குடும்பத்தைச் சேர்ந்த 8 வயதுடைய வன்னிய இனத்து இளவரசன் தன் 40 சேவகருடனும் சித்தப்பாவுடனும் மீன்பிடித் தொழில் நடக்கும் கடற்கரைப் பகுதியில் (தூத்துக்குடி) தஞ்சம் புகுந்தார். இவர்கள் பரவர் இன கிறிஸ்தவர்களால் நன்கு உபசரிக்கப்பட்டனர். தமிழ் மொழியில் நன்கு பயிற்சி பெற்ற அருட்திரு. ஏன்ற்க் குவேஸ் யே. சு. இளவரசர் குழுவைச் சந்தித்து ஆறுதல் கூறினார். கிறிஸ்தவர்களினதும் குருக்களினதும் உபசரிப்பால் பூரிப்படைந்த இளவரசரும் அவரது குழுவும் தமக்கு திருமுழுக்கு அளிக்கும்படி கேட்டனர்.

வன்னிய இனத்து இளவரசர் டொன் அலொன்சோ எனும் பெயரைப் பெற்றார். பரவர் இனத்தைச் சேர்ந்த கிறிஸ்தவர்கள் போர்த்துகேயர் மாலுமிகளின் உதவியுடன் ஆயிரம் பேர் கொண்ட படையை உருவாக்கி இளவரசரும் அவருடன் வந்த வன்னிய சேவகர்களும் மீண்டும் திருகோணமலையைக் கைப்பற்ற உதவி செய்து இளவரசரின் சித்தப்பாவை ஆட்சிப் பொறுப்பில் விட்டனர். பரவர் இனக் கிறிஸ்தவர்களும் திருகோணமலையிலும் அதன் சுற்றுப் புறத்திலும் தங்கி திருகோணமலையிலும் கொட்டியாவிலும் முதல் கிறிஸ்தவ சமயத்தை உருவாக்கினார்கள் என்று திரு வென் அ. லங்கே குறிப்பிடுகிறார். இந்திய கடலோரத்தை மூலமாகக் கொண்ட கத்தோலிக்க பரவர் சமூகம் இன்று கொட்டியாவில் இருப்பதையும் அருட்திரு. யோசவாஸ் அடிகள் வருவதற்கு முன்பே இச்சமுகம் இருப்பதையும் காணலாம். கொறேறா பெர்னாண்டோ, பீரிஸ்.டி வாஸ், குரூஸ்இமஸ்சரெகாஸ் போன்ற பெயர்கள் மீன்பிடிச் சமூகம் பரவர் கிறிஸ்தவருடன் தொடர்பு உள்ளதைத் தெளிவாக்குகிறது.

இவ்வாறு திருகோணமலை, மட்டக்களப்பு நகர்களில் ஆதி கிறிஸ்தவ சமூகம் உருவெடுத்தாலும் பல வருடங்களாக அது குருக்களின் உதவியின்றி இருந்தது. இதன் காரணமாக கடலோரம் தவிர்ந்த மற்றைய இடங்களில் விசுவாசம் பரவவில்லை. யாழ்ப்பாணத்தில் மனமாற்றம் ஏற்பட்டாலும் கிராமப்புறங்களில் சிறிய முன்னேற்றங்களே ஏற்பட்டுள்ளன. திருகோணமலை, மட்டக்களப்பு பகுதிகளிலும் சில கிறிஸ்தவர்கள் இருக்கின்றார்கள். அவர்களையும் நாம் பராமரிக்க வேண்டும்' என்று 1556 ஆம் ஆண்டு கொழும்பு கொச்சின் மேற்றிராசனத்துடன் இணைக்கப்பட்டிருந்தது.

1628ஆம் ஆண்டு போர்த்துக்கேயர் திருகோணமலையிலும் மட்டக்களப்பிலும் கோட்டை கட்டும் வரை இப்பகுதிகளில் கிறிஸ்தவர்களின் விசுவாசத்தை வளர்க்க குருக்கள் எவ்வகையில் உதவினார்கள் என்று ஆதாரங்கள் இல்லை. 1628ம் ஆண்டிலிருந்து குருக்கள் இப்பகுதிகளில் தங்கியிருந்தனர். ஒவ்வொரு கோட்டையிலும் ஒரு சிறிய கோயில் இருந்தது. மாலுமிகளைப் பராமரிக்க இரு குருக்களும் இருந்தனர். திருகோணமலையில் அருட்திரு. செபஸ்டியான் டி பொன்சேகாவும் மட்டக்களப்பில் அருட்திரு. அன்ரனி டி சொய்றோ அடிகளும் கோட்டை பாதுகாப்புப் படையினருக்கு உதவியாக இருந்து கொண்டு நகரில் வாழ்ந்த கிறிஸ்தவர்களுக்கும் உதவியாக இருந்தனர்.

டச்சுக்காரர் காலத்தில் கத்தோலிக்கருக்கு ஏற்பட்ட கொடுமைகள் மத்தியிலும் கிழக்கிலங்கையில் போர்த்துக்கேயர் காலத்திலிருந்து கிறிஸ்தவர்கள் வாழ்ந்திருக்கின்றனர் என்பதற்கு இன்று வாழும் பறங்கியர் சமூகம் சிறந்த ஆதாரமாக விளங்குகிறது. இவர்கள் கிறிஸ்தவ விசுவாசத்தையும், போர்த்துக்கேயர் மொழியையும், கலாசாரத்தையும் கட்டிக்காத்து கடைப்பிடித்து வருகிறார்கள்.

1638ம் ஆண்டு மட்டக்களப்பும் 1639ல் திருகோணமலையும் டச்சுக்காரரால் கைப்பற்றப்பட்டன. 1658இல் இலங்கை கரையோரம் முழுவதும் இவர்கள் கட்டுப்பாட்டில் வந்தது. இதைத் தொடர்ந்து டச்சு அரசு இலங்கையில் கத்தோலிக்கரையும் கத்தோலிக்க குருக்களையும் வதைக்கத் தொடங்கியது. டச்சு கம்பனியின் நிர்வாகத்தின்கீழ் வரும் பகுதிகள் அனைத்திற்கும் டச்சு சீர்திருத்த திருச்சபையே அதிகாரபூர்வமான சமயம் எனும் சட்டத்தொகுப்பை 1642ஆம் ஆண்டு டச்சு கிழக்கிந்திய கம்பனி வெளியிட்டது. இதனால் வேறு சமய வழிபாடுகள் தடை செய்யப்பட்டன. வேறு நாடுகளில் இது போன்ற சட்டம் கடைப்பிடிக்கப்படாவிட்டாலும் இலங்கையில் இச்சட்டம் கடுமையாக நிறைவேற்றப்பட்டது. கத்தோலிக்க ஆலயங்களும் கத்தோலிக்கர் கூடும் இடங்களும் கைப்பற்றப்பட்டு குருக்கள் மறைந்த வாழ்வு வாழ வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

கத்தோலிக்க வழிபாடுகள் தடை செய்யப்பட்டு, டச்சு நிர்வாகத்தின் கீழ் இயங்கிய பாடசாலைகளுக்கு மட்டுமே கத்தோலிக்க பிள்ளைகள் செல்ல அனுமதிக்கப்பட்டார்கள். திருமுழுக்கு, திருமணம், மரணச்சடங்குகள் அனைத்தும் டச்சு சீர்திருத்த சமய சடங்குகளின் படியே நடாத்த கட்டாயப்படுத்தப்பட்டனர். கத்தோலிக்க குருவிற்கு தஞ்சமளிப்பது கொலைக் குற்றத்திற்கு சமமாக கருதப்பட்டது. 1658ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 19ம் திகதி டச்சு அரசின் வெளியீட்டின் படி கத்தோலிக்க குருக்களுக்கு தஞ்சமளிப்பது தடை செய்யப்பட்டது. மீறுபவர்கள் கொலை செய்யப்படுவார்கள். 1715 தை 11ஆம் திகதி வெளியீட்டின்படி கத்தோலிக்கர் இரகசியமாகவோ பொதுவாகவோ கூட்டம் கூடுதலும், கத் தோலிக்க வழிபாட்டுத் தலங்களை பராமரித்தலும் தடை செய்யப்பட்டன. 1715 ஆவணி 8ஆம் திகதி வெளியீட்டின்படி குழந்தைகளுக்கு கத்தோலிக்கக் குருக்களால் அல்லது கத்தோலிக்க முறைப்படி திருமுழுக்கு கொடுப்பது தடைசெய்யப்பட்டது. போர்த்துக்கேயரின் பிடியில் இருந்த பகுதிகளை டச்சு அரசு முழுமையாக தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்த பின் கத்தோலிக்கரை கடுமையாக வதைக்கத் தொடங்கினர். ஏனெனில் மத வெறியால் அல்லது தேசிய குரோதத்தினால் மட்டுமல்ல பல சூழ்நிலைகளால் ஏற்படுத்தப்பட்ட அரச கொள்கைகளுக்காகவும் கத்தோலிக்கரை வதைத்தனர். டச்சு அரசின் ஆட்சிக்காலத்தில் போர்த்துக்கேய வம்சத்தவர் பலர் இலங்கையில் இருந்தனர். டச்சு அரசின் கட்டுப்பாட்டில் வாழ்ந்த அநேகர் கத்தோலிக்கரே. கத்தோலிக்க மதம் மறைமுகமாக வளர்ந்ததாலும் போர்த்துக்கேய பாஷை தொடர்ந்து நடைமுறையில் இருந்ததாலும் போர்த்துக்கேய அனுதாப அலை இருந்து கொண்டே வந்தது. டச்சு அரசு யாருடைய அழைப்பின் பேரில் வந்து யாருடைய உதவியுடன் போர்த்துக்கேய அரசை விரட்டியடித்து கத்தோலிக்கரை கொடுமைப்படுத்தியதோ அதே கண்டி அரசனோடு பகைத்து உறவை முறிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட, இலங்கை தீவில் தொடர்ந்து இருப்பது பாதுகாப்பற்றது என்பதை டச்சு அரசு உணர்ந்தது. கைப்பற்றிய மற்றைய நாடுகளில் முதல் எதிர்ப்புக்குப்பின் கத்தோலிக்கரை தமது மத வழிபாடுகளுக்கு அனுமதித்தது. குருக்களையும் ஆலயங்களையும் மீண்டும் இயங்க வைத்தாலும் இலங்கையில் எதிர்மாறாகவே நடந்தது. கத்தோலிக்க ஆலயங்கள், கல்லூரிகள், கல்வி நிலயங்கள் என்பவற்றைக் கைப்பற்றி தரை மட்டமாக்கினார்கள். குருக்களை நாடு கடத்தி, இலங்கைக்கு வரும் குருக்களுக்கும் அவர்களுக்கு தஞ்சம் கொடுப்பவர்களுக்கும் மரண தண்டனை கொடுப்பதாகவும் சட்டம் இயற்றினார்கள். டச்சு சமய முறைப்படி திருமணம் செய்யவும் மரணச்சடங்குகள் நடத்தவும் பிள்ளைகளை தமது பாடசாலைகளில் படிக்க கட்டாயப்படுத்தியும் வந்தனர். டச்சு நிர்வாகத்தின் கீழ் வேலை பார்ப்பவர்கள் மட்டுமல்ல இலங்கை சம்பிரதாய கிராமத்தலைவரும் கத்தோலிக்க விசுவாசத்தை தகுதியற்றதாக பிரகடனப்படுத்த வேண்டுமென பலவந்தப்படுத்தப்பட்டனர். இவ்வாறு புகழ் பெற்ற இலங்கை சரித்திர ஆசிரியர் அருட்திரு. சி.ஞா. பெரேரா சே.ச கூறுகிறார்.

டச்சு அரசால் கொடுமைப்படுத்தப்பட்ட கத்தோலிக்கர் பல காலமாக மறைந்த வாழ்வு வாழ்ந்தனர். சிலர் விசுவாசத்தில் நிலையாய் இராமல் உலக இன்பங்களுக்கு அடிமையாகி விசுவாசத்தில் இருந்து தவறினார்கள். ஆனால் அருட்திரு. யோசேப் வாஸ் அடிகள் வரும் வரை குருக்கள் இல்லாமலிருந்தும் பலர் துன்பங்களையும் எதிர்த்து விசுவாசத்தில் நிலையாய் இருந்தார்கள். டச்சு அரசால் ஏற்படுத்தப்பட்ட அச்சுறுத்தல்களோ தண்டனைகளோ இவர்களை விசுவாசத்திலிருந்து அசைக்க முடியவில்லை. தண்டனை காரணமாகவும் அரச தொழில் பெறுவதற்காகவும் பல கத்தோலிக்கர் புதிய விசுவாசத்தில் தம்மை உறுதிப்படுத்தினார்கள். ஆனால் அனேகர் ஆன்ம வழிகாட்டிகள் இல்லாவிட்டாலும் அச்சுறுத்தல்களையும் உலக சோதனைகளையும் வென்று விசுவாசத்தில் நிலையாய் இருந்து நடு இரவிலும் தங்கள் வீடுகளில் சமயக்கூட்டங்களை நடத்தி வந்தார்கள் என்று 1848ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட கத்தோலிக்கப் பத்திரிகை குறிப்பிடுகிறது. சிறந்த அறிவாளியும் சரித்திர ஆசிரியரும் கத்தோலிக்கரல்லாதவருமான டெனன்ட் இமர்சன் பிரபு டச்சு அரசு காலத்தில் கத்தோலிக்கரின் விசுவாசத்தையும் தளரா உறுதியையும் பற்றி நிரூபிக்கிறார். டச்சுக்காரரால் வதைக்கப்பட்டாலும் றோமன் கத்தோலிக்கத்திருச்சபை இலங்கையில் தன் நிலையையும் செல்வாக்கையும் நிலைநாட்டியது. இதை டச்சு அரசு இலங்கையை கைப்பற்றிய பின்பும் அங்கு நிலைத்திருந்த போர்த்துக்கேய சநததியினர் வெளிப்படுத்தினார்கள். ஊழல்களினாலோ கட்டாயத்தினாலோ தூண்டப்படாத அநேக சிங்களவராலும் தமிழராலும் தனிப்பட்ட முறையில் கத்தோலிக்க மதம் அனுசரிக்கப்பட்டது என்று டெனன்ட் இமர்சன் பிரபு குறிப்பிடுகிறார் கண்டி அரசனின் அழைப்பின் பேரில் டச்சு அரசின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளில் வாழ்ந்த கத்தோலிக்கர் கண்டி இராச்சியத்தில் குடியமர்ந்து நிலை நிறுத்திக் கொண்டார்கள்.

### அருட்திரு. யோசப் வாஸ் அடிகள்

டச்சு அரசு இலங்கையைக் கைப்பற்றி 30 ஆண்டுகளுக்குப் பின், 1687இல், கத்தோலிக்க விசுவாசத்தை மீண்டும் கட்டியெழுப்ப ஏழை வேடம் பூண்டு, கோவாவில் இருந்து மறைபரப்பு பணியாளராகிய அருட்திரு. யோசப் வாஸ் அடிகள் மன்னாருக்கு வந்து 24 வருடங்கள் கடுமையாக உழைத்தார். 1694/1695ஆம் ஆண்டளவில் கிழக்கு கரையோரத்திற்கு தன் முதல் பயணத்தை மேற்கொண்டார். 1624இல் இருந்தே மட்டக்களப்பில் தாண்டவன் வெளி எனும் இடத்தில் கண்டி அரசனுக்குச் சொந்தமான ஒரு பூமியில் கத்தோலிக்க ஆலயமொன்று இருந்ததாக மரபு கூறுகிறது. ஒரு இரவு இவ்வாலயத்தில் கத்தோலிக்கரால் மங்களவார்த்தை செபம் சொல்லப்பட்டபோது அருட்திரு. யோசப் வாஸ் அடிகள் அங்கு சென்று தான் ஒரு குரு என்று ஒரு சிலருக்கு தம்மை வெளிப்படுத்தினார். பின்பு அவர் திருமறையை மறுதலிக்கும் ஒருவரால் காட்டிக்கொடுக்கப்பட்டு மரத்திரல் கட்டப்பட்டு கசையடி வாங்கினார். மட்டக்களப்பைப் பற்றி திரு கனகரெட்னம் எழுதும் போது பின்வருமாறு கூறுகின்றார். அந்நாட்களில் வாழ்ந்த பழங்குடி மக்களின் கூற்றுப்படி மட்டக்களப்பில் 1624இல் முதல் கத்தோலிக்க ஆலயம் ஸ்தாபிக்கப்பட்டது என்று 1868ஆம் ஆண்டு மாசி 2ஆம் திகதி எழுதிய கடிதத்தில் அருட்திரு. A.M ருபியாக் (Rauffiac) அடிகள் குறிப்பிடுகிறார். தாண்டவன்வெளி பழைய ஆலயத்தோடு இவ்வாலயம் அடையாளம் காட்டப்பட்டது. டச்சு கலாபனை ஆரம்பமாகியது. இச்சூழ்நிலையில் தான் கத்தோலிக்க விசுவாசத்தை புதுப்பிக்க வேண்டும் எனும் நோக்கத்தோடு அருட்திரு. யோசப் வாஸ் அடிகள் இம்மாவட்டத்திற்கு வந்தார். அதே புனித குரு மட்டக்களப்பில் மங்களவார்த்தை செபம் சொல்லப்பட்டபோது ஒரு சிலருக்கு தம்மை வெளிப்படுத்தினார். பின்பு அவர் திருமறையை மறுதலிக்கும் ஒருவரால் காட்டிக்கொடுக்கப்பட்டு வம்மி மரத்தில் கட்டப்பட்டு கசையால் அடிக்கப்பட்டார். இம்மரம் பல கத்தோலிக்கரால் தரிசிக்கப்பட்டு வணங்கப்பட்டது. சிறிய ஆலயமோ தீக்கிரையாக்கப்பட்டு சுரூபமோ அதிசயத்தக்க வகையில் பாதுகாக்கப்பட்டது. இன்றும் தாண்டவன்வெளி ஆவயத்தில் ஒரு சுரூபம் உள்ளது. இச்சுரூபம் இன்றும்

ஆண்டவர் காணிக்கையாக ஒப்புக்கொடுக்கப்பட்ட தின மான மாசி மாதம் 2ஆம் திகதி பவனியாக எடுத்துச் செல்லப்படுவதுண்டு. அப்பகுதியில் வாழும் கத்தோலிக் கர் நிதி திரட்டி 1660ஆம் ஆண்டு கண்டி அரசனின் அனு மதியுடன் ஆலயத்தை மீண்டும் கட்டியெழுப்பினார்கள்.

இந்த மரபிற்கு சரித்திரபூர்வமான ஆதாரம் அதிகம் கொடுக்க முடியாது. ஏனெனில் இந்த ஆச்சரியப்படத் தக்க சம்பவங்களுக்கு எழுத்து முலமான ஆதாரங்கள் எம்மிடம் இல்லை. இருந்தும் திருகோணமலை மேற்றிரா சனம் ஸ்தாபிக்கப்பட்ட அதே வருடம் இறந்த அமலமரித் தியாகியும் மறைபரப்பு பணியாளருமான அருட்திரு. ஒகுஸ்ட் றோலியாக் அடிகள் கிழக்கு மாகாணத்திலும் அதிகமாக மட்டக்களப்பிலும்25 வருடமளவில் பணி புரிந் தது உண்மையே. அதே வேளை இந்த மரபு இன்னும் தாண்டவன்வெளி மக்கள் உள்ளத்திலும் சிந்தையிலும் ஆழமாக ஊன்றியிருக்கிறது. டச்சு அரசின் அட்டூழியத் தின் ஆரம்பத்திலே அருட்திரு. யோசப் வாஸ் அடிகள் இவ்விடத்தை தரிசித்ததும் ஆலயத்தையும் கத்தோலிக்க சமூகத்தையும் கண்டதும் நிச்சயமானதே. 1704இல் அருட்திரு. யோசப்வாஸ் அடிகள் மட்டக்களப்பிற்கும் ஏனைய கிழக்குப்பகுதிகளுக்கும் தனது இரண்டாவது பயணத்தை மேற்கொண்டார். 1705ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 9ம் திகதி அருட்திரு. யோசப் வாஸ் அடிகள் கோவாவி லிருந்து 8 மறைபரப்புப் பணியாளர்களைப் பெற்றார். இவர்களுள் அருட்திரு. யோசப் த மெனசஸ் வடகிழக் குப் பகுதிகளுக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டார். இதற்கு அடுத்த வருடம் அருட்திரு. மிகுல் டி மெல்லோ, அருட்திரு. யாகோமே கொன்சால் வேஸ் ஆகிய இரு குருக்களுடன் அருட்திரு. யோசப்வாஸ் அடிகள் புத் தளத்திலிருந்து கொட்டியாரத்திற்கு (மூதூர்) நடந்து வந் தார். அங்கு தங்கியிருந்த அருட் திரு. டி மெல்லோ திடீரென சுகவீனமுற்று இறந்தார். அப்போது கொட்டி யாரிலிருந்த ஆலயத்தில் இவர் அடக்கம் செய்யப்பட் டார். 1706இல் தியான சம்பிரதாய (Oratorian) அறிக் கையை ஆதாரமாக வைத்து அருட்திரு. வி ஞா பெரேரோ முழு நிகழ்ச்சியையும் சுவையாக விளக்குகின் றார். அதை இங்கு தருவது பொருத்தமாகவே இருக்கும். ஆரம்பத்தில் அருட்திரு. மிகுல் டி மெல்லோ அடிகளை மலைநாட்டுப் பகுதிகளில் வாழவைக்க அவரை கண்டி அரசுனுக்கு அறிமுகப்படுத்தி உத்தரவெடுக்க வேண்டு மென அருட்திரு. யோசப்வாஸ் அடிகள் விரும்பினார்.

ஆனால் கண்டி அரசனோடு ஏற்பட்ட தப்பெண்ணத்தால் அருட்திரு. யோசப் வாஸ் அடிகள் இத்திட்டத்தை பின் போட்டார். எனவே அருட்திரு. டி மெல்லோவை தன் கிழக்குப் பிரயாணத்தில் சேர்த்துக் கொள்ள முடிவு செய்தார். மாசி மாதத்தில் அருட்திரு. யோசப் வாஸ் அடிகள், அருட்திரு. மெல்லோ, அருட்திரு. யாகோமே கொன்சால்வேஸ் அடிகளுடன் புத்தளத்திலிருந்து கொட் டியாறுக்கு தனது பணத்தை மேற்கொண்டார். இது அடர்ந்த காட்டினூடாக செல்ல வேண்டிய இருவார பயணமாகும். ஒருநாட் பிரயாணத்தின் பின் அருட்திரு. யோசப் வாஸ் அடிகள் கடும் சுகவீனமுற்றார். வழிகாட்ட வந்திருந்திருந்த கொட்டியார மக்கள் கடினமான வாக னத்தைக் கொண்டு வந்திருந்தார்கள். வாகனம் மோசமா கக் குலுங்கியதால் சுகவீனமாக அருட்திரு. யோசப் வாஸ் அடிகள் நடந்து செல்லவே விரும்பினார். நோயா ளியை பராமரிப்பதற்காக அடிகள் சில நாட்கள் தங்கினா லும் இன்னும் நீண்ட பயணம் செல்ல வேண்டியிருப்ப தால் வைத்திய வசதிகள் கிடைக்கக் கூடிய புத்தளத் திற்கே திரும்பி வருவது நல்லதாக தோன்றியது. அருட திரு. யோசப் வாஸ் அடிகளின் சுகவீனத்தைப்பற்றி கேள் விப்பட்டதும் அருட்திரு. மெனெசஸ் அடிகள் அருட்திரு. யோசப் வாஸ் அடிகளைத் தேடி வந்து கொணடிருந்தார். ஆனால் அருட்திரு. யோசப் வாஸ் அடிகள் படிப்படியாக குணமடைந்ததும் பயணத்தைத் தொடர்ந்தாலும் திரும்பு வது நல்லது என குழுவிலுள்ளவர்கள் எண்ணினார்கள். எனவே இதற்கு ஒரு முடிவைத் தரும்படி அருட்திரு. கொன்சால்வெஸ் அடிகளிடம் அருட்திரு. யோசப் வாஸ் அடிகள் கேட்டுக்கொண்டார்.

கொட்டியார் மட்டக்களப்புப் பகுதிகள் பல காலமாக தரி சிக்கப்படாமல் இருப்பதாலும் அருட்திரு. கொன்சால் வெஸ், அருட்திரு. டி மெல்லோ அடிகள் இருவரும் நாட் டிற்கும் இடத்திற்கும் புதிது என்பதாலும் அருட்திரு. கொன்சால்வெஸ் அடிகள் அருட்திரு. டி மெல்லோ அடி களையும் தம்மோடு வந்து கொட்டியார் மக்களையும் ஆலோசித்து இறை அருளை நம்பி பிரயாணத்தை தொடர முடிவு செய்தார். எனவே அவர்கள் மெனசெஸ் அடிகளுக்கு செய்தி அனுப்பி விட்டு கட்டம் கட்டமாக தனது பிரயாணத்தைத் தொடர்ந்து பங்குனி மாத நடுப் பகுதியில் கொட்டியாரை அடைந்தார். கொட்டியாரில் இருந்த போது டி மெல்லோ அடிகள் திடீர் சுகவீனமுற்று இறந்தார். 1706இல் தியான சம்பிரதாய (Oratorian) அறிக்கையின்படி டி மெல்லோ அடிகளின் இறப்பைப் பற்றி "ஆசாரத்துக்குரிய அருட்திரு. யோசப் வாஸ்" எனும் தனது நூலில் திரு.எஸ். ஜி. பெரேரோ பின்வரு மாறு குறிப்பிடுகின்றார்.

திருச்சபை மேலும், அருட்திரு. யோசப் வாஸ் அடிகள் மேலும் தன்னிச்சையான பற்று வைத்திருந்த பிற சமய வாதி ஒருவர் கொடுத்த பூமியில் இருந்த கொட்டியார் ஆலயம் பெரிய கட்டடமாகும். "இறப்பும் அதற்கு ஆயத் தமாக இருக்கவேண்டிய அவசியமும்" எனும் பரிதான தலைப்பில் தினமும் திருப்பலி முடிய அருட்திரு. டி மெல்லோ அடிகள் மறையுரையாற்றி வந்தார். இதை ஒரு தடவை அருட்திரு. யோசப் வாஸ் அடிகள் அருட் திரு.கொன்சால்வெஸ் அடிகளுக்குக் குறிப்பிட்டார். 1706 ஆம் ஆண்டு பங்குனி மாதம்25ஆம் திகதி மரி அன்னை யின் மங்களவார்த்தை திருநாளன்று மாலை அருட்திரு. டி மெல்லோ அடிகள் வழமை போல் நீண்ட செபத்திற் குப்பின் நித்திரைக்குச் சென்றார். நடு இரவில் அவருக்கு அடிவயிற்றில் மோசமான வலி எடுக்க தான் இறக்கப் போவதாகச் சத்தமிட்டார்.

நோய் கடுமையாக இருந்தாலும் அவர் முழந்தாட் படியிட்டு நோயிற்பூசுதலைப்பெற்று இறுதி நற்கருணை பெற பீடத்திற்குச் சென்றார். அதன் பின் சிலுவையைக் கைகளில் பற்றியவாறு படுக்கையில் இருந்துகொண்டே விசுவாசம், நம்பிக்கை, பிறரன்பு, மனமாற்றம் போன்ற காரியங்களில் ஈடுபட்டார். தன்னைக் காண வந்த கத் தோலிக்கரிடம் கடவுளை அன்பு செய்யும்படி அறிவுரை கூறினார்.

முதல் வலி ஆரம்பமாகி 18 மணித்தியாலங்களின் பின் மார்ச் மாதம் 25ஆம் திகதி மரி அன்னையின் மங்கள வார்த்தை திருநாளன்று மாலை இறைவனோடு அமைதி யில் உரையாடும் போது அருட்திரு. டி மெல்லோ அடிகள் தன் ஆவியை இறைவனுக்குக் கையளித்தார். அவரது இறப்பால் வருந்திய இரு சிநேகிதர்களும் அவ ரது உடலை கல்லறையில் துயில் கொள்ள வைத்தார் கள். இக்கல்லறை இன்றும் கொட்டியார் கத்தோலிக் கரால் தரிசிக்கப்படுகிறது. அருட்திரு. யோசப் வாஸ் அடிகளும் அருட்திரு. கொன்சால்வெஸ் அடிகளும் கிழக்குக் கரையில் கத்தோலிக்கரை தரிசித்தவாறு தமது பயணத்தைத் தொடர்ந்து புத்தளம் சென்றடைந்தனர். கொட்டியார் (மூதூர்) பழைய ஆலயம் கட்டப்பட்ட

இடத்தில் ஒரு கல்லறை உள்ளது என்றும் அங்குதான் அருட்திரு. டி மெல்லோ அடிகள் புதைக்கப்பட்டார் என்றும் சொல்லப்படுகிறது. இன்றும் அருட்திரு. டி மெல் லோவின் பெயர் கொட்டியார் மக்களால் வெகுவாகவே மதிக்கப்பட்டு வருகிறது.

1707இல் அருட்திரு. பெற்றோ த சல்தினா அடிகள் (Fr. Pedro de Saldhana) கிழக்கு கரையோரத்திற்கு விஜயம் செய்தார். 1710இல் அருட்திரு. யோசப் வாஸ் அடிகள் கிழக்கிற்கு மீண்டுமொரு விஜயத்தை மேற்கொண்டார். ஆனால் கொட்டியாரில் சுகவீனமுற்று கண்டிக்கு திரும் பினார். அவர் கண்டியில் 1711ஆம் ஆண்டில் இறைபத மடைந்தார். அருட்திரு. யோசப் வாஸ் அடிகள் காலம் முதல் 1845 வரை கிழக்கு கரையோரம் தியான சம்பிர தாய குருக்களினால் பராமரிக்கப்பட்டு வந்தது. டச்சு அரசின் கொடுமைகள் இருந்தும் இங்கும் அங்குமாக பரவியிருந்த சிறிய குழுக்களின் விசுவாசத்தைப் பரா மரித்து வந்தார்கள்

முதல் 100 வருடமளவில் கத்தோலிக்கருக்கு எதிரான டச்சு அரசின் கொடுமைகள் தீவிரமாக இருந்தன. ஆனால் 1755ஆம் ஆண்டளவின் பின்பு கத்தோலிக் கரையும், கத்தோலிக்க குருக்களையும் கொடுமைப் படுத்தும் நிலை தளர்ந்தது. 1752ஆம் ஆண்டு ஆவணி மாதம் 21ஆம் திகதியிட்டு பட்டாவியா (Batavia) நகரில் டச்சுத் தலைமைக் காரியாலயத்திலிருந்து வெளியான இரகசியக் கடிதத்தில் ஆரம்பகால நிகழ்வுகளை புரிந்து கொள்ளலாம். அதன் விபரம் பின்வருமாறு. “பாப்பரசரின் விசாரணை செயல்முறை எமக்கு வெறுப்பூட்டுவதாக அமைந்தாலும் சீர்திருத்த சமயம் எமது பிரதேசங்களில் முன்னிலை வகிக்க வேண்டும் எனும் பாரபட்சமற்ற, தர்க்க ரீதியான எண்ணம் இருந்தாலும் நாம் பலவந்தப் படுத்தி அடக்கு முறைகளை முற்றிலும் தவிர்க்க வேண்டும்.

நாம் முகம்மதியர்க்கும் பிற மதத்தவர்க்கும் தமது சமயத்தைப் பின்பற்றவும், அமைதியாய் தமது கடவுளை ஆராதனை செய்யவும் சுதந்திரம் கொடுத்தது போல ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் அனுமதி கொடுக்க வேண் டும். குருட்டு றோமன் கத்தோலிக்க மத வைராக்கிய முள்ளவர்களைப் பற்றி உங்களுக்கு எழுதுவது முறை யெனக் கருதினோம். கம்பனியின் கட்டுப்பாட்டுப் பகுதிக் குள் பொதுசமய வழிபாடுகள் மேற்பார்வையிடப்பட வேண்டும் என்றும் பகிரங்க அறிக்கையின் (Placoats) முறைப்படி உரோமன் கத்தோலிக்கரின் கூட்டங்களோ, ஒன்றுகூடலோ தடை செய்யப்பட வேண்டும் என்றும் நாம் சிபாரிசு செய்கின்றோம். மறுபுறம் அவர்களது அமைதியான தனிமையான சமய கடமைகள் மன்னிக் கப்படவும், சகிக்கப்படவும் வேண்டும்.

எல்லாவற்றிலும், மிகைப்படுத்தாமல் பாரபட்சமற்ற முறையில் செய்யப்பட்டு, அளவுக்கதிகமான ஆர்வமு டன்“ செயற்படும் கிராம ஆசிரியர்களையும், சுதேச ஆலய அதிகாரிகளையும் கட்டுப்படுத்தி, முறைப்பாடுக ளுக்கும் தேவையற்ற நச்சரிப்புக்களுக்கும் இட்டுச் செல் லும் சகல காரணிகளையும் களைந்தெறிய ஒல்லாந்த மறைப் போதகர்களுக்கு ஆணித்தரமாக எடுத்துரைக் கவும்.”

பட்டாவியாவில் டச்சு அதிகாரிகளால் வெளியிடப்பட்ட இந்த உத்தரவு அறிக்கை “எதிர்காலத்தில் பின்பற்றப்பட வேண்டிய கொள்கை” பற்றி விளக்கம் கேட்ட இலங்கை ஆளுநர் ஜீ விறீலன்ட் (G. Vreelandt) என்பவரின் கடிதத் திற்குப் பதிலாகும். இதிலிருந்து கத்தோலிக்கரின் தனிப் பட்ட அமைதியான செயன்முறைகள் விடயமாக கொள்கை ரீதியில் டச்சு அரசு தனது எண்ணத்தை மாற்றியுள்ளதை நாம் உணரலாம். “உரோமன் கத் தோலிக்கர் மத சார் பான ஒன்றுகூடல் நடத்தாமலும் ஆலயங்கள் கட்டா மலும் பார்க்கும்படியும், பொது சமய வழிபாடு நடத்தும் எந்த குருவையும் கைது செய்யும் படியும் இதைத் தவிர தமது சொந்த சமய கடைமைகளை நிறைவேற்று வதற்கு உரோமன்கத்தோலிக்கர் தொந்தரவு செய்யப்படக் கூடாது” என்றும், கொழும்பில் நடைபெற்ற இலங்கை டச்சு அரசின் அரசியல் ஆலோசனைக்குழு தன் கீழ்மட்ட அதிகாரிகளுக்கு அறிவிக்க முடிவெடுத்தது.

வருடங்கள் செல்ல சட்டங்கள் மேலும் தளர்த்தப்பட்டன. உதாரணமாக, உரோமன் கத்தோலிக்கர் தமது திரு மணத்தை டச்சு சீர்திருத்த ஆலயங்களில் நடத்த கட்டா யப்படுத்தப்படக்கூடாது என்ற அவர்களது வேண்டு கோளை பரிசீலனைக்கு எடுப்பதற்கு 1762ஆம் ஆண்டு ஆடி 31ஆம் நாள் நடைபெற்ற இலங்கை டச்சு அரசின் அரசியல் ஆலோசனைக் கூட்டத்தில் முடிவெடுக்கப் பட்டது. இதன்படி நெதர்லாந்து நாட்டின் பொது நடை முறையை அடிப்படையாகக் கொண்டு எதிர்காலத்தில் கத்தோலிக்கர் இச்சுதந்திரத்தை அனுபவிக்கலாம் என்று ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. ஆயினும் இங்கும் நீதிமன்றம் இருக்கும் இடங்களில் ஆணையாளர் முன்னி லையில் அவர்களது திருமணங்கள் அந்த வழக்கு மன்றத்தில் நடைபெறும்.

1761 தை மாதத்தில் டச்சு அரசுக்கும் கண்டி அரசுக்கும் யுத்தம் ஆரம்பமானது. முதல் 2 வருடங்களும் யுத்த முனையில் டச்சு அரசு செயலிழந்தது. மேலும் டச்சு அரசுக்கெதிராக கண்டி அரசன் பிரித்தானியரின் உதவியை நாடினான். இவ்வேளையில்தான் கண்டி அரசனுக்கெதி ரான போரில் டச்சு அரசுக்கு ஒத்துழைக்க தியான சம்பிர தாய சபையினர் முன்வந்தனர். 17ம் திகதி மார்கழி மாதம் 1764 என்று திகதியிடப்பட்ட கடிதம் தியான சம்பிர தாய சபைத்தலைவரும் இலங்கைக் குருமுதல்வருமான அருட் திரு றபாயல் டொஸ் அஞ்சோஸ் (Fr Raphael Dos Anjos) அடிகளாலும் வேறு நான்கு குழுக்களாலும் கையொப்பமிடப்பட்டிருந்தது.

இந்த விண்ணப்பம் 1764 ம் ஆண்டு டிசம்பர் 20ம் திகதி கொழும்பில் நடைபெற்ற கண்டிக்கெதிரான போருக்கு விசேடமா தாபிக்கப்பட்ட டச்சு யுத்தக் குழுவின் கூட்டத் தில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

“இச்சமூகத்திலிருந்து 1000 பேரை ஏற்றுக்கொள்வதென் றும் இந்த மதிப்பு மிக்க பங்களிப்பை பயன்படுத்திக் கொள்வதென்றும் ஆலோசனையின் பின் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. இவற்றில் 200 பேர் ஆயுதங்களுடன் பணியாற்றுவர். ஏனையோர் இப்போது ஏற்பட்டுள்ள தேவையைப் பூர்த்தி செய்ய கூலிகளாகப் பயன்படுத்தப் படுவர். பிரச்சினைகளின் தொடக்க காலத்திலிருந்து இன்றுவரை இவர்கள் தொடர்ச்சியாக நிரூபிப்பதால் இவர்களது தேசபக்தியை நாம் நம்பலாம்.”

இதனைத் தொடர்ந்து கத்தோலிக்கத் திருச்சபைக்கு டச்சு அரசால் சலுகைகள் வழங்கப்பட்டது. “அருட் திரு மொகுல் பிரான்சிஸ்கோ அடிகள் டச்சு இராணுவத்திற்கு செய்த நன்மைகளுக்கு கொழும்பு ஆளுனர் நன்றிப் பெருக்குடன் பட்டாவியா கவுன்சிலுக்கு அவரைப் பற்றி பெரிதாகக் கூறினார். இதன் மூலம் கத்தோலிக்கர்

நேரடியாகவே திருமணம், திருமுழுக்கு போன்ற சடங்குகளை நிறைவேற்றலாம் என்றும் உள்நாட்டு மக்களின் உடையை மட்டும் பயன்படுத்த வேண்டு மென்ற சட்டம் நீங்கி ஐரோப்பியரைப் போல சாதாரண உடையிலும் செல்லலாம் என்றும், விரும்பிய நேரத்தில் நோயாளரையும், சிறையிலிருப்போரையும் சந்திக்கலாம் என்றும் பல சலுகைகளை எமது மறைப் பணிக்கு பெற் றுத்தந்தார்." இவ்வாறு 21 டிசம்பர் 1765 திகதியிடப்பட்ட தியான சம்பிரதாய அறிக்கை இலங்கையில் மறைப்பணி பற்றிக் குறிப்பிடுகின்றது.

1766ல் மேலும் பல சலுகைகள் டச்சு அரசால் வழங்கப்பட்டது. கத்தோலிக்கத் திருமணங்களுக்கு, இரண்டு சாட்சிகளின் கையொப்பங்களுடன் கத்தோலிக்க குருவால் வெளியிடப்படும் கல்யாணப் பதிவு போதுமான தாகும். இது மாற்றப்பட்டு கத்தோலிக்கக் குருவின் கையொப்பம் ஒன்றே போதுமானது என முடிவாகியது. "ஞானஸ்நான உறுதிப்பாடு கத்தோலிக்க குருவால் மட் டும் கையொப்பமிடப்பட்டு எழுத்து வடிவம் பெற்றதாக இருக்க வேண்டும். சட்டப்படி ஞானஸ்நானம் பெற்றார் என்று குருவானவர் தனது குருத்துவ வார்த்தையின் மேன்மையால் உறுதியளிக்க வேண்டும்."

1767ல் கத்தோலிக்க தமிழ் ஆசிரியர்கள் கத்தோலிக்கப் பிள்ளைகளுக்கு தமது சமயத்தைக் கற்பிக்க சுதந்திரம் கொடுக்கப்பட்டது. "எதிர் காலத்தில் உலகில் எவரிடமி ருந்தும் எதிர்ப்பு வராமல் உரோமன் கத்தோலிக்க சமயத்தை கடைபிடிக்கும் பாடசாலை ஆசிரியர்கள் அதே உரோமன் கத்தோலிக்க சமய கோட்பாடுகளை பிள்ளைகளுக்கு கற்பிக்கலாம் என்று முடிவெடுக்கப் பட்டது. மேலும் இது விடயமாக சீர்திருத்த சமயத்தைச் சேர்ந்த பாடசாலை ஆசிரியர்கள் அதிஉத்தம டிஸ் சாவே (Dissave) அவர்களால் குறிப்பிடப்பட வேண்டும் எனவும் தமது மாணவர்களைப் பயிற்றுவிக்க சுதந்திரம் பெற்ற வேறு பாடசாலை ஆசிரியர்கள் எதிர்காலத்தில் உரோமன் கத்தோலிக்கப் பாடசாலை ஆசிரியர்கள் விடயத்தில் தலையீடு செய்யக் கூடாது என்று கண்டிப் பாக எச்சரிக்கப்பட வேண்டும் எனவும் 5-10-1767ல் கொழும்பில் பாடசாலை நிருவாக சபையால் முடிவெடுக் கப்பட்டது. இந்த சலுகை அருட்திரு. கெட்டானோ நேரி (Fr. Gaetano Nary) அடிகளின் வேண்டுகோளின் பேரில் அளிக்கப்பட்டது.

டச்சு கம்பனிக்கு ஒத்துழைப்பதாக வாக்களித்தால் ஒரு குருவானவர் ஆலயத்தில் பகிரங்கமாக தங்கி மக்களுக் குப் பணி செய்ய 1774ல் உத்தரவு கொடுக்கப்பட்டது. இது விடயமாக 1774 ஏப்ரல் 9ல் கொழும்பில் நடை பெற்ற டச்சு அரசியல் கவுன்சில் கூட்டத்தில் பிரேரணை நிறைவேற்றப்பட்டது.

ஐக்கிய நெதர்லாந்து நாடுகளின் நலனுக்கும், வாட கைக்கு அமர்த்தப்பட்ட கிழக்கிந்திய கம்பனிக்கும், அதன் அரசுக்கும் நேரடியாகவோ மறைமுகமாகவோ பங்கம் விளைவிக்கும் விதத்தில் செயல்பட மாட்டேன் என்றும் எனது அறிவிற்குட்பட்ட விதத்தில் செயற்பட அனுமதிக்க மாட்டேன் என்றும் சத்திய வாக்குக் கொடுக்கும் இடத்தில் நான் எனது குருத்துவ வார்த்தை யின் மேன்மையால் பின்வருவனவற்றை பிரகடனம் செய்கிறேன்: அரசின் நலனுக்கு எதிரான எந்த கட்ட ளைக்கும் பணியமாட்டேன். எனது தலைவருக்குப் பணி வதைப் போல கிழக்கிந்திய கம்பனி அரசாங்கத்திற்கும் அரசு அதிகாரிகளுக்கும் எனது முழு சக்தியைப் பயன் படுத்தி எனது சபை அங்கத்தவர்களை கீழ்படிய வைப் பேன். எனது அறிக்கையினாலும் கையொப்பத்தினாலும் நான் இதை மீறும் பட்சத்தில் பொது அமைதியைக் குலைப்பவர்களுக்கு கொடுக்கப்படும் தண்டனையை ஏற்றுக்கொள்ளவும் வாக்களிக்கிறேன்.

இவ்வாறான அறிக்கையைக் கொடுத்ததும் டச்சுப் பகுதி யில் பணியாற்ற குருவிற்கு சான்றிதழ் அனுமதிக்கப் படுகிறது. மேலும் இவ்வுத்தரவுப் பத்திரத்தைப் பெறும் குருக்கள் ஒரு பங்கிலிருந்து இன்னொரு பங்கிற்கு மாற்ற லாகிச் செல்லும் போது இவ்வறிக்கையைப் புதுப்பிக்க அவருக்குக் கடமையும் இல்லை, தீவின் மக்களின் கட்டுப்பாடு இல்லாமலும் பணியாற்றலாம். இந்த அறிக் கையைக் கொடுத்த தியான சம்பிரதாய குருக்களில் திருகோணமலையைச் சேர்ந்த அருட்திரு. பொன வென் சர் மஸ்கரென்ஹாஸ்

(Fr. Bonaventura Mascarenhas) அடிகளும் ஒருவர். இவரது அறிக்கை 26-08-1774 திகதியிடப்பட்டதாகும்.

கத்தோலிக்கருக்கும் டச்சு சீர்திருத்தவாத சமய அங்கத் தவர்களுக்கும் இடையே திருமணத்தை அனுமதிக்கும் இன்னுமொரு தீர்மானம் 1785ல் இலங்கையில் டச்சு அரசியல் கவுன்சிலால் நிறைவேற்றப்பட்டது. "விசேட காரணங்களுக்காக தனிப்பட்ட நிகழ்வுகளில் கவுன் சிலின் தீர்மானத்திற்கொப்ப திருமண முன்னறிவிப்பு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும் எனும் நிபந்த னையுடன் உரோமன் கத்தோலிக்க ஆண்களும் சீர்திருத் தவாத விசுவாசப் பெண்களுக்கும் இடையே திருமணம் எதிர்காலத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது" என்று இத்தீர் மானம் கூறுகிறது.

இச்சட்டங்கள் டச்சு அரசு கத்தோலிக்கத் திருச்சபை யிலும் கத்தோலிக்கக் குருக்களிலும் கொண்டிருந்த ஒழுங்கு முறைகளையும் மனநிலையையும் சிறிது சிறிதாக தளர்த்தியுள்ளது என்பதை தெளிவாகக் காட்டு கிறது. திருச்சபை பாரிய சுதந்திரத்தையும் தனது பணியில் அமைதியையும் கண்டு மகிழ்ந்தது. டச்சு சமய குருக்களால் கடுமையான எதிர்ப்பு வந்தாலும் ஆரம்ப கால அடக்கு முறைகள் குறையத் தொடங்கியது. கத்தோலிக்க சமயத்திற்கு எதிராகவும் கத்தோலிக்கக் குருக்களுக்கு எதிராகவும் ஆரம்பத்தில் வெளியிடப்பட்ட பகிரங்க அறிக்கை தள்ளுபடி செய்யப்படாவிட்டாலும் பிற்பகுதியில் அவை கடைபிடிக்கப்படவில்லை.

1796ல் பிரித்தானியரின் வருகையுடன் அனைத்து அடக்கு முறைகளும் நிறுத்தப்பட்டு கத்தோலிக்கத் திருச்சபை இன்னும் அதிகமாக செழிக்கத்தொடங்கியது. தியான சம்பிரதாய குருவாகிய அருட்திரு. கு.றொட்றிகஸ் அடிக ளால் 1784ல் திருகோணமலையில் ஞானஸ்நானப் பதிவு ஆரம்பித்து வைக்கப்பட்டது. கத்தோலிக்க சமயத்திற்கு எதிராக இயற்றப்பட்ட தண்டனை பற்றிய சட்டங்கள் பிரித் தானிய அரசால் 1806ல் ரத்து செய்யப்பட்டு பயனற்ற தாக்கப்பட்டது. இதன்படி தொந்தரவு கொடுகாத பொருட் களை வைத்திருக்கவும் இலங்கையில் பிரித்தானியரின் குடியிருப்புக்கள் இருக்கும் இடங்களில் தமது சமயத் தைப் பின்பற்றுவதற்கு கத்தோலிக்கர் அனுமதிக்கப்பட் டனர். குடியியல் சலுகைகளுக்கும் அரச சடங்குகளுக்கும் அனுமதிக்கப்பட்டனர். 1795 முதல் நடைபெற்ற அனைத்து கத்தோலிக்கத் திருமணங்களும் சட்டபூர்வமாக்கப்பட் டது. இச்சலுகை 27-5-1806ல் இலங்கையில் கவுன்சிலின் செயலாளராகிய ஜோன் டீன் என்பவரால் பிரகடனப் படுத்தப்பட்டது.

1847ல் இலங்கை கொழும்பு, யாழ்ப்பாணம் என இரு மறைக்கோட்டங்களாக பிரிக்கப்பட்டது. கிழக்கு மாகாணம் யாழ்ப்பாணத்துக்கு கீழ் வந்தது. ஹொறேடியோ பெட்டா சினி (Horatoio Bettachiri) யாழ்ப்பாணத்தின் பதில் ஆயராக நியமிக்கப்பட்டார். அதிலிருந்து சில வருடங் களுக்கு தியான சம்பிரதாயக் குருக்கள் அமலமரித் தியாகிகள், இயேசு சபைக் குருக்கள், சுதேசக்குருக்கள் ஆகியோர் வடகிழக்கில் பல பகுதிகளிலும் ஒன்றாக பணியாற்றியதை அவதானிக்கலாம். திருகோணமலை யில் அருட்திரு. கிரேசியா அடிகளும் மட்டக்களப்பில் நல்ல சம்மனசு சுவாமி என்று மட்டக்களப்பு மக்களால் அழைக்கப்பட்ட இத்தாலிய சுதேச குருவாகிய அருட் திரு. விஸ்டரினி அடிகளும் இருந்தனர். பின்பு திரு கோணமலையில் அருட்திரு. லூயிஸ் மேரி கீட்டிங் அ.ம.தி அடிகளும் மட்டக்களப்பில் அருட்திரு. புருணி யே.ச அடிகளும் பணியாற்றினார். இவர்களுக்குப்பின் அருட்திரு. பிரெடிட்க் மவுசெல் அ.ம.தி அடிகளும் இருந் தனர். சிறிது சிறிதாக பணித்தளங்களில் இருந்து மற்றைய மறைபணியாளர்கள் குறைந்து போக அ.ம.தி மிஷனரிகளால் வடமறைக்கோட்டம் முழுவதும் பொறுப்பேற்கபட்பட்டது.

கிழக்கு கரையோர பகுதிகளுக்கு அ.ம.தி 1848 முதல் 1895 வரை 50 வருடங்களாக பொறுப்பாக இருந்தனர். இக்காலப் பகுதியில் கிழக்கில் மிஷனரிப் பணியில் சுமார் 35 அ.ம.தி அருட்திரு. பிரான்சிஸ் சேவியர், அருட்திரு. விஸ்டார்னி, அருட்திரு. வின்சன்ட் காசி னெல்லி, அருட்திரு. ஜேசி மோலா ஆகிய சுதேச குரக் களும் ஈடுபட்டனர். அமத திருகோணமலை மட்டக்க ளப்புப் பகுதிகளில் 25 வருடங்கள் பணியாற்றிய அருட் திரு. அகஸ்தே ருபியக் அடிகள் குறிப்பிடத்தக்கவர் ஆவர். இவர் மட்டக்களப்புப் பகுதியில்தான அதிக காலம் பணியாற்றினார். 24 வருடங்கள் திருகாண மலையில் அருட்திரு. லூயிஸ் மேரி கீட்டிங் அடிகள் இராணுவப் படைக்கு தனி பணிக்குருவாகவும் பங்குக் குருவாகவும் இப்பகுதியில் முதல் முதலாக ஆரம்பிக் கப்பட்ட ஆண்களுக்கான ஆங்கில பாடசாலையின் ஸ்தாபகராகவும் இயக்குனராகவும் பணியாற்றியுள்ளார். அருட்திரு. பிரெடிட்க் மவுசெல் அ.ம.தி (Fr. Fredrick Machen) அருட்திரு. அன்ரனி லானான்டி (Fr. Antny Larnandie) ஆகியோர் 9 வருடங்களாக கிழக்கு கரை யோர மக்களுக்கு பணியாற்றினார். அருட்திரு. அன்ரனி லானான்டி தனது முதிர்ந்த வயதில் 1931ல் யாழ்ப்பா ணத்தில் இறந்தார். இவர்கள் தவிர அருட்தந்தையர்கள் கொன்ஸ்டன்டைன் சௌனபெல் (Fr.Constantine Chansnave) எயிம்ஸ் டெல் பெகடன்ஸ் (Fr. Aimedelpechne), பௌசெக் (Fr, Poussecg), பிரான்சிஸ் சேவியர் ஈகிய சுதேச குருக்களும் பணியாற்றினார்கள்.

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாக கொண்ட அருட்திரு. பிரான்சிஸ் சேவியர் அடிகள் தனிச்சிறப்பு வாய்ந்த ஒரு சுதேச குருவாக செயற்பட்டார். இவரே புனித மிக்கேல் கல்லூரி, புனித சிசிலியா மகளிர் கல்லூரி, புனித மரியாள் தமிழ் பாடசாலை ஆகியவற்றின் ஸ்தாபகராவார்.

யாழ்ப்பாணத்தில் பெண்களுக்கு ஆங்கில பாடசா லையை ஆரம்பித்த திருமதி பினளகன் எனும் மூதாட்டி அதிவந். பெட்டாசினி ஆண்டகையின் அழைப்பின் பேரில் அப்பாடசாலையை திருக்குடும்ப கன்னியரிடம் ஒப் படைத்தபின் பின் வந்த ஆயர் அதிவந். செமெய்ரா (Semeira) ஆண்டகையின் உற்சாகத்தினால் ஆங்கிலத் திற்கு ஒன்றும் தமிழிற்கு ஒன்றுமாக பெண்களுக்கான இரு பாடசாலைகளை 1864ல் ஆரம்பித்தார். 1891ல் திருக்குடும்ப சபைக் கன்னியர் திருகோணமலைக்கு வரும் வரையில் நிர்வகித்தார்' என்று அருட்திரு. W.A டாங் (Lange) யே.ச. குறிப்பிடுகிறார்.

1858 வைகாசி மாதம் திருகோணமலையிலும் ஆடிமாதம் மட்டக்களப்பிலுமாக இரு மாபெரும் மறை அறிவிப்புப் போதனைகள் இடம்பெற்றது. ஆயர் அதிவந். செமெய்ரா ஆண்டகையினாலும் அருட்தந்தையர்கள் பௌசெக் (Fr, Poussecg), சௌனவெல் (Chounavel), பொஞ்சின் அகுஸ்தே ருபியக் (Augustre Ruffice) ஆகியோரால் நடத்தப்பட்டது.

இந்த மறையறிவிப்புப் பணியின் போது 20ம் திகதி மே மாதம் 1858ம் ஆண்டு யாழ்ப்பாண ஆயராக பொறுப் பேற்ற அருட்திரு. கிறிஸ்டோபர் பொஞ்சின் அடிகள் திரு கோணமலையில் அமலமரித் தியாகிகள் சபையில் தனது ஆடம்பர வாக்குத் தத்தத்தை மேற்கொண்டார்.

மதுரை இயேசு சபை மிஷனால் வட மறைக் கோட்டத் திற்கு கடனாகக் கொடுக்கப்பட்ட ஐந்து இயேசு சபைக் குருக்களுள் ஒருவராகிய அன்ரூ புரூனி எழுதிய கடிதம் ஒன்றில் அன்று கிறிஸ்தவரின் நிலையைப் படம் பிடித்துக் காட்டினார். 1849 ஆடி மாதம் 1ஆம் திகதி தனது தலை வருக்கு எழுதிய கடிதத்தில் இவ்வாறு குறிப்பிடுகினறார். "நான் ஆயர் பொட்டாசினி, அருட்திரு கீட்டிங் அடிகள் ஆகியோருடன் திருகோணமலையிலிருந்து புறப்பட்டேன். அருட்திரு கிறாசியா அடிகளும் சுதேச குருவாகிய அருட் திரு கசினெல்லி ஆகியோரின் பொறுப்பில் இருந்ததால் அனைத்தும் ஒழுங்கான முறையில் இருந்தன. அனைத்து கிறிஸ்தவரும் உறுதிப்பூசுதல் பெறவேண்டியி ருந்ததால் ஒப்புரவு, நற்கருணை போன்ற அருட்சாதனங் களை கொடுக்க வேண்டியிருந்தது.

கொட்டியாரில் சுமார் 200 கத்தோலிக்கர் இருந்தனர். சில வயது முதிர்ந்த பெண்களைத் தவிர யாரும் முதல் நன்மை பெற்றிருக்கவில்லை.

திருகோணமலைக்குச் சென்றபின் ஆயருடனும் அருட் திரு கசினெல்லி அடிகளுடனும் நான் மட்டக்களப்பிற்குச் சென்றேன். இங்கு அனைத்தும் ஒழுங்கு செய்யப்பட வேண்டியிருந்தது. எந்தவொரு ஆயரும் ஒருபோதும் இப் பகுதிக்கு விஜயம் செய்யவில்லை. அதுவரை இப்பகுதி கோவாவைச் சேர்ந்த குருக்களால் பராமரிக்கப்பட்டது. உண்மை எதுவெனில் மட்டக்களப்பில் முதல் நன்மை பெற்றோர் எண்ணிக்கை 100க்கும் குறைவானதே. ஆய ரின் வேண்டுகோளின்படி அருட்திரு. புரூனி அடிகள் மேலும் சில காலம் மட்டக்களப்பில் தங்கி மட்டக்களப் பின் தெற்குப் பகுதிக்கு அநேகமாக சொறிக்கல்மு னைக்கு விஜயம செய்தார். "மட்டக்களப்பின் வெகு தொலைவில் ஒரு கிராமத்திற்கு விஜயம் செய்தேன். அவர்களுக்கு பாவசங்கீர்த்தனம் கேட்டு நற்கருணை வழங்கி ஆயரால் எனக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரத் தின்பேரில் அவர்களுக்கு உறுதிப்பூசுதல் கொடுத்தேன். மரியன்னையின் விண்ணேற்பு விழாவன்று 250 விசுவாசி களுக்கு நற்கருணை கொடுத்துவிட்டு ஆவணி மாதம் 16ஆம் திகதி மட்டக்களப்பை விட்டுச் சென்றேன். சில காலத்தின் பின் அண்மையில் இலங்கை வந்த அமல மரித்தியாகிகள் சபையைச் சேர்ந்த அருட்திரு மௌசெல் அடிகள் மட்டக்களப்பில் எனது இடத்தை எடுத்தார்." இவ்வாறு அருட்திரு. புரூனி குறிப்பிட்டார்.

"யாழ்ப்பாண மேற்றிராசனத்தின் ஒரு பகுதியாகிய இப் பகுதி மனித மையப்பகுதியிலிருந்து எவ்வித கவர்ச்சியை

யும் கொடுக்காமல் கடின உழைப்பையும் வறுமையை யுமே வாக்குப் பண்ணியது. தம்மிடம் சில வளங்களை வைத்துக்கொண்டு எமது மறைமாவட்டத்தைப்போல பெரிய பகுதியில் மிகவும் வறிய சனத்தொகைக்கு இரண்டு அல்லது மூன்று குருக்களே பொறுப்பாக இருந்தனர். அந்த குறுகிய எண்ணிக்கையோடு ஐம்பது ஆண்டுக ளாகப் பொறுப்பேற்று ஆற்றிய சேவை ஆச்சரியப்படத் தக்க ஒன்றாகும். அவர்கள் கண்ணீராலும் நெற்றி வியர் வையாலும் விதைத்தது தமது பணிக்கு உறுதியையும் பயனையும் தந்தது.

தியான சம்பிரதாய சபையினரின் காலத்தில் திருகோண மலை மட்டக்களப்பு தவிர்ந்த பகுதிகளில் ஆறு மறை பரப்பு நிலையங்கள் இருந்தன. ஆனால், 1895இல் அமல மரித்தியாகிகள் கிழக்குக்கரையை விட்டுச் சென்றபோது பத்து ஆலயங்களையும், 6690 கத்தோலிக்கரையும் கொண்டதாக மறைபரப்பு நிலையங்கள் பதினேழாக அதிகரித்திருந்தன. மேலும் 750 மாணவரைக் கொண்ட 4 ஆங்கிலப் பாடசாலைகளும் 4 சுதேச மொழிப் பாட சாலைகளும் இயங்கின.

ஆகவே, திருகோணமலை மேற்றிராசனம் ஆரம்பிக்கப் பட்டபோது சீனா, மடகஸ்கார் போன்ற தேசங்களைப் போல இதனையும் கன்னி மறைப் பணியாக புதிய மிஷனரிமார் காணவில்லை. ஆனால், பல அடக்குமுறை களாலும், அட்டுழியங்களாலும் தாக்கப்பட்டுக் காயப் பட்டு பல ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட திருச்சபை யாக இது இருந்தது. இங்கும் அங்குமாக இன்னும் முன்னேறவேண்டிய நிலையில் சிறிய விசுவாசத்துடன் பழைய கிறிஸ்தவர் வாழ்ந்தனர்.

இயேசு சபையின் வருகையோடு கிழக்கு மாகாணத்தில் புதிய அத்தியாயம் ஆரம்பமானது. 1895இல் முதல் இயேசு சபையினர் திருகோணமலை மறைமாவட்டத் திற்கு வந்தபோது அவர்களுக்கு ஓரளவு ஆங்கில அறிவே இருந்தது. தமிழ் அறிவு சிறிதும் இருக்கவில்லை. இது பல காலங்களாக இவர்களின் பணிக்கும் உள்ளூர் மக்க ளுடனான தொடர்புக்கும் தடையாக இருந்தது. சந்தர்ப்ப வசமாக கண்டி குருமடத்தைச் சேர்ந்த அருட்திரு. லாமி (Larmy) சே.ச. அடிகளும், அந்தோனி என்று அழைக் கப்படுகின்ற குருமட மாணவனும் இவர்களுடன் இணைந்து கொண்டதால் இவர்கள் தம்மை ஸ்திரப்படுத்திக் கொள் ளவும் தமிழ் மொழியையும் மக்களின் வாழ்க்கை முறை யையும் கற்றுக் கொள்ளவும் உதவியாக இருந்தது. அருட்திரு லாமி சே.ச. தென்னிந்தியாவில் 20 வருடங்க ளாக மிஷனரியாகப் பணியாற்றியதால் தமிழ்மொழியை யும் தமிழர் கலாசாரத்தையும் நன்கு அறிந்திருந்தார். அந்தோனி புதிய மிஷனரிமாருக்கு மொழிபெயர்ப்பாள ராக இருந்தார்.

கோபமும், வெறுப்புணர்வும், பிரிவும், சண்டையும் மேலோங் கியிருந்த மட்டக்களப்பு கத்தோலிக்கரில் இரு சாதியைச் சேர்ந்த சமூகத்தவரை புதிய மிஷனரிமார் முதலில் எதிர் கொண்டனர்.

இந்நேரத்தில் மீனவர் சமூகத்திற்கு (புனித அந் தோனியார்) ஒன்றும், வெள்ளாளர் சாதியினர் பறங்கியர், சிகை அலங்காரம் செய்யும் சமூகத்தவருக்கு (புனித மரியாள்) ஒன்றுமாக மட்டக்களப்பில் இரு ஆலயங்கள் இருந்தன. மட்டக்களப்பில் என்ன எதிர்பார்க்க வேண்டு மென்று தனது வரவேற்புக் கடிதத்தில் திருகோணமலை அப்போஸ்தலிக்க நிாவாகியாக நியமனம் பெற்ற ஆயர் வன் றீத் ஆண்டகைக்கு யாழ்ப்பாணம் மறைமாவட்ட ஆயர் யூலியன் ஆண்டகை அவர்கள் கூறுகிறார். " குருவானவர் எந்த ஆலயத்தில் இருக்கவேண்டுமெனறு கடந்த ஆறுமாதங்களாகப் போராடும் இரு சமூகங்களுக் குச் சொந்தமான இரு ஆலயங்கள் அங்கு உள்ளன. இயேசு சபைக் குருக்கள் வரும்பாது தமது ஆலயத் திற்கு குருவானவர் வரவேண்டுமென்று இரு சமூகத்த வரும் எதிர்பார்த்தனர். துரதிர்ஷ்டவசமாக புனித அந் தோனியார் ஆலயமே தகுந்ததாக அமைந்தது. குரக் கள் ஒரு முடிவுக்கு வந்து பாதுகாப்பாகச் செல்ல வேண் டும். உங்களுக்கு பிரச்சினை வரலாம் என்று எதிர்பார்க் கின்றேன்." இவவாறு யாழ் ஆயர் குறிப்பிட்டார்.

மட்டக்களப்பில் கத்தோலிக்கரிடையே அமைதியை ஏற்ப டுத்துவதற்காக ஆயர் யூலியன் ஆண்டகை ஓர் ஒப்பந்தத் தைச் செய்தார். இதன்படி, ஒவ்வோர் ஆலயத்திலும் ஆறு மாதங்களுக்கு அனைத்து முக்கிய வழிபாடுகளும் நடைபெற வேண்டும். இக்காலத்தில் மற்ற ஆலயத்தில் கிழமை நாட்களில் திருப்பலியும், ஞானஸ்நானம், திரு மணம், அடக்கச் சடங்குகளும் நடைபெறலாம். இருப்பி னும் இரண்டு சமூகங்களைச் சேர்த்தாலும் இதில் அரை வாசி மக்களைக்கூட எந்த ஓர் ஆலயமும் அடக்கத்தக்க அளவிற்கு பெரிய ஆலயங்களாக இவை இருக்க வில்லை.

இந்த சிக்கலான சூழ்நிலையால் இயேசுசபைக் குரக் கள் வந்தபோது அவர்கள் சுற்றுப்புறத்திலுள்ள ஓர் ஆலயத்தில் தங்கி மறுநாள் மட்டக்களப்பில் நுழைய ஆயத்தம் செய்தனர். இது விடயமாக ஒரு செய்தி அனுப் பப்பட்டது. எனவே, மக்கள் புதிய மிஷனரிமாரை வரவேற்க ஆயத்தம் செய்தனர்.

"நவம்பர் மாதம் 24ஆம் திகதி மாலை 4.00 மணிக்கு அருட்திரு றோக்ஸ் எம்மை கிராமத்தின் வாயிலுக்கு அழைத்து வந்தார். அருட்தந்தையர் மொறீல், லாமி ஆகியோர் புனித மரியாள் ஆலயத்தை நோக்கி செல்ல அருட்தந்தை எவறாட் அடிகளும். குருமட மாணவன் அன்டனியும் புனித அந்தோனியார் ஆலயம் நோக்கிச் சென்றனர். உடனேயே இரு பகுதியிலிருந்தும் மகிழ்ச்சிக் குரல்கள் எழ, "எமது குருக்கள் வந்திருக்கிறார்கள்" என்று இரு குழுக்களும் ஆர்ப்பரித்தனர். இதன்மூலம் முதல் மோதல் தவிர்க்கப்பட்டது." இவ்வாறு அருட்திரு W.A. லாங் குறிப்பிட்டார்.

ஒவ்வோர் ஆலயத்திற்கும் குருமனை இருந்தது. ஆனால் அவை அளவில் சிறியதாக இருந்தன. இதனால் குருக்கள் இரு குருமனைகளிலும் தங்கி தமத வசதிக் கேற்ப ஏதாவதொரு குருமனையில் உணவருந்தினர். இவ்வாலயங்களைப் பொறுப்பேற்ற பின் அநேகமான மேய்ப்புப் பணி வேலைகளை அருட்திரு லாமியிடம் கொடுத்து விட்டு தமிழ்மொழியைக் கற்றறிவதில் ஆர்வ மாக ஈடுபட்டனர்.

சமய சம்பந்தமான அனைத்துக் காரியங்களிலும் மக்களின் போக்கிற்கும் விருப்பிற்கும் விட்டுவிடாமலும் சாதி சம்பந்தமான விடயங்களில் சம்பந்தப்படுவதில்லை என்றும் புதிய மிஷனரிகள் தீர்மானித்தனர். ஆரம்பத்தில் சில நாட்களாக குருமனையைத் தமது கட்டுப்பாட்டிற் குள் வைக்கவேண்டும் என்பதற்காக யார் குருக்களுக்கு உணவு கொடுப்பது எனும் போட்டி இரு சமூகத்தவருக்கு மிடையில் இருந்தது. இதை உணர்ந்த குருக்கள் உட னேயே வெளியே இருந்து உணவு பெறுவதை நிறுத்தி குருமனையிலேயே உணவைத் தயாரித்தனர்.

திருப்பலியில், அதுவும் பெரிய திருவிழா நாட்களிலும் ஞாயிறு தினங்களிலும் நற்கருணை பெறுவோர் மிகவும் குறைவாக இருதடதவை புதிய மிஷனரிமார்களை ஆச்சரியப்பட வைத்தது. மட்டக்களப்பில் ஒப்புக்கொடுக்கப்பட்ட முதல் ஞாயிறு திருப்பலியில் புனித மரியாள் ஆலயத்தில் 8 பேரும், புனித அந்தோனியார் ஆலயத்தில் நான்கு பேருமே நற்கருணை பெற்றனர். 1896ஆம ஆண்டு தை 6ஆம் திகதியில் நடைபெற்ற திருப்பலியில் 300 பேர் கலந்துகொண்டாலும் மூவரே நற்கருணை பெற்றனர். 16 வயதை அல்லது அதற்கு மேற்பட்ட வயதையுடைய வாலிபர் கூட முதல்நன்மை பெறாமலும் பாவசங்கீர்த்தனம் செய்யாமலும் உள்ளார்கள் என்று புதிய மிஷனரிகள் காலப்போக்கில் அறிந்து கொண்டார்கள்.

கடைசிக் காலத்தில் இப்பகுதியைப் பராமரித்த கோவாவைச் சேர்ந்த குருக்களின் மனநிலையால்தான் இந்நிலை வந்தது என்று மேலும் விசாரணைகளில் தெரிய வந்தது. ஒரு வருடத்திற்கு ஒன்று அல்லது இரண்டு தடவைகள் நற்கருணை பெற்றால் போதும் என்பதால் மக்கள் அடிக்கடி நற்கருணை பெறுவதைக் கட்டுப்படுத்தியதாக மட்டக்களப்பில் பணிபுரிந்த கோவாவைச் சேர்ந்த குருவே தன்னிடம் கூறியதாக மட்டக்களப்பில் பணிபுரிந்து கல்கத்தாவிற்குச் சென்ற அருட்திரு புறூனி சே.ச 1898ஆம் ஆண்டு யூலை மாதமளவில் அருட்திரு மொறீல் அடிகளுக்கு எழுதும்போது குறிப்பிட்டார். மக்கள் மத்தியில் இந்நிலையை மாற்ற அருட்திரு லாமி ஆண்களுக்கும் பெண்களுக்கும் மதியவேளை மறைக்கல்வி வகுப்புக்களை ஒழுங்கு செய்து செபத்தின் முக்கியத்துவத்தையும், நற்கருணை, பாவசங்கீர்த்தனம் அடிககடி பெறுவதின் முக்கியத்துவத்தையும் விளக்கினார்.

திருமணமாகாமல் கூடி வாழ்வதும், திருச்சபை முறைப்படி திருமணமாகாமல் இருப்பதும் மிஷனரிமார்கள் எதிர்கொண்ட இன்னுமொரு பிரச்சினையாகும். இதன் அடிப்படைக் காரணங்களை ஆராய்ந்தபோது பின்வரும் விடயங்கள் வெளிவந்தன:

1. தமது மகளுக்கு வரன் கிடைக்க வேண்டுமென்பதற்காக அவர்கள் விரும்பி தெரிந்த வாலிபனுடன் கூடி வாழ அனுமதித்தனர்.
2. வேற்று இனத்தவரைத் திருமணம் செய்ய சமூகம் அனுமதிக்கவில்லை. இரத்த உறவில் இரண்டாம் படிக்கு இலகுவில் அனுமதி பெற மிஷனரிகள் பல இன்னல்களை அனுபவித்தனர்.
3. மீனவர் சமூகத்து ஆண்கள் திருமணத்திற்கு முன்பாகவே தமது எதிர்கால மனைவியரின் கற்பைச் சோதிக்கும் பழக்கம் இருந்தது.
4. பல சமூகப் பழக்கங்கள், சிலரால் சந்திக்க முடியாத திருமணச் செலவுகள் என்பன தடையாயின.
5. முதல் மிஷனரிகளால் அடையாளம் காண முடியாததால் நடவடிக்கை எடுக்கப்படாமல் பல முறை கேடானவர்கள் நற்கருணை பெற்றனர்.
6. முதல் மிஷனரிகள் அடிக்கடி பிரயாணம் செய்ததால் பாவசங்கீர்த்தனத்திற்கு குறிப்பிட்ட நாளும் குறிப்பிட்ட நேரமும் நடைமுறைக்கு வரவில்லை.
7. இளையவர் தமது சாதிக்கு வெளியே திருமணம் செய்ய விரும்புவதால் ஆடம்பரங்கள், சடங்கு முறைகள் இல்லாமல் தாம் விரும்பிய பெண்ணைத் திருமணம் செய்வதுதான் ஒரே வழியாகத் தோன்றியது.

இப்படிப்பட்ட துஷ்பிரயோகங்களை எதிர்த்தும், ஒழுங்கற்ற ஒன்றுகூடலை எதிர்த்தும் குருக்கள் கடுமையான பிரசாரம் செய்தனர்.எதிர்கால சந்ததியினரை இப்படிப்பட்ட சூழ்நிலையிலிருந்து தவிர்ப்பதற்காக திருமணமாகாமல் கூடிவாழ்பவருக்கு பொதுத் தண்டனையை கட்டாயப்படுத்தியும் சில நேரங்களில் ஆலயத்தில் அடக்கச் சடங்குகளை மறுத்தும் வந்தனர்.

மட்டக்களப்பைப் போலல்லாது திருகோணமலையில் தற்போதைக்காவது அருட்திரு ஹெய்ம் பேகர் அடிகள் சாதிப் பிரச்சனையிலிருந்து விடுபட்டார். இப்பகுதி மக்கள் மத்தியில் திருகோணமலைக் கோட்டைக் காவல் படை ஓரளவு ஆதிக்கம் கொண்டிருந்ததால் சாதி வேறுபாடுகள் முக்கியத்துவம் பெறவில்லை. அருட்திரு ஹெய்ம் பேகர் வந்திறங்கியதும் பணியை முடித்து வெளியேறும் அருட்திரு.வில்லியம் ஓவன் அ.ம.தி. திருகோணமலையின் சிவில் மற்றும் ஆன்மீக நிலைபற்றி தெளிவாக்கினார். அருட்திரு ஹெய்ம்பேகர் அடிகளுக்கு சிறிதும் தமிழ் அறிவு இல்லாததாலும் மிகக் குறைந்தளவு மட்டுமே ஆங்கில அறிவு இருந்ததாலும் பிரித்தானிய கோட்டையில் இருக்கும் கத்தோலிக்க படைவீரரின் ஆன்மீக பணியிலும் ஈடுபடவேண்டுமாதலால் உடனேயே தமிழ் மொழியை கற்கவும் ஆங்கில அறிவை வளர்க்கவும் தொடங்கினார். அமலமரித்தியாகிகள் திருகோணமலையை விட்டு வெளியேறியபின் பாடசாலையை பராமரித்து வந்த திருக்குடும்ப கன்னியர் விரைவில் திருகோணமலையை விட்டுச் செல்வதற்கு வேண்டிய ஆயத்தங்களை செய்தனர். இவர்களால் பயன்படுத்தப்பட்ட இல்லத்தையும் காணியையும் வாங்கும்படி யாழ் ஆயர் அதிவந். யூலியன் ஆண்டகை அதிவந் வனறீத் ஆண்டகைக்கு அறிவுரை கூறினார். அருட்திரு. ஹெய்ம் பேகரிடம் முழு நிர்வாகத்தையும் கொடுத்து விட்டு கிறிஸ்மஸ் முடிந்தவுடன் அருட் திரு.ஓவன் அடிகள் திருகோணமலையை விட்டு புறப்பட்டார். மட்டக்களப்பில் 1896 ஆண்டு தை மாதமளவில் 10, 7, 6 வயதுடைய மூன்று மாணவர்களுடன் அருட்திரு மொறீல் அடிகள் புனித வளனாருக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஒரு அனாதைகள் இல்லத்தை ஆரம்பித்தார். இவர்களை புனித மரியாள் முகவர் இல்லத்தில் வைத்திருந்தார். பின் மேலும் இன்னொரு மாணவர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்.

1896 மாசி மாதம் 15ம் திகதி சகோதரர் றைட் சே.ச. (Bro Wright s.j) மட்டக்களப்பை வந்தடைந்ததும் அருட்திரு ஹெய்ம்பேகர் அடிகளுக்கு உதவுமுகமாக திருகோணமலைக்கு அனுப்பப்பட்டார். சகோதரர் றைட் ஒரு ஆங்கிலேயர் என்பதால் பிரித்தானிய கோட்டையில் இராணுவ வீரர் கழகத்திற்கும் கடற்படை கழகத்திற்கும் பொறுப்பாளராக நியமனம் பெற்றார்.

கத்தோலிக்கரையும் அவர்களது நிலமையையும் அறிவதற்காக மட்டக்களப்பில் அருட்திரு லாமி அடிகள் குடிமதிப்பு புள்ளி விபரங்களை திரட்டத் தொடங்கினார். அவர் விபரங்களை திரட்டி முடிக்காததால் அப்பணியை அருட்திரு எவ்றாட் அடிகள் பொறுப்பேற்றார். இது ஒரு கடினமான வேலையாகவும் பல ஏடுகளைக் கொண்டதாகவும் அமைந்தது. இவ் விபரத்திரட்டு மீனவர் சமூகத்திற்கு ஒன்றும், பறங்கியர், வெள்ளாளர் சமூகத்தவர்க்கு ஒன்றும் சிகை அலங்காரம் செய்வோருக்கு ஒன்னொன்றுமாக சாதி அடிப்படையில் அமைந்திருந்தது.

இந்துக்களைப் போல கத்தோலிக்கரும் பசாசிற்கு படைக்க கோழிகளை கொடுத்தோ அல்லது அதற்குரிய பணத்தை கொடுத்தோ சுகவீன காலத்தில் சூனியம் செய்வதிலும் தமது எதிரிகளுக்கு எதிராக தீய சக்திகளை பயன்படுத்துவதிலும் ஈடுபடுவதை மிஷனரி குருக்கள் அவதானித்தனர். மட்டக்களப்பிற்கு அருகேயுள்ள வீச்சுக்கல்முனை மட்டக்களப்பிற்கு 29 மைல் தெற்கே

யுள்ள சொறிக்கல்முனை ஆகிய இரு இடங்களும் விசேடமாக இப் பயிற்சிக்கு பெயர் பெற்றன. இப் பயிற்சிக்கு இடம் கொடுப்போருக்கு அருட்சாதனங்களையும் கிறிஸ்தவ அடக்க சடங்குகளையும் மறுப்பதன் மூலமாக கிறிஸ்தவ பண்புக்கு மாறான சடங்குகளுக்கு எதிராக மிஷனரி குருக்கள் நடவடிக்கை எடுத்தனர்.

போக்குவரத்து வசதிகள் இக்காலத்தில் மிகவும் பின் தங்கிய நிலையில் இருந்தன. 24 மைல்களை கடப்பதற்கு ஒருவர் கப்பலிலோ, மரக்கலத்திலோ, மாட்டு வண்டியிலோ, செல்ல சில வேளைகளில் ஏழு மணி நேரமும் பயணம் செய்ய வேண்டியுள்ளது. பரந்து வாழும் கத்தோலிக்கரை சந்திப்பதற்கு குருக்கள் இரு வழிகளையும் பயன்படுத்தினர்.

குருக்கள் பணியேற்று 10 வாரங்களுக்குள் குருவாக வேண்டும் என்று விருப்பம் தெரிவித்து மூன்று விண்ணப்பங்கள் வந்ததையிட்டு பெருமகிழ்ச்சியடைந்தனர். ஜோன். லாசறஸ். மாட்டின் ஆகிய மூன்று இளைஞர்கள் குருக்களிடம் சென்று தமது விருப்பத்தை தெரிவித்தனர். இவர்களின் நோக்கம், தகுதி என்பவற்றை அதிவந். வன்றீத் ஆண்டகையால் அனுப்பப்பட்ட கேள்விக் கொத்தின் மூலம் அறிந்தபின் அதே வருடம் மார்ச் மாதம் கண்டி பாப்பரசர் குருமடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இம்மூவருள் மாட்டின் சில நாட்களுள் குருமடத்தை விட்டு விலகினார். ஜோன் நிலைத்திருந்தாலும் குருமட மாணவனாகவே இறைபதமடைந்தார். லாசறஸ் இறுதிவரை நிலைத்திருந்து மறைமாவட்டத்தின் முதல் சுதேச குருவானார். சில நாட்களின் பின் நான்காவது விண்ணப்பதாரராகிய மாட்டினின் சகோதரர் துறவறத்தில் சேர்ந்து இறுதி வரை நிலைத்திருந்தார்.

1896ம் ஆண்டு ஆடி மாதம் 4ம் திகதி இந்தியாவில் கோட்டயத்தில் முன்னைநாள் மறைபணியின் பதில் குருவும் மடகஸ்கார் இணை ஆயருமான அதிவந். சார்ள்ஸ் லவிஞ் சே.ச. திருகோணமலையின் ஆயராக நியமனம் பெற்றது அறிவிக்கப்பட்டது. அப்போது அவர் பிரான்ஸ் தேசத்திலே உடல் நலக் குறைவால் வைத்தியம் பார்த்ததால் விரைவில் மேற்றிராசனத்திற்கு வருவார் என்று எதிர்பார்க்கவில்லை.

1896 புரட்டாதி 11ம் திகதி ஆயர் அதிவந்.சார்ள்ஸ் லவிஞ் ஆண்டைகையோடு மலபாரில் பணிபுரிந்த அருட்திரு.சார்ள்ஸ் பொனல் சே.ச. அடிகள் மட்டக்களப்பிற்கு வந்து சேர்ந்தார். கார்த்திகை 7ம் திகதி புதிய மேற்றிராசனத்தில் பணியாற்ற குருமுதல்வர் அருட்திரு. சார்ள்ஸ் அல்பிறட் நோயர், அருட்திரு ஹென்றி பூரி, அருட்திரு.ரெமி ஆகியோர் வந்தடைந்தனர்.

வந்தடைந்ததும் யேசுசபையின் புதிய அதிபர் மட்டக்களப்பில் ஒரு ஆரம்ப கூட்டத்திற்காக குருக்களை அழைத்தார். “இது 200 வருடங்களுக்கு முன் அருட்திரு. யோசப்வாஸ் காலத்தில் புதிதாக பணிபுரிய வந்திறங்கிய குருக்களின் சிறிய குழுவைப் போலிருந்தது” என்று அருட்திரு.லாங் குறிப்பிட்டார். அருட்திரு ஹெய்ம் பேகர் திருகோணமலையிலிருந்து வந்திருந்தார். இவ் ஒன்றுகூடலை இயேசுசபை குறிப்பேடு இயேசுசபை மேலாளரின் முயற்சியால் ஆழமான உரையாடல் மூலமாக இயேசுசபையின் உணர்வை புதுப்பிக்கவும், கீழ்ப்படிதல், ஏழ்மை போன்ற உணர்வை ஏற்படுத்தவும் முடிந்தது என்று குறிப்பிடுகின்றது.

இவ்வேளையில் அனைத்து மிஷனறிகளை தமது பணியில் உற்சாகப்படுத்தியும் இயேசுசபையின் புதிய மேலாளராகிய அருட்திரு.நோயரை புதிய பணியில் வரவேற்றும் அவருக்கு திருத்தந்தையின் பிரதிநிதி முனிசிரேஸ்டர் செலஸ்கி கடிதம் எழுதினார். “இலங்கையில் உமது வருகை பற்றி அறிந்து மகிழ்ச்சியடைந்தேன். உமது மாகாணத்திலிருந்து வந்த குருக்கள் மிகவும் ஆர்வத்துடன் பணிபுரிந்த திருகோணமலை மிஷனைப் பற்றி குறிப்பிடாமல் இருக்க முடியாது. இது ஆரம்ப பணித்தளமாகவும் நிறைவைக் கொடுக்கக் கூடிய பணித்தளமாகவும் உள்ளது. ஆரம்ப வருடங்களில் பெரிய பலனை எதிர் பார்க்க முடியாது. ஒரு புதிய பணித்தளம் ஆரம்பிக்கப்பட்டால் முதலில் அது கஸ்டத்தைக் கொடுக்கும். அறுவடை பிந்தியே வரும். பிறமதத்தவர் மத்தியில் மிஷனரிகள் பிரபல்யம் அடையும் போதே உண்மையான செல்வாக்கு ஆரம்பமாகிறது. அதுவரை அவர்களது பிள்ளைகளை பராமரிப்பதன் மூலம் மதிப்பைப் பெறலாம்” என்று முனிசிரேஸ்டர் செலஸ்கி குறிப்பிட்டார்.

புதிய மிஷனரிமார் வந்து ஆறு மாதங்களுக்குள் அருட்திரு.ரெமி அடிகள் இறைபதமடைந்தார். திருகோணமலை பணித்தலத்தில் காலமான முதல் பிரெஞ்சு குரு இவராவார். 1897 மே மாதம் 17ம் நாள் இவர் இறைபதமடைந்தார். இதற்கு முன்பாக இவர் தன்னாமுனையில் சிறுவரையும், வளர்ந்தோரையும் முதல் நன்மை பெற ஆயத்தம் செய்தார். அதன் பின் இவருக்கு மலேரியாக் காய்ச்சல் பிடித்தது. மனத்தடுமாற்ற நிலையிலும் மயக்க நிலையிலும் இருந்த இவருக்கு அருட்திரு. எல்ராட் அடிகள் நோயில் பூசுதல் அருட்சாதனத்தை வழங்கினார். பதினைந்து நிமிடத்துக்குள் “எனக்கு எந்த விருப்பமும் இல்லை, நான் எதற்கும் ஆயத்தம்” என்று அடிக்கடி கூறும் இப்புனித குரு இறைபதமடைந்தார். இவர் புனித அந்தோனியார் ஆலயத்திற்குப் பின்னால் அடக்கம் செய்யப்பட்டார். ஒரு வாரத்தின் பின் புதிய பணித்தளத்தில் சேர்ந்துகொள்ள மதுரை பணித்தளத்திலிருந்து அருட்திரு.கபிர்யோ் அடிகள் வந்தடைந்தார். அடிக்கடி நற்கருணை பெறும் பழக்கம் மக்கள் மத்தியில் இல்லாததால் இப்பழக்கத்தையும் இதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்த குருக்கள் விரும்பினார்.

எனவே ஆண்டவரின் விண்ணேற்பு நாளை முதல் நன்மை கொடுக்கும் நாளாக மாற்றினர். இந்நிகழ்ச்சியை புனிதமான மறக்க முடியாத ஒன்றாக மாற்ற வேண்டிய ஒழுங்குகளை செய்தனர். பிள்ளைகளுக்கும் பெற்றோருக்கும் நேரகாலத்தோடே வகுப்புக்களும் ஆயத்தங்களும் செய்யப்பட்டன. “கொடிகள் ஏந்திய வண்ணமாக புனித மரியாள் ஆலயத்திலிருந்து புனித அந்தோனியார் ஆலயம்வரை பவனியும் அதில் பிள்ளைகள் பூக்களையும் மெழுகுதிரிகளையும் எந்திய வண்ணம் செல்ல அழகாக ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. உள்ளே முதல் நன்மை பெறுவோர் விசேட இடத்தில் அமர பீடத்திலே முதல் நன்மை வழங்கப்பட்டது. அன்று மாலை இவர்கள் அனைவரும் ஞானஸ்நான வாக்குறுதி புதுப்பித்தலுடன் ஆடம்பரமாக ஆண்டவருக்கும் மரியன்னைக்கும் அர்ப்பணிக்கப்பட்டார்கள்.

காலப்போக்கில் முதல்நன்மை பெறும் சடங்கு மறைமாவட்டம் முழுவதும் வருடத்தில் நடைபெறும் மிக முக்கிய நிகழ்ச்சிகளில் ஒன்றாக மாறியது. பல துஷ்பிரயோகங்களும் நடைபெற்றன. ஆன்ம ரீதியான கண்ணோட்டம் குறைந்து தமது பணத்தையும் அந்தஸ்தையும் காட்டும் சந்தர்ப்பமாக இவ்விழா மாறியது. விலையுயர்ந்த ஆடைகள், வாகனத்திதல் பவனி, வீடுகளில் ஆடம்பர விருந்து, பாண்ட் வாத்தியம், புகைப்படங்கள் போன்றன பயன்படுத்தப்பட்டதால் ஏழைகள் பாதிக்கப்பட்டனர்.

1897ம் ஆண்டு ஆடி மாதம் ஆயர் வன்றீத் ஆண்டகை வருகைதந்த போது யார் ஆயரை வரவேற்பது என்பதை யொட்டி புனித மரியாள் ஆலய சமூகத்தவருக்கும், புனித அந்தோனியார் ஆலய சமூகத்தவருக்குமிடையே கருத்துவேறுபாடு ஏற்பட்டது. இம்முறை புனித அந்தோனி யார் ஆலய மக்களே ஆயரை வரவேற்கவேண்டுமென குருமுதல்வர் அருட்திரு.றோயர் தீர்மானித்தார். ஆனால் புனித மரியாள் ஆலய மக்களோ இம்முடிவுக்கு சம்மதிக் காமல் வரவேற்பை பகிஷ்கரித்தார்கள். புனித அந்தோனி யாார் ஆலயதில் நடைபெற்ற திருப்பலியில் 180 பேர் உறுதிப்பூசுதல் பெற்றனர். புனித மரியாள் ஆலய பகுதி யிலிருந்து ஒரு சிலரே பங்குபற்றினர். பறங்கியர் சமூகத் தவர் யாரும் வரவில்லை. சில நாட்களின் பின் தன்னா முனை ஆலயத்தில் உறுதிப்பூசுதல் அருட்சாதனம் வழங்கப்பட்டது. இதற்கு பறங்கியர் சமூகத்தவர் 142 பேரை உறுதிப்பூசுதல் பெறுவதற்காக அழைத்து வந் திருந்தனர்.

புனித மரியாள், புனித அந்தோனியார் சமூகத்தவர்க் கிடையே பல வருடங்களாக பிரச்சினை இருந்து வந்தது. இது குருக்களுக்கு மனவேதனையைக் கொடுத்துள்ளது. 1895ல் இயேசுசபை மிஷனரிகள் மட்டக்களப்பு புளியந்தீ விற்கு வந்தபோது இரு ஆலயங்களைக் கண்டனர். மீனவர் சமூகத்தவர்க்கென புனித அந்தோனியார் ஆலயமும், வெள்ளாளர், பறங்கியர் சிகையலங்காரம் செய்வோர்க் கென புனித மரியாள் ஆலயமும் இருந்தது. இரு ஆல யங்களுக்கும் நடுவே பங்குப் பணிமனை இருந்தது. புனித அந்தோனியார் ஆலயத்தை விட புனித மரியாள் ஆலயம் சிறியதாக இருந்ததால் புனித மரியாள் ஆலய சமூகத்தவர் புதிய ஆலயம் ஒன்றை கட்டுவதற்கு முடி வெடுத்தனர். அப்போது பங்குத்தந்தையாயிருந்த அருட் திரு பிரான்சிஸ் சேவியர் அடிகள் 1874 ஆடி மாதம் 19ம் திகதி புதிய ஆலயத்திற்கான அடிக்கல்லை நாட்டி ஒரு பகுதியை முடித்தார். கட்டி முடிக்குமுன்பே 1881ல் மாற்ற லாகிச் சென்றார். அருட்திரு.லபாகே (Lapage) அடிகள் தலைமையில் பணி தொடர்ந்தது. 1889ல் இவர் மாற்ற மடைந்த போது பணி மீண்டும் தடைப்பட்டு 1892ல் அருட் திரு. மியர் (Meary) தலைமையில் பணி தொடர்ந்தது.

1895ல் இயேசு சபையினர்வந்த போது பணி முடிவடைய வில்லை. பல வருடங்களாக கட்டடம் முடிவுறாத நிலை யில் இருந்தாலும் எதிர்காலத்தில் இவ்வாலயத்தை திரு கோணமலை மறைமாவட்டத்தின் பேராலயமாக மாற்ற வேண்டும் எனும் எண்ணம் இருந்ததாலும் பணியைத் தொடருமுன் கட்டடத்தின் பலத்தை உறுதிசெய்ய அத்தி வாரம் சோதிக்கப்படவேண்டுமென முடிவாகியது. ஆனால் அத்திவாரத்தை சோதிக்க நிலத்தைக் கிண்டுவதற்கு புனித மரியாள் சமூகத்தவர் மறுத்துவிட்டனர். இது குருக் களுக்கும் மக்களுக்குமிடையே பல சண்டைகளை ஏற் படுத்தியது. இதனால் கலவரங்கள் ஏற்பட்டது. பலர் சமயத்திலிருந்தும் விலக்கப்பட்டார்கள். கடைசியாக பொலிசும், அதிகாரிகளும் சம்பந்தப்பட வேண்டியிருந் தது. பல மாதங்களின் முயற்சிகளின் பின் குருக்களுக் கும் மக்களுக்குமிடையே ஒப்புரவு ஏற்பட்டு குழுத்தலை வர்கள் தமது குருக்களுக்குப் பணிய அமைதி நிலை நாட்டப்பட்டது. கடைசியில் கட்டடதின் மேலுள்ள குழு வின் கட்டுப்பாட்டை ஆயர் அதிவந். லவிஞ் ஆண்டகை நீக்க ஆலயம் பூர்த்தியாக்கப்பட்டு 1901ம் ஆண்டு டிசம் பர் மாதம் ஆசீர்வதிக்கப்பட்டது.

1898ம் ஆண்டு நவம்பர் மாதம் இந்தியா மலபாரிலிருந்து ஆயர் அதிவந்த சார்ள்ஸ் லவிஞ் இலங்கை வந்தடைந் தார். கொழும்பை அடைந்ததும் ஆயர் திருத்தந்தையின் பிரதிநிதியை சந்திக்க கண்டிக்கு சென்று அங்கிருந்து புகையிரதத்தில் மாத்தளை வந்தனர். மாத்தளையிலி ருந்து மாட்டுவண்டியில் இருநாட்கள் பயணம் செய்து மார்கழி மாதம் 22ம் திகதி திருகோணமலையை வந்த டைந்தார். திருமலை நகர் வாயிலில் குருக்களாலும் மக்களாலும் வரவேற்கப்பட்டு பேராலயத்திற்கு பவனி யாக சென்று அங்கு திருத்தந்தையின் ஆணை ஓலை தமிழிலும் ஆங்கிலத்திலும் வாசிக்கப்பட்டது.

1899 தை மாத நடுப்பகுதியில் ஆயர் மட்டக்களப்புக்கு சென்றார். பங்குத்தந்தையாக இருந்த அருட்தி சார்ல்ஸ் பொனஸ் அருட்திரு றோயருடன் இணைந்து வேண்டிய ஒழுங்குகளை செய்திருந்தார். மட்டக்களப்பில் வெஸ்லி யன் பிரிவினை சபை சம்மந்தமான பல முறைப்பாடுகள் வந்தபோது ஆயர் அனைத்து கருத்துக்களுக்கும் செவி மடுத்து மனக்கசப்பு ஏற்பட்ட காரணங்களை அறிந்து குருக்களையும் மக்களையும் தயார் செய்தார். மறைக் கொள்கை விவிலிய சரித்திர குறிப்புக்கள் சம்மந்தமாக மக்களுக்கு விரிவுரைகளை ஒழுங்கு செய்து மக்களை விசுவாசத்தில் பலப்படுத்தினார்.

1899ம் ஆண்டு பிற்பகுதியில் ஆயர் இந்தியாவுக்கு சென்ற போது பாட்டிச்சேரியில் புனித சூசையப்பரின் குளுனி சபை சகோதரிகளின் தலைவியை சந்தித்து உரையாடினார். அவர்களது பணியை நாடினார். திரு கோணமலையை விட்டு திருக்குடும்ப கன்னியர்கள் சபை சகோதரிகள் சென்றதும் மகளிர் ஆங்கில பாட சாலையை நடத்துவதற்கு ஆயரின் அழைப்பின் பெயரில் குளுனி சபை சகோதரிகள் பொறுப்பேற்று சிறப்பாக நடத் தினர். இதேபோல மட்டக்களப்பிலும் பணியாற்ற குளுனி சபை சகோதரிகள் அழைக்கப்பட்டாலும் உடனேயே யாரும் வர முடியவில்லை இதனால் குளுனி சபை சகோ தரிகள் வருகைதர மட்டும் இந்தியாவில் அளப்பி எனும் இடத்திலுள்ள செல்லி மேரி அப்போ என்பவர் சில நிபந் தனைகளுடன் மட்டக்களப்பு பாடசாலைக்கு தலைமை ஆசிரியையாக பொறுப்பேற்றார். மட்டக்களப்பு மக்க ளால் சகோதரி மேரிமகடலின் என அழைக்கப்பட்ட செல்லி மேரி அப்போ தமது இரு சகோதரிகளுடன் வருகை தந்தார். புனித சிசிலியா மகளிர் பாடசாலை ஆங்கில பாடசாலையாக இயங்க ஆரம்பித்தது. இப்பாட சாலை 1876ல் தமிழ் பாடசாலையாக அருட்திரு பிரான் சிஸ் சவேரியார் அடிகளால் ஆரம்பிக்கப்பட்டது.

1900ம் ஆண்டு கிழக்கு மாகாணத்தை கொலரா நோய் பாதிக்க ஆரம்பித்தது திருகோணமலைக்கு தொடர்ந் தது. இந்நோயிலிருந்து விடுபட்டால் லூர்து அன்னைக்கு திருத்தலம் அமைப்பதாக நேர்த்திவைக்கும்படி திரு கோணமலையில் அருட்திரு ஹெய்ம்பேகர் பங்கு மக்களை உற்சாகப்படுத்தினார். வேண்டியபடி கொலரா நோய் திருமலை நகரை தொடாமல் மூதூருடன் நின்றது. இதனால் திருகோணமலை நகருக்கு வெளியே பாலை யூற்று காட்டு பகுதியில் லூர்து அன்னைக்கு திருத்தலம் அமைக்கப்பட்டது.

சுதெச குருக்களை உருவாக்கும் நோக்குடன் சந்தியாப் பிள்ளை மரியான் சுவாமி மரியான்பிள்ளை பிலிப் யோசப் மேரி ஆகிய மூன்று மாணவருடன் 1902ம் ஆண்டு கார்த் திகை மாதம் 4ம் திகதி மட்டக்களப்பில் சிறிய குருமடம் ஒன்றை ஆயர் அரம்பித்தார். 1902ல் அருட் தந்தை பேடினன் வொணல், சகோதரர் போல் ஆகியோர் பணிக் கென வந்தபோது வழமைபோல் ஆயரே இவர்களுக்கு தமிழ்மொழி கற்பித்தார். 1904 புரட்டாதி மாதம் அருட் தந்தையர் கஸ்டன் றொபிஷேமைக்கல் கவுத் சகோதரர் அல்போன்ஸ் வந்தனர். விரைவில் அருட்திரு கஸ்டன்

றொபிஷே குருமுதல்வராக அபிஷேகம் பெற்றார்.

1906 ஆம் ஆண்டு மார்கழி மாதம் மறை மாவட்டத்தின் முதல் சுதேச குருக்களாக அருட்திரு லாசரஸ், அருட் திரு ஜோன் அடிகள் ஆயர் லவிஞ் ஆண்டகையால் திரு நிலைப்படுத்தப்பட்டனர். இது ஆயருக்கு பெரு மகிழ்ச் சியை ஏற்படுத்தியது. மறை மாவட்டத்தின் தென் பகுதி யில் நாடோடி மக்களுக்கென 1907இல் ஆறு கத்தோலிக் கப் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டாலும் அவர்கள் அவ்விடத்தை விட்டு திடீரென வேறிடத்திற்கு சென்ற தால் பாடசாலைகள் மூடப்பட்டன. 1910இல் குளூனி சபை சகோதரிகள் வருகை தந்து புனித சிசிலியா மகளிர் ஆங்கில பாடசாலையைப் பொறுப்பேற்றனர். இந் நாட்களில் மறைமாவட்டம் கல்வி வளர்ச்சியில் அதிக கவனம் செலுத்தியதால் பல குருக்கள் கற்பிக்கும் பணி யைச் செய்தனர். இதனால் மறைபரப்புப்பணி பெரிதும் தடைப்பட்டது. இதைத் தவிர்க்க ஆயர் கல்விப் பணிக் கென மாறிஸ்ட் சபை அருட்சகோதரர்களை அழைத் தார். 1911 மார்ச் 27ஆம் திகதி தகுதி வாய்ந்த ஐந்து மாறிஸ்ட் சகோதரர்கள் வருகை தந்து உடனடியாக புனித மிக்கேல் கல்லூரியில் பணியை ஆரம்பித்தனர்.

புனித மிக்கேல் கல்லூரி அனைத்துக் கல்லூரிகளையும் விட முதன்மை ஸ்தானத்தில் இருக்க வேண்டும் என்ற ஆயரின் நெடுநாளைய விருப்பத்தை நிறைவேற்றும் வண்ணம் 1912ஆம் ஆண்டு ஆடி 16ஆம் நாள் இலங் கையின் கவர்னராகவிருந்த சேர் ஹென்றி மக்கலம் புதிய கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டினார். 1913இல் புதிய வஞ்ஞானக் கூடம் சேர்க்கப்பட்டது. ஆனால் கட்டி டம் பூர்த்தியாகுமுன் 1913 ஆடி மாதம் 11ஆம் நாள் ஆயர் லவிங் இறைபதைமடைந்தார். ஆயரின் மரணம் கிழக்கு மாகாணத்தில் ஒவ்வோர் உள்ளத்திற்கும் தனிப் பட்ட இழப்பாகும். குருக்கள், துறவறத்தவர்களுக்கும், சகோதர சகோதரிகளுக்கும் ஆயர் நல்ல தந்தையாக, ஞானியாக, ஆசானாக, அன்புள்ளவராக இருந்துள்ளார். தும் குருக்களுக்கும் சகோதரராக இருந்து அவர்கள் பிரச்சினைகளை ஏற்று தம் சொந்தக் கருத்துக்களை திணிக்காமலும் அவர்கள் முடிவுகளில் தலையிடாமலும் ஒவ்வொரு சோதனையிலும் அரணாகவிருந்து உதவி யுள்ளார் என்று அருட்திரு லாங் குறிப்பிடுகின்றார்.

ஆயர் லவிங் ஆண்டகையின் இறப்பிற்குப் பின் குரு முதல்வராக இருந்த அருட்திரு கஸ்டன் றொபிஷே நிர் வாகத்தைப் பொறுப்பேற்று புதிய ஆயர் தெரிவில் இறை யாசியை வேண்டும்படி அழைப்பு விடுத்தார்.

இத்தருணத்தில் திருகோணமலை மறைமாவட்டத்தின் எதிர்காலம் பற்றி உயர்மட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது. ஐரோப்பிய யுத்தம் காரணமாக திருகோணமலைக்கு பிரான்ஸ் தேசத்திலிருந்து இயேசு சபைக் குருக்களை அனுப்ப முடியாத நிலையாலும் திருகோணமலை மறை மாவட்டத்தில் குறைந்த அளவு கத்தோலிக்கரே இருப்ப தால் மறைமாவட்டத்தைப் பிரித்து கண்டி மறைமாவட் டத்துடனும் யாழ்ப்பாண மறைமாவட்டத்துடனும் இணைப் பதென முடிவாகியது. ஆயர் லவிஞ் ஆண்டகை இறந்த முதல் வருடநினைவு தினத்தன்று அருட்திரு றொபிஷேக் இந்த செய்தியை வெளியிட்ட போது பல வருடங்களாக உழைத்த இயேசு சபையினருக்கும் பேரிடியாக அமைந்தது. பணியை முடித்து வெளியேற ஆயத்தமானபோது அதே வருடம் ஆவணி மாதம் அப்போஸ்தலிக்க பிரதிநிதி முனிசிரேஸ்டர் செலஸ்கியின் தலையீட்டால் இம் முடிவு இரத்து செய்யப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டது. இச் செய்தி அனைவருக்கும் பெருமகிழ்ச்சிசை கொடுத்தது. புனித மிக்கேல் கல்லூரியில் புதிய கட்டடம் பூர்த்தியாக் கப்பட்டு 1915 வைகாசி 3ம் நாள் கல்வி அதிகாரி திரு ஹோவட் கட்டடத்தை திறந்துவைத்தார். குருக்களை பராமரிப்பதற்கு என 1915 ஆனி மாதம் 10ம் நாள் அருட் திரு றொபிஷே பங்குகள் தோறும் பங்கு தாபரிப்பு பணம் அறவிடும் முறையை ஆரம்பித்தார். இம்முறை இன்றும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

1917 வைகாசி 22ம் நாள் திருகோணமலை மறைமாவட் டத்திற்கு ஒரு புதிய மைல்கல்லாக அமைந்தது. அன்று அருட்திரு றொபிஷேக் புதிய ஆயராக திருத் தந்தை 15ம் ஆசிர்வாதப்பரால் உயர்த்தப்பட்டார். இச் செய்தி 25ம் திகதி கிடைத்த போது ஆலய மணிகள் ஒலித்தன. அருட்தந்தை றொபிஷேக் ஆடி மாதம் 8ம் திகதி கொழும்பு மறைமாவட்ட ஆயர் அதிவந் அன்ரனி கௌடேட் அ.ம.தி. (Dr.Antony coudert OMA) யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயர் அதிவந் ஹென்றியூலியன் கண்டி மறைமாவட்ட ஆயர் பீட்பெக்மேயர் (Bede Beckmeyer, OMI) ஆண்டகையின் முன்னிலையில் ஆயராக திரு நிலைப்படுத்தப்பட்டார்.

பொறுப்பேற்ற புதிய ஆயர் மறைமாவட்டத்தையும் அதன் பெயரையும் புதுப்பிக்க அழைப்பு விடுத்தார். மறை மாவட்டத்தின் நடுப்பகுதியில் மட்டக்களப்பு உள்ளதா லும் அதிக எண்ணிக்கையான கத்தோலிக்கர் மட்டக் களப்பில் உள்ளதாலும் மாகாண தலைநகராக உள்ள தாலும் மறைமாவட்டத்தின் பெயரை மாற்றுவதற்கு முயன்றார். இதன்படி ஆலோசனை கேட்டு ஆவணி மாதம் 30திகதி அப்போஸ்தலிக்க பிரதிநிதி முனிசிரேஸ்ட செலஸ்டிக்கு கடிதம் எழுதினார். ஆனால் திருத்தந்தை யின் பிரதி நிதியே இம் மாற்றத்திற்கு முக்கியமான, பாரிய காரணம் எதுவும் இல்லாததால் இம்முயற்சியை கைவிடும்படி ஆலோசனை கூறினார்.

புரட்டாதி மாதம் தாண்டவன்வெளி, புளியடிக்குடா எனும் இரு பங்குகள் உருவாகின.

1919ல் அரசாங்கத்தின் அறிக்கையின் படி கத்தோலிக்கர் கள் குறைவாக உள்ள பகுதிகளில் உள்ள பாடசாலை கள் மூடப்பட்டு புதிய பாடசாலைகளை ஆரம்பிக்க அரசுக்கு அதிகாரம் உண்டு என்பதையும், இப்புதிய பாடசாலை களில் சமயம் ஒரு பாடமாக பயிற்றப்பட வேண்டிய அவசியம் இல்லை என்று புதிய சட்டம். இலங்கை ஆயர்கள் கூட்டாக எதிர்த்தாலும் அது கைகூடவில்லை. இதன்படி காத்தான்குடி, அம்பலாந்துரை, மகாஓயா, சேனைக்குடியிருப்பு, தம்பட்டை ஆகிய பகுதிகளில் உள்ள பாடசாலைகள் மூடப்பட்டன. காயங்கேணியில் அமைந்த பாடசாலை நாசிவன்தீவுக்கு மாற்றப்பட்டது.

இதே காலத்தில் குளூனி சபையை சேர்ந்த சகோதரி களும் பலவித இடையூறுகளுக்கு ஆளானார்கள். திரு கோணமலை மட்டக்களப்பு இரு இடங்களிலும் உள்ள சகோதரிகளுக்குள் தொடர்பு குறைந்து காணப்பட்டதாலும், சபையின் பராமரிப்பிற்கும் அதிக பணம் செலவாகிய தாலும் யுத்தம் காரணமாக பிரான்ஸ்சிலிருந்து யாரும் வரமுடியாத சூழ்நிலை இருந்ததாலும் இரு மடங்களும் மூடப்பட்டு விடுமோ எனும் அச்சம் இருந்துவந்தது. எனவே மறைமாவட்டத்திற்கென தனித்து ஒரு கன்னியர் துறவற சபையை ஆரம்பிக்க திட்டமிட்டு ஆயர் அதிவந் றொபிஷே காணிக்கை துறவற சபையை 1920ம் ஆண்டு நவம்பர் 21ம் திகதி இரு சகோதரிகளுடன் ஆரம்பித்தார். இம்முயற்சிக்கு குளூனிசபை சகோதரிகள் முழு ஒத்து ழைப்பு வழங்கினர். ஒரு வருடத்தின் பின் சகோதரி மாகரட்மேரி சகோதரி மேரி தெரேசா ஆகிய இருவரும்

முதல் வாக்குறதியை அளித்தனர். இவர்களின் பராமரிப்புக்கென ஆயர் ரூபா 10,000.00 நிதியை ஆரம்பித்து இச் சபையை அங்கீகரிக்கும்படி உரோமைக்கு விண்ணப்பித்தார்.

சிலகாலத்தின் பின் குளூனி சபையினர் திருப்பி அழைக்கப்படுவர் என செய்திவர அப்போஸ்தலிக்க கார்மேல் சபையினரின் உதவியைக் கோரினார். கோரிக்கை ஏற்கப்பட்டு 1922ல் மங்களூரிலிருந்து கார்மேல் சபை சகோதரிகள் வந்து திருகோணமலை, மட்டக்களப்பு பாடசாலைகளை பொறுப்பேற்றனர். 22வருட சேவையின் பின் 16-05-1923ல் குளூனி சபையினர் விடைபெற்றனர்.

புதிதாக ஆரம்பிக்கப்பட்ட சபையை கார்மேல் சபையினர் பொறுப்பேற்றாலும் இரு சகோதரிகளுள் ஒருவர் ஆயரின் அனுமதியுடன் துறவறத்திலிருந்து விலகினார். மற்றவர் பெங்களூருக்குச் சென்று நல்லாயன் சபையினருடன் இணைந்து கொண்டார்.

கார்மேல் சபையினர் வருவதற்கு ஒரு வருடத்திற்கு முன் பிரான்சிஸ்கன் சபையினர் வந்து மாந்தீவில் தொழுநோயாளர் வைத்தியசாலையை பொறுப்பேற்றனர்.

அருட்திரு ஹொப்பனவு அடிகள் நாவற்குடாவில் தரித்திருந்து மட்டக்களப்பிற்கு தெற்கே தம் பணியை விஸ்தரித்தார். தாழங்குடா கிராமத்தில் நீதிமன்றத்திற்கு செல்லுமளவிற்கு இருசாதியினரிடையே பெரும் சண்டை மூண்டது. சிக்கலைத் தீர்த்துத் தரும்படி மக்கள் அருட்தந்தையிடம் வந்தபோது தான் முடிந்ததைச் செய்வதாக வாக்களித்த அருட்தந்தை மக்களின் ஆன்ம ஈடேற்றத்தைப் பற்றியும் சிந்திக்கத் தூண்டினார்.

வழக்குத் தொடரும்போது சிலர் ஞானஸ்நானம் பெற முன்வந்தாலும் தீர்ப்பு இவர்களுக்கு பாதகமாக அமைந்ததால் இவர்களுள் 16பேர் ஆறுமாத சிறைத் தண்டனைக்கு ஆளாகினர். அருட்தந்தை ஹொப்பனோ சிறையில் இவர்களைத் தரிசித்து இவர்களது குடம்பங்களுக்கும் உதவினார். இந்நாட்களில் இலங்கையில் கவர்னராகவிருந்த சேர். கிரேம்ஸ் தொம்சன் மட்டக்களப்பிற்கு தமது முதல் பயணத்தை மேற்கொண்டார். கைதிக்கு மன்னிப்பு வழங்கும் அதிகாரம் இலங்கையில் கவர்னருக்கு மட்டுமே இருந்தது. இதைப் பயன்படுத்தி அருட்தந்தை ஹொப்பனோ சுவாமிகள் மனு ஒன்றை எழுதி பாதிக்கப்பட்டவரின் குடும்ப அங்கத்தவர்கள், அரச அதிபர், நகர முக்கிய பிரமுகர்களின் கையொப்பங்களுடன் கவர்னர் வந்தபோது சமர்ப்பிக்கச் செய்தார். மனு ஏற்கப்பட்டு சில நாட்களின் பின் இவர்களுக்கு விடுதலை கிடைத்தது.

தாழங்குடா கிராம மக்கள் தமது விவசாய முதலுக்கு அதிக வட்டிக்கு பணம் கொடுப்பவரை நம்பியிருக்க வேண்டியிருந்ததால் இவர்கள் பிடியிலிருந்து மக்களை விடுவிக்க பிரான்சிலிருந்து சிறு உதவி பெற்று சிறிய வங்கியொன்றை ஆரம்பித்து மிகவும் குறைந்த வட்டிக்கு கடன் கொடுத்துதவினார். அவ்வுதவியைப் பெற்ற பலர் சமயத்தைப் பற்றி மேலும் அறிய ஆவல் கொண்டு ஞானஸ்நானம் பெறவும் முன்வந்தனர். 1924ஆம் ஆண்டு திரித்துவப் பெருவிழாவன்று 20பேர் ஞானஸ்நானம் பெற்றனர். தொடர்ந்து பலர் மறையை ஏற்றனர். அருட்தந்தை ஹொப்பனோ சுவாமிகளும் தாழங்குடாவைத் தமது தங்குமிடமாக வைத்து அங்கு ஸ்நாபக அருளப்பருக்கு ஆலயம் கட்டினார். இதைத் தொடர்ந்து அருகேயுள்ள ஆரைப்பற்றையிலும் குழந்தை இயேசுவின் புனித தெரேசம்மாளுக்கும் ஆலயம் நிறுவினார்.

தாழங்குடா மக்கள் எந்த அளவிற்கு அருட்தந்தையை விரும்பினார்களென்றால், அருட்தந்தை இறந்தபோது மட்டக்களப்பில் வழமைக்கு மாறாக அவரது உடலை தாழங்குடாவில் அடக்கம் செய்யக் கோரினார்கள். கோரிக்கை ஏற்கப்பட்டு தாழங்குடா ஆலயத்திற்கு அருகே அருட்தந்தையின் உடல் அடக்கம் செய்யப்பட்டது. இக்கல்லறை இன்றும் மக்களால் தரிசிக்கப்படுகின்றது. இது அருட்தந்தை ஹொப்பனோ மக்களுக்காகச் செய்த பணியின் மேன்மையைக் காட்டுகின்றது.

ஏழைகளுக்கு சிறிய வைத்தியசாலை ஒன்று திறப்பது பற்றி அதிவந்.ஆயர் சில காலமாகச் சிந்தித்து பிரான்சிஸ்கன் சபை கன்னியரின் வருகையின் மூலமாக இவ்வெண்ணம் நிறைவேறக் கூடியதாகவிருந்தது. இந் நோக்கத்துடன் ஆயர் கல்லடியில் காணி வாங்கினார். ஆனால் அதே இடத்தில் பிரான்சிஸகன் சபை சகோதரிகள் பராமரிப்பில் கன்னியர்மடம், பாடசாலை, தையல் பயிற்சி நிலையங்கள், அநாதைகள் இல்லம் என்பன அமைக்கப்பட்டன.

அச்சகத்தின் மூலம் மறைபரப்புப் பணி செய்வதும் ஆயர் அதிவந். றொபிஷேக்கு விருப்பமான ஒன்றாகும். ஏற்கெனவே 1910இல் ஆயர் அதிவந். லவிஞ் காலத்தில் அருட்திரு றொபிஷே அடிகளின் முயற்சியால் மட்டக்களப்பில் அச்சகம் ஆரம்பிக்கப்பட்டது. ஆயரானதும் இவ் அச்சகத்தை பெருப்பிக்க விரும்பினார். ஆயரின் ஊக்குவிப்புடன் அருட்திரு அல்போன்ஸ் றிச்சட் அடிகள் யாத்திரிகன் (The Pilgrim) எனும் பத்திரிகையை வெளியிட்டார். மாத வெளியீடாகிய இப்பத்திரிகை எட்டுப் பக்கங்களைக் கொண்டு அரைவாசி தமிழிலும் அரைவாசி ஆங்கிலத்திலும் வெளிவந்தது. ஆயர் அதிவந். றொபிஷே திருத்தந்தையைச் சந்தித்தபோது அச்சு மூலமாக மறைபரப்புப் பணி பற்றி விளக்கினார். இப்பணியை உற்சாகப்படுத்த திருத்தந்தை உதவி செய்ய ஆயர் மேலும் பல புதிய அச்சு இயந்திரங்களை வாங்கி “ கத்தோலிக்க அநாதைகள் அச்சகம்“ எனும் பெயர் கொண்ட புதிய கட்டிடத்தில் நிறுவினார். அநாதைகள் மடத்தை விட்டு விலகும்போது அவர்களுக்கு உதவியாக இருக்க இவர்கள் இவ்வச்சகத்தில் பயிற்றுவிக்கப்பட்டனர். புனித வளனார் சபைச் சகோதரர்களின் வருகையுடன் அச்சகத்தின் நிர்வாகமும் அநாதைகள் இல்லமும் அவர்கள் பொறுப்பில் விடப்பட்டன. ஆயர் அதிவந். இக்னேசியஸ் கிளெனி காலத்தில் மேலும் பல இயந்திரங்கள் வாங்கப்பட்டு இதன் தரம் மேலும் உயர்த்தப்பட்டு புனித வளனார் சபையினருக்கு உரிமையாகக் கொடுக்கப்பட்டது. 1987இல் அச்சகம் புனித வளனார் சபைச் சகோதரர்கள் இல்லத்திற்கு அருகில் மாற்றப்பட்டு “புனித வளனார் அச்சகம்“ எனும் பெயரில் மேலும் சிறந்த இயந்திரங்களுடன் செயற்பட்டது. இன்றும் கிழக்கு மாகாணத்திலே திறமையான அச்சகங்களுள் ஒன்றாக இயங்குகின்றது.

கல்முனையில் பெண்களுக்கான ஆங்கிலப் பாடசாலை ஆரம்பிக்க வேண்டுமென்று சிலகாலமாக கல்முனையில் இருக்கும் கத்தோலிக்க சமூகம் கோரி வந்தது. துறவற சகோதரிகள் இல்லாமையால் இம்முயற்சி பிற்போடப்பட்டது. இந்நிலையில் அப்போஸதலிக்க கார்மேல் சபைச் சகோதரிகள் திருகோணமலையிலும் மட்டக்களப்பிலும் தமது நிலையை ஸ்திரப்படுத்தினர். இந்நிலையில் இவர்கள் பணி கல்முனைக்கு வரலாமென ஆயர் கருதி கார்மேல் சபையினருக்கு அழைப்பு விடுத்தார். பணி ஏற்பதற்கு சகோதரிகள் குறைவாக இருந்தாலும் அருட்சகோதரி இயூலாலி இவ்வழைப்பை ஏற்றுக்கொண்டார். அருட்சகோதரிகளுக்கென கல்முனையில் வீடு இருக்கவில்லை.

கார்மேல் சபைக் கன்னியர் கல்முனையில் பணியை ஆரம்பிக்க விரும்பினாலும் அவர்கள் தங்குவதற்கு வாட கைக்கு இடம் கிடைக்கவில்லை. இறுதியில் ஒரு கத் தோலிக்கருக்குச் சொந்தமான தொழில் நிலைய மொன்றை மூன்று வருட ஒப்பந்தத்தின்பேரில் பெற்று குடியேறினர். அப்போது பங்குத் தந்தையாக இருந்த அருட்திரு பூரிஅடிகள் ஐரோப்பாவிலும் ஐக்கிய அமெரிக் காவிலும் கொடைவள்ளல்களின் உதவி பெற்று ஆங் கில பாடசாலையை 1926 அடி மாதம் 17ஆம் திகதி 18 மாண வர்களுடன் ஆரம்பித்தார்.

திருகோணமலையில் கத்தோலிக்கரின் எண்ணிக்கையும் அதன் விளைவாக ஆலயங்கள், பாடசாலைகளின் எண் ணிக்கையும அதிகரித்ததால் பேராலயப் பங்கை இரண் டாகப் பிரிக்க ஆயர் தீர்மானித்தார். இதன்படி 1930 பங்குனி 20ஆம் நாள் சின்னக்கடைப்பங்கு தனிப் பங்காக உருவாகியது. அருட்திரு றிச்சட் பங்குத்தந்தையாகப் பொறுப்பேற்றார். ஆயருக்கும் இயேசு சபையினருக்கு மிடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தின் விளைவாக 1931 ஆவணி முதலாம்நாள் திருகோணமலை புனித சூசையப் பர் கல்லூரியைப் பொறுப்பேற்று பராமரிப்பதற்கென இயேசு சபையினரிடம் முறைப்படி கையளிக்கப்பட்டது. அதுவரை கல்லூரி ஆயரின் சொத்தாக இருந்தது. பொறுப்பேற்ற பின் இயேசு சபையினரே அனைத்துப் பொறுப்புக்களையும் செலவினங்களையும் தாமேபொறுப் பேற்க வேண்டும். கத்தோலிக்கப் பாடசாலைகளின் பொதுநிர்வாகி மூலமாக ஆயருக்கு மேற்பார்வை செய்ய உரிமையுண்டு.

திருச்சபையின் மறைபரப்பு பணியில் மறைபோதகர்க ளுக்கு முக்கிய பங்குண்டு. இதை உணர்ந்து கிராமத் திற்கு ஒரு மறை போதகர் என்னும் அடிப்படையில் புனித பிரான்சிஸ் சவேரியார் செயற்பட்டார். அதன் பின்னனியி லேயே தங்களுடைய கிராமத்திற்கு ஒரு மறைபோதகர் எனும் அடிப்படையில் செயற்படும் நாளை இயேசுசபை குருக்கள் எமது மறைமாவட்டத்தில் எதிர்பார்க்கின் றனர். அதே வேளையில் மறைமாவட்டத்தில் பாடசாலை களை கவனிப்பதற்கு என நல்ல கத்தோலிக்க ஆசிரியர் களுக்கு பற்றாக்குறை இருந்தது. மறைமாவட்டத்தின் நிதி நிலைமை மோசமாக இருந்ததால் கிராமத்தில் கத் தோலிக்க ஆசிரியரையும் மறைபோதகரையும் நியமித்து பராமரிக்க முடியாதநிலை இருந்தது. அதனால் கிராமத் திற்கு என தெரிவு செய்யும் கத்தோலிக்க ஆசிரியர் மறைபோதகருக்குரிய பணியையும் செய்யக்கூடிய வராக இருக்க வேண்டும் என திட்டம் வகுக்கப்பட்டது. இந்த நோக்கிலேயே மறைமாவட்ட ஆயர் அதிவந். லவிந் ஆண்டகையால் ஆசிரியர் பயிற்சி பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. ஆனாலும் இப்பாடசாலை பல கால மாக முன்னேற்றம் அடையாமல் இருந்ததால் புதுப் பொலிவு கொடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. ஆயர் ஹொபிஷே ஆண்டகை கத்தோலிக்க ஆசிரியர்க ளுக்கும் மறை போதகர்களுக்கும் பயிற்சி அளிக்க வென தனது பிரான்ஸ் தேசத்து கொடைவள்ளள்களிடம் உதவி கோரினார்.

மறைமாவட்டத்தின் கல்வி வளர்ச்சியில் புனித வளனார் சபை சகோதரர்களின் பணியை பார்த்து புனித அஸ்கு தினார் ஆசிரியர் பயிற்சி பாடசாலை அவர்களுக்கு பொறுப்பாக கொடுக்கப்பட்டது. சகோதரர்கள் தங்கள் திறமையான பணியின் மூலமாக மறைமாவட்டத்தில் சிறந்த கத்தோலிக்க ஆசிரியர்களை உருவாக்கி தந்தனர். 1933ம் ஆண்டு தொடக்கம் மறைமாவட்ட சரித்திரத்தில் புதிய திருப்பம் ஏற்பட்டது. பிரான்ஸ் தேசத்தில் இருந்து இயேசு சபையினரை தொடர்ந்து அனுப்ப முடியாத காரணத்தால் மாகாண முதல்வரின் வேண்டுகோளின் பேரில் அமொரிக்காவில் "நியூ ஒலியன்ஸ்" மாகாண முதல்வர் அங்கிருந்து இயேசு சபைமிசனரிமாறை அனுப் புவதாக ஒப்புக்கொண்டார். இதன் அடிப்படையில் திரு கோணமலை மறைமாவட்டத்திற்கு 1933ம்ஆண்டு "நியூ ஒலியன்ஸ்" மாகாணத்திலிருந்து அருட்திரு ஜோண் லினஹன் திருகோணமலை வந்தடைந்தார்.

மறைமாவட்ட திருச்சபையின் மிக முக்கிய நிகழ்ச்சியாக மட்டக்களப்பிற்கு 19மைல் தெற்கேயுள்ள கல்லாறு என்னும் இடத்தில் ஐப்பசி கார்த்திகை மாதங்களில் 200 பேர் திருமுழுக்கு பெற்றமையாகும். சமுதாயத்தில் ஏற்படுகின்ற அடக்கு முறைகள் காரணமாக பலர் கூட் டாக திருமுழுக்கு பெறுவதும், பாதுகாப்பும், சுதந்திரமும் விரும்பி திருச்சபையை நோக்கி வருவதும் வழமை யாகும். இதற்கு கல்லாறு விதிவிலக்கு அல்ல. 1894ம் ஆண்டு அமலமரி தியாகிகள் சபை குருக்களால் இங்கு கிறிஸ்தவம் ஆரம்பிக்கப்பட்டது.

ஆயர் றொபிஷேயின் மறைவைத் தொடர்ந்து திரு கோணமலை மிஷன் நியூ ஒலியன்ஸ் மாகாண நிரு வாகத்திற்குள் வந்தது. இதைத் தொடர்ந்து அருட்திரு. லினகன் அடிகள் மறைமாவட்டத்தின் நிர்வாகத்தையும், இயேசு சபையையும் பொறுப்பேற்றார். ஆயர் றொபிஷே யின் பணியைத் தொடர்ந்து ஆற்ற மூவரை தெரிவு செய்துதரும்படி பணிக்கப்பட்டார்.

1947ம் ஆண்டு ஆடி மாதம் 24ம் திகதி கண்டி பாப்பிறை குருமடத்தின் அதிபராக இருந்த அருட்திரு இக்னேசியஸ் கிளெனி அடிகள் திருகோணமலை ஆயராக நியமிக்கப் பட்டார். புதிய ஆயர் புரட்டாதி 21ம் திகதி திருகோண மலையில் றாஞ்சி மறைமாவட்ட பேராயர் அதி.வந் ஒஸ்கா சேவ்றின் (சே.ச) ஆண்ட கையால் பெங்களூர் ஆயர் அதி.வந்தோமஸ் பொது குமரி ஆண்டகை முன்னிலையிலும் கண்டி ஆயர் அதி.வந் றெக்னோ ஆண்டகை முன்னிலையிலும் அபி ஷேகம் செய்யப்பட்டார். புதிய ஆயர் சுதேச குருக்கள் உருவாக்கலை முன்னுரிமையாக வைத்து மறைமா வட்டத்தில் தேவ அழைத்தலை மேலும் ஊக்குவித்தார். இதன் முதல் கட்டமாக, கைவிடப்பட்ட நிலையில் இருந்த புனித அகுஸ்தீனார் ஆசிரியர் பயிற்சிப் பாட சாலையில் 1948 தை 4ம் திகதி புனித சூசையப்பர் சிறிய குருமடத்தை ஆரம்பித்து வைத்தார். இதன் அதிபராக அருட் திரு. பீலிக்ஸ் கிளாக்சன் அடிகள் நியமிக்கப்பட்டார். இதனைத் தொடர்ந்து தேவ அழைத் தல் சம்பந்தமாகவும் இதனை ஊக்குவிக்க பங்குத் தந்தையர் பெற்றோர் ஆகியோரின் கடமைகள் சம்பந்த மாகவும், சுற்றுமடல் ஒன்றை ஆயர் வெளியிட்டார். வரவிருக்கின்ற 25 வருடகால சரித்திரம், சுதேச குருக்கள் தொடர்பான ஆயரின் விருப்பம் எவ்வாறு நிறைவேறும் என்பதை இது எடுத்துக் காட்டுகிறது.

தற்போது அம்பாறை என்று அழைக்கப்படும் கிழக்கு மாகாணத்தின் தென்பகுதியை அபிவிருத்தி செய்வதற் காக 1949இல் அரசாங்கம் கல்லோயா அபிவிருத்திச் சபை என்னும் சுயாட்சி நிறுவனத்தை ஏற்படுத்தியது. இதன்கீழ் ஒரு லட்சம் ஏக்கர் பயிர் செய்கைக்குரிய காணிகளுக்கு நீர் பாய்ச்சவும் கிழக்கு மாகாணம் முழு வதற்கும் மின்சக்தியைக் கொடுக்க வல்லதுமான சேன நாயக்க சமுத்திரத்தின் நிர்மாணத்தைத் தொடர்ந்து மக்கள் குடியேற்றமும் நடைபெற்றது. இதில் அதிகமா னோர் கேகாலை மாவட்டத்தில் இருந்து வந்த சிங்கள பௌத்தர்களாவர்.

கிழக்குக்கரைக்கு பாத்திமா மாதாவின் திருயாத்திரை 1950ம் ஆண்டின் மிகவும் முக்கியமான நிகழ்ச்சிகளில் ஒன்றாகும். ஓவ்வொரு பங்கும் ஆன்மீக ரீதியில் அன்னை யின் திருச்சொரூப வருகைக்காக சிறப்பான முறையில் ஆயத்தம் செய்யப்பட்டது.

உலக சமாதானத்திற்காக செபம், ஒறுத்தல்கள் மூல மாக இக்காலத்தை முழுமையாக பயன்படுத்தும்படி ஆயர் கத்தோலிக்கர்களுக்கு அழைப்பு விடுத்தார். ஆனி மாத 13ஆம் திகதி யாழ்ப்பாணத்திலிருந்து திருச் சொரூபம் வருகைதர திருகோணமலை நகர் வாயி லிருந்து பவனியாக எடுத்துச் செல்லப்பட்டது. திருச்சொரூ பம் பேராலயம் புனித சூசையப்பர் கன்னியர் மடம் சின்னக்கடை ஆலயம் ஆகிய இடங்களுக்கும் எடுத்துச் செல்லப்பட்டது. இதனைத் தொடர்ந்து கடற்படையினர் பயண வசதிகள் செய்து கொடுக்க மூதூருக்கு எடுத் துச் செல்லப்பட்டது. மட்டக்களப்பில் 16ம் திகதி திருச் சொரூபம் வந்தடைய பவனியாக பொது அரங்கிற்கு எடுத்துச் செல்லப்பட்டது. அங்கு பல மதத்தவர் முன்னி லையில் அருட்திரு அலோசியஸ்மேரி (சே.ச) அடிகள் மறையுரை ஆற்றினார். 19ம் திகதி அன்னையின் திருச் சொரூபம் அக்கரைப்பற்று, சொறிக்கல்முனை போன்ற மறைமாவட்டத்தின் தென்பகுதிக்கும் எடுத்துச் செல்லப் பட்டு பின் 21ம் திகதி கண்டியை வந்தடைந்தது. அன்னையின் வருகை மறைவாட்டத்தில் விசுவாசத்தை மேலும் அதிகரிக்க பங்குகளிலும், இல்லங்களிலும் குழக்களாகவும் மக்கள் செபமாலை சொல்ல புதிய தெம்பும் உற்சாகமும் பெற்றனர்.

1950 ஆண்டு கார்த்திகை மாதம் 1ம் திகதி மரியன்னை யின் விண்ணேற்பு பற்றிய கோட்பாடு திருத்தந்தையால் பிரகடனப்படுத்தப்பட்ட போது இந்நாளில் மறைமாவட்டம் முழுவதும் இந்நிகழ்ச்சியைக் கொண்டாடியது. திருத் தந்தையின் இப்பிரகடனம் இலங்கை வானொலியில் ஒலி பரப்பப்பட்ட போது அதை திருகோணமலை மட்டக்க ளப்பு வாழ் மக்கள் ஆவலோடு கேட்டனர். மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியில் மாணவர்கள் மற்றும் அயலில் உள்ளோரும் கேட்கக் கூடியதாக ஒலிபெருக்கி வசதியும் செய்து கொடுக்கப்பட்டது. மரியன்னையின் அமல உற்பவம் புதிய கோட்பாடு அல்ல மாறாக இது இறை வெளிப்பாடு என்பதை விளக்கியும் ஆதி திருச் சபையில் இருந்தே இவ்விசுவாசம் பரவி வந்தது என்றும் ஆயர் அதி.வந். கிளெனி ஆண்டகை அவர்கள் இந் நிகழ்ச்சி சம்பந்தமான தனது சுற்றுமடலில் எடுத்துக் கூறினார்.

திருகோணமலையில் பேராலய வளவினுள் அமைந்துள்ள புனித வளனார் கல்லூரி இடவசதி போதாமையால் அதன் வளர்ச்சி குன்றி வந்தது. நியூஓலியன்ஸ் மாகாணம் இதன் வளர்ச்சிக்கு உதவ முன்வந்தது. இப்பாட சாலையை உப்புவெளிக்கு மாற்றுவதற்கு கருத்துக்கள் வெளிப்பட்டாலும் நகரின் ஒதுக்குப்புறத்தில் இவ்விடம் அமைவதால் இக்கருத்து கைவிடப்பட்டு மின்சாரநிலைய வீதியில் அமைந்துள்ள பனைமரத்தோட்டம் ஒன்று அருட் திரு. லினகன் அடிகளால் வழங்கப்பட்டு புதிய கட்டடத்திற்கான வேலைகள் ஆரம்பமாகின. உப்புவெளி யில் பெறப்பட்ட காணி எதிர்கால சிறிய குருமட அமைப்புக்காக மறைவாட்டத்திற்கு கையளிக்கப்பட்டது.

1991 சித்திரை 29ம் நாள் நடை பெற்ற மறைமாவட்ட மறைபரப்பு கூட்டம் புதிய சிந்தனையையும், மறை பரப்பு பணியில் ஈடுபடும் அனைவருக்கும் புதிய உற்சாகத் தையும் கொடுத்தது. ஆயர் மறைமாவட்டத்தில் பணி புரியும் குருக்கள், துறவறத்தவரையும் அழைத்து மறை மாவட்டத்தின் அப்போஸ்தலிக்கப்பணி சம்பந்தமான கருத்துக்களைப் பற்றிக் கலந்துரையாடினார். இது மறை மாவட்டத்திற்கு மட்டுமல்ல, இலங்கை முழுவதற்கும் புதிராக அமைந்திருந்தது. பொதுவாக பணிக்குரிய கட்ட ளைகள் ஆயர் மூலமாக அனுப்பப்பட்டு அவை நிறை வேற்றப்படும் ஆனால் இக்கட்டத்தின் போது அடி மட்டத் தில் பணிபுரியும் ஆண்களும், பெண்களும் தங்கள் கருத்துக்களை வெளியிட ஆயர் கருத்துக்களுக்கு செவி மடுப்பார். இக்கட்டத்தின் போது மறைபரப்பு பணி, கல்வி பாடசாலைகள் போன்ற விடயங்கள் கருத்தில் கொள்ளப்பட்டு பின்வரும் முடிவுகள் எடுக்கப்பட்டன.

1. ஏற்கனவே திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்பட்ட எத்திட்டங்களும் பங்குத்தந்தையர் மாற்றலாகி சென்றாலும் அவை தொடர்ந்து நடைமுறைப்படுத் தப்பட வேண்டும்.

2. விசுவாசிகளின் விசுவாச வாழ்வைப் பலப்படுத்தவும், தேவ அழைத்தலை ஊக்குவிக்கவும் அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட வேண்டும்.

3. விசுவாசிகள் பெருகிவந்ததால் ஆலயங்களும் புதி தாக கட்டப்பட்டு வருடாந்த திருவிழாக்கள் முக்கிய இடத்தை வகித்தன. ஆனாலும் ஒரே திகதியில் அருகேயுள்ள இரு பங்குகளில் திருவிழா நடை பெற்றதால் இரு ஆலயங்களுக்கும், மக்களாலும் செல்ல முடியவில்லை குருக்களாலும், ஒருவருக் கொருவர் உதவமுடியவில்லை. எனவே திருவிழா நாட்களை அதற்கேற்றவாறு ஒழுங்குபடுத்தும் தீர் மானம் எடுக்கப்பட்டது.

4. வளர்ந்துவரும் மறைமாவட்டத்தில் ஆசிரியர்களுக் கும், பாடசாலைகளுக்கும் தேவையிருந்தது. எனவே, எதிர்கால வளர்ச்சியை நோக்காக வைத்து செயல் படும்படி குருக்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

5. திருமறையை பிறருக்கு எடுத்துச் சொல்லும் போது அவர்களது சமயம், கலாச்சாரம் போன்றவற்றை அறிந்து இருப்பது முக்கியமானதாகும். எனவே பிற மதங்களையும் கலாச்சாரங்களையும் அறியவும் மதிப்பளிக்கவும் குருக்கள் பணிக்கப்பட்டார்கள்.

6. புதிய குடியேற்றங்கள் மூலமாக பல சிங்கள சமூகத் தவர் மறைமாவட்டத்திற்கு வந்ததால் சிங்கள மொழியை அறியவேண்டிய முக்கியத்துவம் வலி யுறுத்தப்பட்டது.

7. மறைமாவட்டத்திலோ, அல்லது மறைமாவட் டங்களுக்கு இடையிலோ மறையாசிரியர் பயிற்சி நிலையம் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற கருத் தும் முன்வைக்கப்பட்டது. இக்கருத்தை ஆயர் பேரவையில் சமர்ப்பித்து நடவடிக்கை எடுப்பதாக ஆயர் வாக்களித்தார்.

8. பாடசாலைகளும் கல்வியும் சம்பந்தமான பல்வேறு பட்ட கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. இந்து இஸ்லாமிய சமூகங்களுக்கிடையில் கத்தோலிக்க பாடசாலைகள் அவசியமா என்றும் இவை வெறும் பணவிரயம் என்றும் ஒரு சிலர் கருத்து தெரிவித்த னர். வேறு சிலரோ கத்தோலிக்கர் அல்லாத சூழலில் திருச்சபையின் நிலையைப் பாடசாலை கள் வலியுறுத்துகின்றன என்றும் கத்தோலிக்கர்

அல்லாதவர்களோடு தொடர்பை ஏற்படுத்துவதற்கு பாடசாலைகள் உதவுகின்றன என்றும் கருத்து தெரிவித்தனர். இறுதியில் வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது இருவரைத் தவிர மற்ற எல்லோரும் கத்தோலிக்க பாடசாலை சார்பாக வாக்களித்தனர்.

9. பாடசாலைகளும் கன்னியர்மடங்களும் பங்கு செயல் திட்டங்களில் பங்குபற்றுவதில்லையென்றும் பங்கிலே நடைபெறும் திருப்பலிகளில் பங்குபற்றுவதில்லை என்றும் சில குருக்கள் முறையிட்டனர். அதேவேளை பாடசாலைகளும், மடங்களும் முன்னெடுக்கும் திட்டங்களிலும், செயற்பாடுகளிலும் பங்குத்தந்தையர் பங்குபற்றுவதில்லையென்றும் மறுதரப்பில் இருந்து கருத்து வெளியிடப்பட்டது. ஆயர் தனது கருத்தை வெளியிட்டபோது பாடசாலையாக இருந்தாலும் பங்குத்தளமாக இருந்தாலும் நாம் அனைவரும் கிறிஸ்தவ மந்தையின் விசுவாசத்தை ஆழப்படுத்தவே எம்மை அர்ப்பணித்துள்ளோம். எனவே பங்குத்தந்தையர்களுக்கும் நிறுவனங்களில் பணிபுரிவோருக்குமிடையே ஒத்துழைப்பு இருக்க வேண்டும். ஒத்துழைப்பு, நல்லெண்ணம் ஆகியன இருந்தால் இதுபோன்ற சிக்கல்களைத் தீர்த்துக் கொள்ளலாம் என்று குறிப்பிட்டார்.

இக் கூட்டத்தைத் தொடர்ந்து ஆனி மாதம் 3-10ம் திகதி வரை கத்தோலிக்கப் பாடசாலை வாரமாக ஆயர் பிரகடனப்படுத்தினார். இதைச் சிறப்பிக்குமுகமாக நிதி பற்றாக்குறை இருந்ததால் இவ்வாரத்தில் நிதி திரட்டுவதற்கான பல திட்டங்கள் மேற் கொள்ளப்பட்டன.

திருகோணமலையில் புதிய சிங்கள குடியேற்றங்கள் நடைபெற்றதால் சிங்கள கத்தோலிக்கரின் வருகையும் இடம் பெற்றது. தமது பிள்ளைகளுக்கென கல்வி வசதி செய்து கொடுக்கப்பட வேண்டுமென கத்தோலிக்க சிங்கள பெற்றோர் கேட்டுக் கொண்டதால் ஆயர், அதி வந். கிளனி ஆண்டகை 1952இல் புனித அந்தோனியார் சிங்களக் கலவன் பாடசாலையை ஆரம்பித்து அதன் தலைமையாசிரியராக திரு.லியனகே என்பவரை நியமித்தார். சில மாதங்களின் பின் கல்வி அதிகாரி திரு.H.W. ஹோவ்ஸ் என்பவரின் முன்னிலையில் பாடசாலை ஆசீர்வதிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. வரவிருக்கும் மரியன்னையின் ஆண்டை முன்னிட்டு ஆயர் தனது சுற்றுமடலில் பாலையூற்று, புல்லுமலை ஆகிய இரு யாத்திரைத் தலங்களையும் யாத்திரைக்கென சிறந்த இடங்களாக குறிப்பிட்டு கத்தோலிக்கரை உற்சாகப்படுத்தினார். ஆயராகத் தனது பணியை ஆரம்பிக்கும் போதே எமது மறைமாவட்டத்தையும் தனது பணியையும் ஆயர் மரியன்னையின் வழிநடத்தலுக்கு அர்ப்பணித்திருந்தார்.

மட்டக்களப்பில் முதியவர்களுக்கான ஒரு இல்லம் ஆரம்பிப்பது என்னும் சிந்தனை ஆயரின் மனதில் இருந்தது இதை நடாத்துவதற்கு ஏழைகளின் சிறிய சகோதரிகள் சபைக் கன்னியரை ஆயர் அழைத்தார். இதற்கென மறைந்த ஆயர் அதி.வந்..லவிஞ் ஆண்டகை வாங்கிய காணி ஒதுக்கப்பட்டு 1955 சித்திரை மாதம் மறை மாவட்டத்தில் பல இடங்களையும் பார்த்த இச் சகோதரிகள் தாண்டவன்வெளியில் அமைந்திருக்கும் காணியில் முதியவர் இல்லத்தை அமைப்பதென ஏற்றுக்கொண்டனர்.

மரியன்னையின் ஆண்டு சம்பந்தமாக ஆயர் மற்றுமொரு மேய்ப்புப் பணி மடலை எழுதினார். இதில் உலகில் சில பகுதிகளில் கத்தோலிக்கர் தமது மதத்தைப் பின்பற்ற முடியாதவாறு பலவிதமான அச்சுறுத்தல்களுக்கும் ஆளாகி இருக்கிறார்கள் என்றும் இதன் விளைவாக பல குருக்களும், துறவறத்தவர்களும், பொது நிலையினரும், கொலை செய்யப்பட்டும், சிறைச்சாலையில் அடைக்கப்பட்டும் பல விதமான வாதைகளுக்கும் ஆளாகி இருக்கின்றார்கள் என்றும் குறிப்பிட்டு இவர்களுக்காக செபிக்கவும், தவமிருக்கவும் ஆயர் தனது மடலின் மூலமாக அழைப்பு விடுத்தார்.

புனித லோயலா இஞ்ஞாசியார் இறந்து 400வது ஆண்டை சிறப்பிக்க 1955 ஆடி 31 முதல் 1956 ஆடி வரை இஞ்ஞாசியார் ஆண்டாக பிரகடனப்படுத்தப்பட்டது. எமது மறைவாட்டத்தின் பாதுகாவலராக புனித இஞ்ஞாசியர் விளங்குவதாலும், திருகோணமலை மறைமாவட்டம் இயேசு சபை குருக்களின் மறைபணிக்கு கையளிக்கப்பட்டிருந்ததாலும், இயேசுசபை மிஷனறிமாரின் எண்ணற்ற பணியினை நாம் மறந்துவிட முடியாது. இதை சிறப்பிக்க புனித மிக்கேல் கல்லூரியின் பழைய மாணவர்கள் தன்னை அர்ப்பணிக்குமுகமாக மரியன்னையின் காலடியில் தனது வாளைக் காணிக்கையாக்கிய புனித இஞ்ஞாசியாரின் உருவச் சிலையைத் திறந்து வைத்தனர். திருகோணமலை யில் புனித இஞ்ஞாசியரின் வாழ்க்கைச் சரிதை மேடை யேற்றப்பட்டது.

இலங்கை மண்ணிற்கு மறை பரப்பு குருக்கள் மேலும் வருவதை தடைசெய்யும் சட்டம் 1955இல் அரசாங்கத்தினால் அமுல் செய்யப்பட்டது. இப்புதிய சட்டத்தை மேலும் 5 அல்லது 2 வருடங்களுக்காவது தளர்த்துமாறு ஆயரும், திருகோணமலை இயேசுசபை தலைவரும் 1955 ஆனி 15ம் திகதி பிரதம அமைச்சர் திரு.யோன் கொத்தல்லாவையைச் சந்தித்து கேட்டுக்கொண்டாலும் இவர்களின் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது.

1956 சித்திரை 4ஆம் திகதி நடை பெற்ற நடாளுமன்ற தேர்தலில் திரு.எஸ்.டபிள்யு. ஆர்.டி.பண்டாரநாயக்கா பெரும் வெற்றியீட்டி பதவியேற்றார். இதனைத் தொடர்ந்து "சிங்களம் மட்டும்" சட்டபூர்வமான மொழியாக இயற்றப்பட்டு இதனை பாராளுமன்றம் அங்கீகரித்தது. இதனால் பல எதிர்ப்புக்களும் சத்தியாக்கிரக நிகழ்ச்சிகளும் நடைபெற கல்லோயா பகுதிகளில் இனக்கலவரம் ஏற்பட்டு பலர் இறக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது.

மறைமாவட்டத்திற்கென சிறிய குருமடம் அமைக்க வேண்டுமென்ற சிந்தனை ஆயர் கிளெனியின் உள்ளத்தில் இருந்தது. புனித வளனார் கல்லூரி அமைக்கவென இயேசுசபை குருக்கள் திருகோணமலை உப்புவெளியில் ஒரு காணி வாங்கினார்கள். ஆனால் அந்த நிலம் திருகோணமலை நகருக்குத் தொலைவில் உள்ளதால் நகருக்கு அருகேயே பனந்தோட்டத்தில் காணி வாங்கினர். எனவே உப்புவெளி பூமி சிறிய குருமடத்திற்கு ஏற்றதாக அமைந்ததால் 1957 ஆடி மாதம் ஆயர் புதிய கட்டடத்திற்கான அடிக்கல்லை நாட்டினார். இக் கட்டடத்திற்கான நிதியில் பெரும் பகுதியை திருத்தந்தையின் பிரதிநிதியாக பணியாற்றிய முனிசிரேஸ்டர் றொபேட் நொக்ஸ் பெற்றுக் கொடுத்தார்.

திருகோணமலையில் ஆயர் இல்லத்திற்கு ஏற்ற கட்டடம் வாங்கும் விடயம் பேச்சில் இருக்க தோட்டத்துரை ஒருவர் உவர்மலையில் அமைந்துள்ள தனது பங்களாவை விற்பதற்கு சம்மதித்தார். ஆரம்பத்தில் இவ் இல்லம் வாடகைக்கு பெற்றுக்கொள்ளப்பட்டது. சிறிய குருமட கட்டட வேலைகள் மெதுவாகவே நடைபெற்றதால் குருமட அதிபராக இருந்த அருட்திரு யோசப் எச். மேயர் சே.ச.அடிகள் குருமட மாணவர்களுடன் வாடகைக்கு எடுத்த கட்டடத்தில் 1958 தை முதல் தங்கி சிறிய

குருமட கட்டட வேலைகளை நேரடியாக மேற்பார்வை செய்து வேலைகளைத் துரிதப்படுத்தினார். குருமட வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டு குருமட மாணவர்கள் அங்கு சென்றதும் உவர்மலையில் வாங்கப்பட்ட இல்லம் ஆயரின் இல்லமாகியது.

1958 வைகாசி – ஆனி மாதங்களில் இலங்கை முழவதும் தமிழ் சிங்கள இனக்கலவரம் ஆரம்பமாகியது. இதன் விளைவாக பலர் கொல்லப்பட்டனர். எமது மறைமாவட்டம் இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டது. கலவரங்களின்பின் இயேசுசபைக்கென திருகோணமலையில் பயிற்சி இல்லம் சில மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்டு அருட்திரு.எவ்.எக்ஸ்.மேயர் சே.ச. இதற்கு பொறுப்பாக பணியை ஆரம்பித்தார். இவரே குறைந்த செலவில் வீடு கட்டுவதற்கு ஏதுவாக களியும், கிறவல் மண்ணும் கலந்த கற்களை செய்யும் முறையை அறிமுகம் செய்தார். இப்பணி மறைமாவட்டத்தின் சமூக சேவைக்கு பெரும் உந்துகோலாக அமைந்தது.

1958 ஆடி மாதம் திருந்தந்தையின் பிரதிநிதி முனிசிரேஸ்டர் றொபேட் நொக்ஸ் அடிகளின் சிபார்சின் பேரில் அருட்திரு.எல்.ஆர்.அன்ரனி அடிகள் மறைமாவட்ட ஆயருக்கு செயலாளராக யாழ்ப்பாணத்திலிருந்து கொடுக்கப்பட்டார். காலப்போக்கில் ஆயர் கிளெனியின் பின் அருட்திரு.எல்.ஆர்.அன்ரனி அடிகள் ஆயரானார்.

இக்காலத்தில் மட்டக்களப்பில் "மன்ரேசா தியான இல்லம்" நிர்மாணிக்கப்பட்டது. தியானத்தில் ஈடுபட விரும்புவோருக்கு பேருதவியாக இம்முயற்சி அமைந்தது.

அரசியலில், 1957 ஆடி மாதம் ஆட்சியிலிருந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும், வடக்கு கிழக்கு தமிழரை பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிக்கும் இடையே பண்டாரநாயக்கா–செல்வநாயகம் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. ஆனால் இந்த ஒப்பந்தம் பிரதம மந்திரியால் இரத்து செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து இது வரை வாகன இலக்கங்களுடன் இருந்த ஆங்கில எழுத்துக்களை அகற்றிவிட்டு "சிறி" என்னும் சொல்லை அரசாங்கம் அறிமுகப்படுத்தியமை தமிழர் மத்தியில் பல குமறல்களையும் எதிர்ப்புக்களையும் ஏற்படுத்தியது. ஆங்காங்கே இனக் கலவரங்களும் இடம்பெற்றன.

இத்தருணத்தில் ஆயர் கிளெனி ஆண்டகை ஆயராகப் பதவியேற்று 10 வருடகால சேவையை பூர்த்தி செய்தார். இந் நிகழ்ச்சியை நினைவு கூர இந்த 10 வருட காலத்துள் கட்டப்பட்ட புதிய ஆலயங்கள், சிறிய ஆலயங்கள், பங்கு மனைகள், நிறுவனங்கள் போன்றவற்றின் புகைப் படங்கள் அடங்கிய சிறிய புத்தகம் வெளியிடப்பட்டது.

1959 புரட்டாதி 25ம் நாள் பிரதம மந்திரி தனது இல்லத்தில் சுட்டுக் கொல்லப்பட்டார். மறைந்த பிரதம மந்திரிக்கு மரியாதை செலுத்தும் வண்ணம் இலங்கையின் அனைத்து ஆலயங்களிலும் மணிகள் ஒலிக்கப்பட்டன. அனைத்து ஆயர்களும் திருமதி. பண்டாரநாயக்காவை சந்தித்து தமது அனுதாபங்களை தெரிவித்தனர். 1960 பங்குனி 19ம் நாள் நடைபெற்ற பொதுத் தேர்தல் வரை தற்காலிக பிரதம மந்திரியாக ஏற்கனவே நியமிக்கப்பட்ட திரு.று. தகநாயக்கா அரசாங்கத்தை நடத்தினார்.

பொதுத் தேர்லதலுக்கு முன்பாக ஆயர் கிளெனி ஆண்டகை ஒரு சுற்று மடல் வெளியிட்டார். இதில் வாக்களிப்பதற்கு ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் இருக்கும் கடமைகளையும், பொறுப்புக்களையும் உணர்த்தி மனச்சாட்சிக்கேற்ப வாக்களிக்கும்படி கேட்டுக்கொண்டார்.

பொதுத் தேர்தலில் சுதந்திரக் கட்சி 75 ஆசனங்களுடன் வெற்றி பெற்றது. திருமதி பண்டாரநாயக்கா கட்சியின் தலைவியாக தெரிவு செய்யப்பட்டு பின் பிரதம மந்திரியாக பதவிப் பிரமாணம் செய்து கொண்டார். சுதந்திரக் கட்சி பதவிக்கு வந்ததும் வெளிநாட்டு கடவுச் சீட்டுடன் இலங்கையில் இருக்கும் அனைவருக்கும் ரூபா.400/- அனுமதிச் சீட்டு வரி விதித்தது. இதன்படி அனைத்து மிஷனரிமாரும் முதல் வருடத்தில் ரூபா. 800/- செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. இது துறவற சபைகளுக்கு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

1959ஆம் ஆண்டு ஆரம்பத்தில் அரசாங்கம் தேசிய மயமாக்கல் சம்பந்தமாக தனது கொள்கையை வகுத்து அதன் முதல் கட்டமாக வைகாசி 20ஆம் திகதி கூடிய பாராளுமன்ற மந்திரிகள் குழு கத்தோலிக்க பாடசாலைகளை சுவீகரிப்பது என்ற முடிவுக்கு வந்தது. இம்முடிவை சம்பந்தப்பட்ட அனைத்து பாடசாலை அதிபர்களுக்கும் கல்வி அதிகாரி ஆனி 23ஆம் திகதி அறிவித்தார். இம் முடிவுக்கு எதிர்ப்புக்கள் பல நிலைகளிலிருந்தும் எழுந்தன. அரசாங்கத்தின் முடிவுக்கு எதிராக மறைமாவட்டம் முழுவதும் பொதுக் கூட்டங்களும், எதிர்ப்பு ஊர்வலங்களும் நடாத்தப்பட்டன. கத்தோலிக்க பாடசாலைகளின் பெறுமதியை உணர்ந்த பிற மதத்தினரும் மதபேதமில்லாமல் இவ்வெதிர்ப்பு ஊர்வலங்களில் கலந்து கொண்டனர். அரசாங்கம் கத்தோலிக்க பாடசாலைகளைச் சுவீகரித்ததால் அதனால் ஏற்படும் விளைவுகளை விளக்கி கத்தோலிக்க பெற்றோருக்கு விழிப்புணர்வை ஊட்டும் உணர்வுடன் கத்தோலிக்க ஆசிரியர் சங்கத்தினால் துண்டுப் பிரசுரங்கள் கத்தோலிக்க அச்சகத்தினால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டன. ஏதிர்ப்புக்கள் உயர்ந்து கொண்டு வர தனது மறைந்த கணவரின் திட்டங்களை மட்டுமே தான் அமுல்படுத்துவதாக திருமதி. பண்டாரநாயக்கா மக்களுக்குத் தெரிவிக்கத் தொடங்கினார். ஆனால் இது மக்களின் நன்மதிப்பையும், சம்மதத்தையும் பெறுவதற்கே அமைந்திருந்தது. பாடசாலைகளைத் தேசிய மயமாக்கும் திட்டத்தில் கத்தோலிக்க திருச்சபை மட்டுமே தடையாக இருந்தது.

ஐப்பசி மாதம் 11ஆம் திகதி இலங்கையின் அனைத்து ஆயர்களும் ஒன்று கூடி எழுந்துள்ள இச்சிக்கல் சம்பந்தமாக கலந்துரையாடி பொதுவான ஒரு திட்டத்தை வகுத்தார்கள். தனது எந்தவொரு பாடசாலையையும் திருச்சபை விட்டுக் கொடுக்கக் கூடாது என்பதும், புதப் பாடசாலைகளை ஆரம்பித்து அதில் குருக்கள், துறவறத்த வரை ஆசிரியர்களாக நியமிப்பதும், பெற்றோரின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வதும் அனைவரது கருத்தாக அமைந்திருந்தது. இவ்வேளையில் கிளெனி ஆண்டகை அவர்கள் அமெரிக்காவில் இருந்தார். அங்கிருந்து திரும்பியதும் நடைபெற்ற நிகழ்ச்சிகள் பற்றி விரிவாக விளக்கப்பட்டது. ஆயர் வந்ததும் மறைமாவட்ட கத்தோலிக்க பாடசாலகளின் பொது முகாமையாளராகப் பணியாற்றிய அருட்திரு.கிறவுதர் அடிகளையும், மற்றும் சில ஆலோசகர்களையும் அழைத்து உரையாடினார். தான் வரும் வழியில் இயேசுசபை மேலாளரைச் சந்தித்து இது விடயமாக ஆலோசித்ததாகவும் திருகோணமலை மறைமாவட்டதில் புனித வளனார் பாடசாலையையும், புனித மிக்கேல் பாடசாலையும் இயேசுசபையினர் எக் காரணம் கொண்டும் கைவிடக் கூடாது என்ற நிலைப் பாட்டை மேலாளர் கூறியதாகவும் ஆயர் இவ் உரையாடலில் குறிப்பிட்டார். கிளெனி ஆண்டகை அவர்கள் புனித வளனார், புனிதமிக்கேல் கல்லூரிகளைவிட திருகோணமலை, மூதூர், மட்டக்களப்பு, கல்முனை ஆகிய இடங்களில் மத்திய பாடசாலைகளின் உருவாக்கலையும் இதற்கு குருக்கள் துறவறத்தவர்களை ஆசிரியர்களாக அமைத்து அவற்றைத் தனியார் பாடசாலைகளாக இயங்க வைப்ப

தையும், ஆதரித்து தனது விருப்பத்தைத் தெரிவித்தார்.

இவ்வேளையில் அரசாங்கத்தின் முடிவுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக இலங்கையிலுள்ள அனைத்துப் பாடசாலைகளும் பெற்றோரினாலும், நலன் விரும்பிகளாலும் முற்றுகையிடப்பட்டன. அரசாங்கம் தனது கொள்கையை மாற்றும் வரை எவரையும் உள்ளே அனுமதிப்பதில்லை என்ற நிலைப்பாட்டோடு பெற்றோர் இரவு, பகலாக பாடசாலை வளாகத்தினுள் நின்றதால் வகுப்புகளும் நடை பெறவில்லை. இலங்கை முழுவதுமுள்ள 625 கத்தோலிக்க பாடசாலைகளில் இவ்வெதிர்ப்ப நடைபெற்றது. எமது மறைமாவட்டத்தில் கத்தோலிக்கரோடு இணைந்து இவ்வெதிர்பில் இந்து, இஸ்லாமிய பெற்றோரும் ஒத்துழைத்தனர்.

இவ்வளவு கடுமையான எதிர்ப்புக்கள் இருந்தும், அரசாங்கம் தனது நிலைப்பாட்டைத் தளர்த்தாமல் பாராளுமன்றத்தில் இப்புதிய சட்டத்தை அங்கீகரித்தது. இதன்படி 1960ஆம் ஆண்டு மார்கழி மாதம் 1ம் திகதி முதல் இத்திட்டம் அமுலுக்கு வரவேண்டும்.

பாடசாலை விடயமாக பேசுவதற்கு பிரதம மந்திரி அனைத்து ஆயர்களையும் திடீரென அழைத்திருந்தார். இக்கூட்டத்திற்கு யாழ் ஆயர் அதிவந்.எமிலியானுஸ் பிள்ளை ஆண்டகை சமூகம் தரவில்லை. கூட்டம் கார்த்திகை மாதம் 25ஆம் நாள் மாலை 9.00 மணிக்கு ஆரம்பமாகி ஆயர்களின் ஆட்சேபனையையும் மீறி அதிகாலை 3.00 மணி வரை நடை பெற்றது. நடைமுறைத் தேவைகளுக்காக தனியார் பாடசாலைகள் அரசாங்கம் பொறுப்பேற்ற பின்பும், பழைய முறைப்படியே செயல்படலாம் எனும் உறுதியை பிரதம மந்திரி ஆயர்களுக்கு வழங்கினார். இரண்டாம் ஏற்பாட்டை நோக்கும் போது அனைத்து சமய தலைவர்களின் கருத்துக்களையும் பெற்றுக்கொள்ளும் வண்ணம் கல்விக்கான ஆணைக் குழு ஒன்று நியமிக்கப்படும் என்றும் பிரதம மந்திரி உறுதியளித்தார். இதனடிப்படையில் அரசாங்கத்திற்கும் கத்தோலிக்க ஆயர்களுக்கும் இடையே ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு கத்தோலிக்க ஆயர் பேரவை அறிக்கை ஒன்றை வெளியிட்டது. ஆயர்களும் கத்தோலிக்கரை சமாதானப்படுத்தினார்கள். ஆனால் அரசாங்கம் தனது அறிக்கையில் ஆயர்கள் முன்வைத்த கோரிக்கைகளையும் அது சம்பந்தமாக பிரதம மந்திரி கொடுத்த வாக்குறுதிகளையும் குறிப்பிடாமல் இரண்டாம், மூன்றாம் தர பாடசாலைகளை அரசாங்கத்திற்குக் கையளிப்பதற்கு ஆயர்கள் சம்மதித்துள்ளதாக மட்டும் குறிப்பிட்டது.

இந்த அறிவித்தலைக் கேட்டதும் தமக்கு சார்பாக ஆயர்கள் பேசவில்லை என்றும் தம்மை ஏமாற்றி விட்டார்கள் என்றும் கத்தோலிக்கர் எண்ணத் தொடங்கினார்கள். இந்தத் தப்பெண்ணத்தை நீக்கும் வண்ணம் அரசாங்கத்தோடு ஏற்படுத்திய ஒப்பந்தங்களை விரிவாக விளக்கி ஆயர்கள் மீண்டும் ஒரு அறிக்கையை வெளியிட்டனர். தனியார் பாடசாலைகளை தேசிய மயமாக்கும் முதலாவது ஏற்பாடு அங்கீகரிக்கப்பட்டாலும் அரசாங்கம் தனியார் பாடசாலைகளின் நிர்வாகத்தை மட்டுமே பொறுப்பேற்க முடிந்தது. பாடசாலையின் கட்டிடங்களும், காணியும் அரசாங்கத்திற்குச் சொந்தமாக இல்லாததால் பாடசாலையில் எந்தவிதமான பாரிய மாற்றங்களையும் செய்ய முடியாதிருந்ததை அரசாங்கம் உணர்ந்தது. சட்டத்தில் காணப்படும் இக்குறையைப் பயன்படுத்தி தமது அனுமதி இல்லாமல் பாடசாலை வளவினுள் யாரும் வர அனுமதிக்கக்கூடாது என்று திருச்சபை நிர்வாகிகள் இவ் விடயத்தை நீதிமன்றத்தில் சமாப்பித்தனர். இந்நிலை பாடசாலையில் நிலைகொண்டவர்களை வெளியேற்ற அரசாங்க அதிகாரிகளுக்குத் தடையை எற்படுத்தியது. இதன் விளைவாக பாடசாலைக் கட்டிடங்களையும் அதற்குச் சொந்தமான அனைத்துச் சொத்துக்களையும் பொறுப்பேற்க இரண்டாவது சட்டம் பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டது.

பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட இரண்டாவது சட்டத்திற்கமைய அனைத்துப் பாடசாலைகளும் அதன் காணி மற்றும் சொத்துக்களும் அரச உடமையாக்கப்பட்டன. இச் சொத்துக்களின் மேல் யாரும் சட்டப்படி நடவடிக்கை எடுக்க முடியாதவாறு கல்வியமைச்சுக்கு அதிகாரம் வழங்கப்பட்டது. இதற்கான நிவாரணம் வழங்கப்பட வேண்டியதில்லை என்றும் சொத்துக்களுக்கு ஏதாவது சேதம் ஏற்படும் பட்சத்தில் அதன் உரிமையாளர்களே பொறுப்பு என்றும் வெளிப்படையாகவே சட்டம் தெரிவித்தது.

மேலும் தனியார் பாடசாலைகளாகவே தொடர்ந்தும் செயல்பட விரும்பும் முதல் ரக பாடசாலைகள் இதே சட்டத்தின் கீழ் பின்வரும் நிபந்தனைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

அரசாங்கத்தின் கல்வி சம்பந்தமான கொள்கைகளை இப் பாடசாலைகளும் பின்பற்ற வேண்டும்.

- தனியார் மயமாவதற்கு முன்பிருந்த அனைத்துச் சலுகைகளையும் தற்போதும் மாணவர்களுக்குக் கொடுக்க வேண்டும்.
- மாணவர்களிடமிருந்து எவ்வித கட்டணமும் அறவிடக்கூடாது.
- மாணவர்களுக்கு தங்குமிட வசதிகளைக் குறைக்கக்கூடாது.
- கல்வி சம்பந்தமாக எழுத்துமூலம் கொடுக்கப்படும் சட்டங்களுக்கு அமைய வேண்டும்.
- கடமையாற்றிய ஆசிரியர்களிலோ அவர்களுக்குக் கொடுக்கப்பட்டு வந்த சம்பளத்திலோ மாற்றம் ஏற்படுத்தக்கூடாது.
- கல்வியதிகாரி திருப்திப்படும் வகையில் பாடசாலைகளை நடாத்துதல் வேண்டும்.

இந்தக் கடுமையான சூழ்நிலையின் மத்தியில் தனியார் பாடசாலைகள் தொடர்ந்து பலகாலம் இயங்க முடியாத ஒரு நிலை இருந்தது. இருப்பினும் இலங்கை முழுவதும் 42 கத்தோலிக்கப் பாடசாலைகள் தனியார் பாடசாலைகளாக இயங்க முடிவெடுத்தன. இவற்றுள் எமது மறைமாவட்டத்திலிருந்த புனித சூசையப்பர் கல்லூரியும் (திருகோணமலை) புனித மிக்கேல் கல்லூரியும் (மட்டக்களப்பு) அடங்கும்.

பாடசாலைகள் அதிகரிப்பு சம்பந்தமாக பேச்சுவார்த்தை நடத்தக்கோரி ஆளுநரின் கொழும்பு வாசஸ்தலத்திற்கு முன்பாக அகில இலங்கை மாணவர் நலன்புரி சங்கத்தினர் பிரமாண்டமான போராட்டம் நடாத்தினர். அவர்களது கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டாலும் இவ் அமைப்பின் பிரதிநிதிகள் ஆளுநருக்கு தமது கோரிக்கைக் கடிதம் ஒன்றைக் கொடுப்பதில் வெற்றி கண்டனர். கவர்னரும் இதற்குப் பதில் அனுப்புவதாக வாக்களித்தார். வாக்களித்தபடி இக்கடிதத்தின் விடயங்களை கல்வி அமைச்சின் கவனத்திற்குக் கொண்டு வந்ததாக

பதிலும் வந்தது. இதற்குமேல் எதுவும் நிறைவேற வில்லை. இந் நிலையில் போராட்டத்தின்போது அதைப் பயன்படுத்தி சில அரசியல் சக்திகள் சுய இலாபம் சம்பாதிக்க முயற்சி செய்ததாலும் "லேக் ஹவுஸ்" நிறுவனத்தின் சொத்துக்களுக்கு சேதம் விளையக்கூடிய ஆபத்து இருந்ததாலும் இந் நிறுவனத்தின் வேண்டுகோளுக்கு அமைய பேராட்டம் கைவிடப்பட்டது.

1961இல் அனைத்து கத்தோலிக்கப் பாடசாலைகளும் போராட்டத்தில் ஈடுபட்டோரால் நிறைந்திருந்ததால் பாடசாலைகளை உரிய காலத்தில் செயல்பட வைக்க முடியவில்லை. இதனால் கத்தோலிக்க பாடசாலை களின் ஆசிரியர்களை வேறு பாடசாலைகளில் தற்காலி கமாக பணியாற்றும்படி கல்வித் திணைக்களம் எழுத்து மூலம் இடமாற்றக் கடிதம் தர வேண்டுமென அருட்சகோ தரிகளும், அருட்சகோதரர்களும் கேட்டுக் கொண்டனர். இவர்களது கோரிக்கை நிராகரிக்கப்பட்டதுமல்லாமல் அவர்களே தற்காலிகமாக நீக்கப்பட்டு சில நாட்களின் பின் நிரந்தரமாக விலக்கப்பட்டார்கள். பின் பலரது தலையீடுகள், பேச்சுவார்த்தைகளின் பின் மீண்டும் நியமிக்கப்பட்டார்கள்.

பம்பாயின் பேராயர் கர்தினால் வலேரியன் கிறாசியாஸ், வண.யோசப் வாஸ் அடிகளின் 250ஆம் ஆண்டுக் கொண்டாட்டங்களில் பங்கெடுக்க இலங்கை வந்திருந் தார். பாடசாலைகள் விடயமாக இலங்கை ஆட்சி யாளர்கள் பேராயருடன் ஆலோசனை செய்தனர். அரசாங்கத்தின் மீது மக்கள் நம்பிக்கை வைத்து போராட்டங்களை நிறுத்த வேண்டும் என்பது இப்பேச்சுக் களின் முடிவாக அறிவிக்கப்பட்டது. இதனடிப்படையில் கத்தோலிக்கர் போராட்டங்களை நிறுத்திவிட்டு பாட சாலைகளிலிருந்து வெளியேறினர். சிலவருடங்களின் பின் இம்முடிவு தவறானது என பல கத்தோலிக்கர் கருத்து வெளியிட்டனர்.

பாடசாலைகள் அரச மயமாக்கலால் மறைக்கல்விப் பணிக்கு வரக்கூடிய ஆபத்துக்களைக் குறிப்பிட்டு மாசி மாதம் ஆயர் கிளெனி ஆண்டகை ஒரு சுற்றுமடல் அனுப்பினார். பிள்ளைகளைக் கிறிஸ்தவ விசுவாசத்தி லும், பழக்கத்திலும் வளர்ப்பதற்கு பெற்றோருக்கு இருக் கும் பொறுப்புக்களை உறுதியாக இச்சுற்றுமடல் மூல மாகத் தெளிவுபடுத்தினார்.

இதனடிப்படையில் மறைமாவட்டத்தில் பின்பற்ற வேண் டிய நடை முறைகள் சிலவற்றையும் முன்வைத்தார்.

- பங்கு ரீதியில் ஞாயிறு மறைக்கல்வி வகுப்புக்களை ஒழுங்கு செய்தல்.
- மறையறிவைப் போதிக்கவென சரியான போத னையாளர்களைத் தெரிவு செய்து பயிற்றுவித்தல்
- அரசாங்கம் பொறுப்பேற்ற பாடசாலைகளில் கிறிஸ்த வம் கற்பிக்கவென தகுந்த கத்தோலிக்க ஆசிரி யர்களை நியமித்தல்.
- மறைக்கல்விப் பணியில் பங்குத் தந்தையருக்கு உதவவென அனைத்துக் குருக்கள், துறவறத்தவர், பெற்றோருக்கு அழைப்பு விடுத்தல்.
- கிறிஸ்தவ கல்விக்கென மறை மாவட்ட இயக்குனரும் (அருட்திரு. கென்றி பொன்னையா) அவரோடு இணைந்து பணியாற்ற கோட்ட ரீதியில் திருகோண மலை, மட்டக்களப்பு, கல்முனைக்கென 3 இணை இயக்குனர்களும் நியமிக்கப்படல்.

கடந்த காலத்தில் பல குருக்கள் மறைமாவட்டத்தின் மறை பணிக்கென தம்மை அர்ப்பணித்து செயல்பட்டனர். போக்குவரத்து நிதி, தொடர்புகள் குறைவாக இருந்த வேளையிலும் இந்த மறைபரப்புக் குருக்களின் அயராத உழைப்பினால் பல புதிய ஆலயங்களும், கிறிஸ்தவ சமூகங்களும் ஆரம்பிக்கப்பட்டன. இதன் அண்மைக் கால ஸ்தாபகமானது அருட்திரு.கொட்பிறி குக் (சே.ச) அடிகளின் உழைப்பால் உருவான மறைமாவட்டத்தின் தென்பகுதியில் அமைந்துள்ள அளிகம்பை எனும் இடமா கும். இங்கு நாடோடிகளாகத் திரிந்த குறவர் சமூகத்த வர் குடியேற்றப்பட்டார்கள். இது அனைத்து பகுதிகளி லும் ஒதுக்கி வைக்கப்பட்ட ஒரு சமூகமாகும்.

ஒரே இடத்தில் தங்கி தமது பிழைப்பைக் கவனிக்க இவர்கள் பழக்கப்பட்டவர்களல்லர். காட்டிற்குச் சென்று வேட்டையாடுதல், வீடுவீடாகச் சென்று பாம்பாட்டல், குரங்கு விளையாட்டு போன்றவற்றின் மூலமாகவே தமது பிழைப்பைத் தேடிக் கொள்கின்றனர். வண.குக் அடிகள் இவர்களை ஒரே இடத்தில் குடியமர்த்த முயற்சி யெடுத்து வெற்றியும் கண்டார். அக்கரைப்பற்றிலிருந்து 8 மைல் தொலைவிலிருக்கும் அளிக்கம்பை என்னு மிடத்தில் முடிக்குரிய காணியில் இவர்களைக் குடியேற் றினார். ஒரு பாடசாலையும் கட்டப்பட்டு ஆசிரியரும் நியமிக்கப்பட்டார். வண.குக் அடிகள் அவர்களுக்கு எல் லாமுமானார் என்றே கூற வேண்டும். இறுதியில் 1961 சித்திரை 9ம் நாள் ஆயர் கிளெனி ஆண்டகையால் 200 பேர் திருமுழுக்குப் பெற்றார்கள்.

பாடசாலைகளைப் பொறுப்பேற்பது சம்பந்தமாக கையாண்ட விதத்தில் கத்தோலிக்க இயக்கங்களினதும் பொது நிலையினரதும் சக்தியை அவதானித்த ஆயர் மறை மாவட்டத்தின் நன்மைக்காகவும், விசுவாச வளர்ச் சிக்காகவும் இந்த சக்தியை எவ்வாறு பயன்படுத்த லாமென சிந்தித்தார். இதன் விளைவாக கல்முனை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மூன்று கோட்டங் களையும் இணைத்ததாக திருகோணமலை மறைமாவட்ட ஒன்றியம் ஆரம்பிக்கப்பட்டது. மறை மாவட்டம் முழுவதும் கத்தோலிக்க செய்ற்பாட்டை இவ் ஒன்றியம் ஒழுங்கமைக்கும்.

பாடசாலைகள் ஆலய நிர்வாகத்தின் கீழ் இல்லாததால் மறைக்கல்வி கற்பித்தல் பலரது சிந்தனையில் இடம் பெற்று இதை நிறைவேற்றும் வழி வகைகள் குருக்கள் மட்டத்தில் ஆராயப்பட்டன. கிறிஸ்தவ வழிபாட்டிற்கும், உருவாக்கலுக்கும் பங்கின் முக்கியத்துவம் உணரப் பட்டது. பயிற்சி பெற்ற முழு நேர மறைபோதகர்கள் பங்கு மட்டத்தில் அவசியம் என்பது உணரப்பட்டது. இக்காலத்தில "மியூனிச் முறை" எனும் ஜெர்மனின் மறைக்கல்வி முறை பிரபல்யமடைந்து வந்தது. மறை மாவட்டத்தில் மறைக்கல்விப் பணிகளில் ஆர்வமுடை யவராகவும் முன்னோடியாகவும் இருந்த அருட்திரு. ஜே. வி. சொமர்ஸ் அடிகள் மியூனிச் முறையை அறிமுகம் செய்ய மறைமாவட்ட ரீதியில் கருத்தரங்கு ஒன்றை ஒழுங்கு செய்தார். 1962ம் ஆண்டு சித்திரை மாதம் 24 முதல் 26ம் திகதி வரை மட்டக்களப்பில் இக்கருத்தரங்கு நடைபெற்றது.

திருகோணமலை, காலி மறைமாவட்டங்களில் பணி புரிந்த இயேசு சபையினர் இம்மறை மாவட்டங்களை துணை மாகாணமாக்குவதற்குரிய வழி வகைகளை ஆராய்ந்த னர். இது விடயமாக தமது மேலாளருக்கு விண்ணப்பித்தனர். மேலாளர் இது விடயமாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி அகமதாபாத்திலுள்ள அருட் திரு கொன் கட் அடிகளை இலங்கைக்கு அனுப்பி

வைத்தார். அருட்திரு.கொன்கட் திருகோணமலை, காலி மறைமாவட்டங்களுக்கு விஜயம் செய்து தனது அறிக்கையை சமர்ப்பித்தார். இதனடிப்படையில் இயேசுசபை மேலாளர் இலங்கையை 1962 ஆவணி 15ம் நாள் முதல் தனி இயேசுசபை மாகாணமாகப் பிரகடனப்படுத்தி அதன் மாகாணத் தலைவராக அருட்திரு. இம்மானுவேல் கிறவுதர் அடிகளை நியமனம் செய்தார்.

ஆயர் இரண்டாம் வத்திக்கான் சங்கம் முன்வைத்த மாற்றங்களின் அடிப்படையில் திருவழிபாடு. திருவழிபாட்டில் சங்கீதம், கிறிஸ்தவ கலை போன்ற விடயங்களை கவனிப்பதற்கென மறைமாவட்ட திருவழிபாட்டு ஆணைக்குழுவை உருவாக்கி சுற்றறிக்கை விடுவித்தார். குரக்கள் மட்டும் அடங்கும் இந்த ஆணைக்குழு ஆயரின் நேரடி கண்காணிப்பில் இயங்கும். மறைமாவட்டத்தில் கத்தோலிக்க செயற்பாட்டைத் திட்டமிட புதிய இயக்குனரும், துணை இயக்குனரும் நியமிக்கப்பட்டு 1964 ஆனியில் சுற்றறிக்கை வெளியிடப்பட்டது.

1964 ஆடி மாதம் மறைமாவட்ட மறைக்கல்வி ஆணை குழுவின் உருவாக்கலையும் மறைமாவட்ட கிறிஸ்தவ கோட்பாட்டின் கூட்டுறவையும் ஆயர் அறிவித்தார். மறைக்கல்வி ஆணைக்குழுவில் குருக்களோடு துறவற சகோதர சகோதரிகளும், பொது நிலையினரும் அங்கத்துவம் வகித்தனர். சுற்றுமடலின்படி ஆயரே ஆணைக் குழுவிற்குத் தலைமை தாங்குவார். பின்வரும் பணிகள் ஆணைக் குழுவிற்குக் கொடுக்கப்பட்டன.

- மறைக்கல்வி நிலையங்களை நிறுவுதல்.
- தகுந்த மறை ஆசிரியர்களை தெரிந்து ஆயத்தம் செய்தல்
- ஞாயிறு மறைக்கல்விக்கு பாடத்திட்டம் தயார் செய்தல்.
- இளைஞருக்கும் சிறுவருக்குமான சமயக் கல்வியை முன்னேற்ற வேண்டிய வழிமுறைகளைக் கண்டு பிடித்தல்.

  பிற மத பாடசாலைகளில் பயிலும் கத்தோலிக்க மாணவர்களின் சமயகல்விக்காக கிறிஸ்தவ கோட்பாட்டின் கூட்டுறவை வளர்க்க வேண்டுமென அனைத்து பங்குத்தந்தையர்க்கும் ஆயரின் சுற்றுமடல் வலியுறுத்தியது. இதை அமுல்படுத்த பங்குத்தந்தையர்க்கு உதவுமாறு மறைக்கல்வி ஆணைக்குழுவின் பொறுப்பாளர் அருட்திரு.J.W.சொமர்ஸ் பணிக்கப்பட்டார்.

1964ஆம் ஆண்டு கிழக்குக் கரையில் மேலும் ஒரு சூறாவளியை ஏற்படுத்திவிட்டுச் சென்றது. திருகோணமலையும் அதை சுற்றியுள்ள பகுதிகளும், இதனால் பாதிப்புற்றன. பல பெரிய மரங்கள் விழுந்தும், வீடுகள் சேதமடைந்தும், பாதிப்புகள் ஏற்பட்டாலும் தெய்வாதீனமாக உயிரிழப்பு குறைவாகவே இருந்தது. சின்னக்கடை புனித குவாடலூப் அன்னை ஆலயம், புனித வளனார் கல்லூரி, இயேசுசபை குருக்கள் இல்லம் ஆகியன சூறாவளியால் பெரிதும் பாதிப்படைந்தன.

திருகோணமலையில் சமூக சேவைகளுக்குப் பொறுப்பாக இருந்த அருட்தந்தை பிறேடி அடிகள் அகதிகளுக்கும் சூறாவளியால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் உதவ இளைஞர் தொண்டர் படையை உருவாக்கினார். இப்பணியில் அருட்திரு. பிறேடி அடிகளுக்கு உதவவென குருமட மாணவர்களும், இயேசுசபை இடைநிலைக்கால மாணவர்களும், இலங்கையின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பல இளைஞரும் திருகோணமலைக்கு வந்து குவிந்தனர்.

பாதிக்கப்பட்டோருக்கு உதவும் படி கொழும்புப் பேராயர் இலங்கையின் மேற்குப் பகுதியில் வாழும் மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார். ஆயர் கிளெனியின் வேண்டுகோளை ஏற்று புனர்வாழ்வுக்கு உதவுவதற்கென ஜெர்மனியில் ஒரு ஸ்தாபனம் முன்வந்தது. வீட்டு சொந்தக்காரரின் உடலுழைப்போடும், தொண்டர் குழுவின் ஒத்துழைப்போடும் வீடுகள் கட்டப்பட்டும் திருத்தப்பட்டும் வந்தன. இப்பணியில் இளைஞர் தொண்டர் அமைப்பு பெரிதும் பணியாற்றியது.

மறைமாவட்ட மேய்ப்புப்பணி, மறைபரப்புப் பணி விடயமாக ஆராய்வதற்காக இரண்டாம் வத்திக்கான் சங்க சிந்தனையின் பின்னணியில், பங்குத்தந்தையர், துறவற சபைச் சகோதரர்கள், சகோதரிகள், நிறுவனங்களின் தலைவர்களுக்குமான கருத்தரங்கு 1965 சித்திரை 5ஆம், 6ஆம் திகதிகளில் மட்டக்களப்பில் நடைபெற்றது. கருத்தரங்கின் முடிவாக பின்வரும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

1. செய்திகளைப் பரவச் செய்யவும், கத்தோலிக்கரல்லாதவரோடு நல்ல உறவை ஏற்படுத்தவும் மறைமாவட்டத்தில் "தகவலறிவிப்பு நிலையம்" ஒன்று இயங்க வேண்டும். இதற்கு மறைமாவட்ட மறைக்கல்வி இயக்குனர் பொறுப்பாக நியமிக்கப்பட வேண்டும். அவர் நடமாடும் திரைப்படக் குழு ஒன்றையும், வாசிகசாலையையும் ஒழுங்கு செய்ய வேண்டும்.

2. அருட்திரு. பிரேடி அடிகளின் வழியில் மறைமாவட்டம் முழுவதும் சமூக சேவைப்பணி ஊக்குவிக்கப்பட வேண்டும்.

3. கத்தோலிக்கர் தகுந்த வாழ்க்கைத் துணையைத் தேட மறைமாவட்டத்தில் திருமண தகவல் நிலையம் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

4. முதியோர் மறைக்கல்விக்கு வேண்டிய முறைகள் அறியப்பட வேண்டும். இதனை தகவலறிவிப்பு நிலையம் பொறுப்பேற்க வேண்டும்.

5. தமது பிள்ளைகளைக் கிறிஸ்தவ விசுவாசத்தில் வளர்க்க பெற்றோர் தமது பொறுப்பை உணரச் செய்ய வேண்டும்.

6. பங்குத் தந்தையின் பேருதவியுடன் பிள்ளைகளுக்கான மறைக்கல்வியை மறைமாவட்ட மறைக்கல்வி இயக்குனர் பொறுப்பேற்க வேண்டும்.

7. க.பொ.த. சாதாரண தர வகுப்பு மாணவர்களுக்கு வேண்டிய விசேட ஆயத்தங்கள் செய்யப்பட வேண்டும்.

8. பங்குத்தந்தையர் தம் பங்கிலுள்ள மக்களின் வீடுகளைத் தரிசிக்க வேண்டும்.

9. குருக்களுக்குள் ஆழ்ந்த ஒத்துழைப்பு வேண்டும்.

10. திருகோணமலை மறைமாவட்ட ஒன்றியம், இளைஞர் அமைப்பு, மரியாயின் சேனை ஆகிய மூன்றும் ஒன்றுக்கொன்று உதவி புரிந்து தமது அப்போஸ்தலிக்க பணிகளை ஒருநிலைப்படுத்த வேண்டும்.

11. பங்குகளும், கிறிஸ்தவ நிறுவனங்களும் ஒருங்கிணைந்து ஒருவர் ஒருவரது நலனில் அக்கறை கொண்டு உதவ வேண்டும்.

12. துறவற சபைச் சகோதரர் சகோதரிகள் ஞாயிறு மற்றும் விசேட நாட்களில் பங்கு ஆலயத்தில் திருப் பலி காண வேண்டும்.

13. குருக்கள் தாம் பெறும் கடிதங்களுக்கு உடன் பதில் அனுப்ப வேண்டும்.

14. கத்தோலிக்கர் ஒருவரைத் திருமணம் செய்யும் முன் கத்தோலிக்கராக மாற விரும்பும் ஒருவரின் நோக்கம் தெளிவாகப் புரியப்படவேண்டும். இதில் சந்தேகமிருந் தால் ஞானஸ்நானம் பெற்று திருமறையை மறுதலிப் பதை விட உத்தமரோடு திருமணம் செய்வது மேல்.

15. கத்தோலிக்கரும் புதிதாக திருமுழுக்குப் பெற்றவரும் திருமணம் செய்வதால் ஏற்படும் பிரச்சினைகள் அவதானிக்கப்பட்டன. திருமணத்திற்காக ஒருவர் திரு முழுக்குப் பெறுவதும், அதற்கு முன் முறையான கல்வி கொடுக்கப்படாததும் உணரப்பட்டது. கத் தோலிக்கரல்லாத பெண் கத்தோலிக்கரைத் திரு மணம் செய்யும் போது கத்தோலிக்க விசுவாசத்தை ஏற்பதும் தன்னை மாற்றுவதும் இலகுவாகிறது. ஆனால் கத்தோலிக்கப் பெண் கிறிஸ்தவரல்லாத ஒரு ஆணைத் திருமணம் செய்யும்போது பிள் ளைகளைக் கத்தோலிக்க விசுவாசத்தில் வளர்த் தெடுப்பது கடினமாகிறது. கணவர் திருமுழுக்குப் பெற்று திருமணம் செய்தாலும் அவர் மீண்டும் தனது விசுவாசத்திற்குச் செல்வதும், கத்தோலிக்க மனை வியைத் தன் வழி வர வற்புறுத்துவதும் நடைமுறை யாகியது. சமூகப் பின்னணியும் பெண்களுக்கு சுய மாக முடிவெடுக்க முடியாத நிலையைத் தோற்று வித்து விடுகிறது. இதனால் திருமுழுக்குப் பெறவிருக் கும் வளர்ந்தோருக்கு மூன்று மாதங்களுக்கு அல் லது குறைந்தது 25 வகுப்புக்கள் எடுப்பது என முடி வாகியது.

ஆயர் றொபிஷே ஆண்டகையைப் போல கிளெனி ஆண்டகையும் "திருகோணமலை மறைமாவட்டம்" எனும் பெயரில் "மட்டக்களப்பு" எனும் பெயரையும் இணைத்து புதிய பெயரைக் கருத்திற் கொள்ள வேண்டு மென்று எண்ணினார். பல வருடங்களாக கத்தோலிக்க வாழ்விற்கும், செயற்பாட்டிற்கும் மட்டக்களப்பே மைய மாக அமைந்திருந்தது. மட்டக்களப்பிலும் அதைச் சுற்றி யும் பல பங்குகளும் சிற்றாலயங்களும் கத்தோலிக்க நிறுவனங்களும் கன்னியர் மடங்களும் உருவாகின. மாகாண தலைநகர் என்பதன் அடிப்படையில் திரு கோணமலையை விட மட்டக்களப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்தது.

இவற்றைக் கருத்திற் கொண்டு மறைமாவட்டத்தின் பெயரை மாற்ற ஆயர் கிளெனி ஆண்டகை விண்ணப் பித்தார். வத்திக்கான் பொதுச் சங்கத்திற்கான தனது உரோமை விஜயத்தின்போது இது விடயமாக உரோமை அதிகாரிகளுக்கு எடுத்துரைத்தார். இதன்படி 1965ஆம் ஆண்டு இறுதியில் திருகோணமலை மறை மாவட்டம் திருகோணமலை – மட்டக்களப்பு மறைமாவட் டம் என வும் மட்டக்களப்பு புனித மரியாள் ஆலயம் புனித மரியாள் இணைப் பேராலயம் எனவும் சட்டபூர்வமாக மாற்றப்பட்டன.

1966ல் இலங்கை அரசு ஞாயிறு விடுமுறை தினங்களை வேலை நாட்களாக மாற்றி பௌத்தர்களின் பாரம்பரியப் படி பூரணை தினத்தையும் விடுமுறை நாட்களாக அறி வித்தது. 1966 தை மாதம் 6ம் திகதி முதல் இத்திட்டம் நடைமுறைக்கு வர கிறிஸ்தவர் பெரிதும் மகிழ்வடைந் தனர்.

தொழிலுக்கு செல்வோர் மற்றும் பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவர்களின் வசதிக்கேற்ப கத்தோலிக்கத் திருச்சபை நேரங்களை மாற்றிக் கொண்டது. ஆயர் கிளெனி ஆண்டகை சுற்றறிக்கை ஒன்றை வெளியிட் டார். "இலங்கையில் ஞாயிறு தினங்கள் வேலை நாட் களாகப் பிரகடனப்படுத்தப்பட்டாலும் கத்தோலிக்கராகிய எமக்கு ஞாயிறு ஆண்டவரின் நாளாகும். ஞாயிறு தினங் களில் திருப்பலிக்குச் செல்ல எமக்குக் கடமையுண்டு. சிலருக்கு வேலைக்குச் செல்ல முடியாத சந்தர்ப்பங்கள் இருக்கலாம். இவர்களை சட்டம் கட்டாயப்படுத்துவதில்லை. மக்களின் நிலையைக் கருத்திற்கொண்டு மக்கள் திருப் பலியில் பங்கேற்பதற்கு ஏற்றவாறு வசதிகளை செய் வோம் என்று கத்தோலிக்கருக்கு உறுதி கூறுகின்றேன்" இவ்வாறு ஆயர் தனது சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள் ளார்.

சித்திரை மாதம் ஆயர் மாவட்டங்களுக்கேற்ப மறைக் கோட்டங்களை உருவாக்கினார். இதன்படி மறை மாவட்ட நிர்வாகத்தில் பங்களிக்க குருக்களுக்கும், பொதுநிலையினருக்கும் சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டும் என்பது ஆயரின் முயற்சியாகும். இதன்படி ஒவ்வொரு மறைக்கோட்டத்திலும் பங்குத் தந்தையர், துறவற இல்லங்களின் மேலாளர்கள், தனியார் பாட சாலைகளின் அதிபர்கள், பங்கு ஒன்றியத் தலைவர்கள், திருகோணமலை மறைமாவட்ட ஒன்றிய மறைக்கோட்ட தலைவர்கள், மரியாயின்சேனை, இளைஞர் சமூக மறைக்கோட்ட தலைவர்கள் ஆகியோரைக் கொண்ட தாக ஆலொசனைச்சபை அமையும். இரு மாதங்களுக் கொரு தடவை ஆயர் தலைமையில் கூட்டம் நடை பெறும். இந்த ஆலோசனைச்சபை மறைமாவட்ட ஆலோ சனைச் சபையினின்று மேலதிகமான ஒன்றாகும்.

சில காலத்தின் பின் ஆயர் மறைமாவட்டத்தில் சமூகப் பணிக்கான ஆணைக்குழுவை தாபித்தார். தனது சுற்றறிக்கை மூலமாக அனைவருக்கும் தெரியப்படுத்தி னார். அனைத்து சமூகப் பணிகளும் இதனூடாகவே நடைபெறவேண்டும் என்றும் தனித்து முன்னெடுக்கப் படும் சமூகப் பணிகள் மறைமாவட்ட சமூகப் பணியாக அங்கீகரிக்கப்படாது என்றும் தனது சுற்றறிக்கையில் ஆயர் குறிப்பிட்டார்.

மறைக்கல்விப் பணியை முன்னேற்றுவதற்காக நிரந்தர மறையாசிரியரைப் பயிற்றுவிக்கும் திட்டம் மறைமாவட் டத்தில் ஆரம்பமாகியது. 1963ஆம் ஆண்டு தமிழ்நாடு திண்டிவனம் விவிலிய மறைக்கல்வி திருவழிபாட்டு நடுநிலையத்தில் வேதியர் பயிற்சிக்கென இருவர் அனுப் பட்டனர். பின் மேலும் ஐவர் பயிற்சிக்கென அனுப்பப் பட்டனர்.

1948இல் புனித வளனார் சிறிய குருமடம் ஆரம்பமாகி யதிலிருந்து இயேசு சபைக் குருக்களே பொறுப்பாக இருந்தனர். இதேவேளை இப்பணியை மறைமாவட்ட குருக்கள் ஏற்க வேண்டும் என்கிற சிந்தனை ஆயரின் மனதில் இருந்தது. இதற்காக அருட்திரு.நோயல் செனவி ரட்ண அடிகள் தெரிவு செய்யப்பட்டு பயிற்சிக்கென உரோமைக்கு அனுப்பப்பட்டார். 1966இல் பயிற்சியை முடித்த பின் சிறிய குருமட அதிபராக நியமனம் பெற்றார். அதே வருட இறுதியில் தூய சம்மனசுக்கள் சபை கன்னியர்கள் திருகோணமலைக்கு வந்தனர். சிறிய குருமடத்தின் உணவு வசதிகளையும், திருகோணமலை யில் பரவி வாழ்ந்த சிங்கள சமூகத்தவர்க்கு மறைக்

கல்வி, சமூக சேவைகளையும் இச்சகோதரிகள் பொறுப் பேற்றனர்.

இக்காலத்தில் முனிசிரேஷ்டர் பஸ்தியான்பிள்ளை தியோகுப்பிள்ளை அடிகள் உதவி ஆயராக நியமனம் பெற்றது மறைமாவட்டத்தில் இன்னுமொரு பெரிய நிகழ்ச்சியாகும். யாழ் ஆயர் அதிவந்.எமிலியானுஸ் பிள்ளை கொழும்புத் துணை ஆயர் அதிவந்.மார்கஸ் பெர்னாண்டோ ஆகியோர் உதவியுடன் 1967 வைகாசி மாதம் 11ஆம் திகதி அதிவந். கிளெனி ஆண்டகையால் முனிசிரேஷ்டர் பஸ்தியான்பிள்ளை தியோகுப்பிள்ளை அடிகள் ஆயராகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

1967 ஆடி மாதம் தனக்கு ஆலோசனை சபையாக செயற்பட குருக்கள் ஆட்சி மன்றத்தை நிறுவினார். பதவி முறைப்பட்ட, வாக்கெடுப்பு மூலம், ஆயரின் நியமனம் போன்ற 3 வகைகளின் அடிப்படையில் குருக்கள் அங் கத்துவம் பெறுவர்.

விசுவாசிகளுக்கு கிறிஸ்தவத்தில் பயிற்சியைக் கொடுக் கவும், திருச்சபை சம்பந்தமான செய்திகளை வெளியி டவும் மறைமாவட்டத்தில் கத்தோலிக்க சஞ்சிகை ஒன்று வெளியிடப்பட வேண்டும் என்று பல முயற்சிகள் எடுக்கப் பட்டன. 1926ல் அருட்திரு. அல்போன்ஸ் றிச்சட் அடிகள் "யாத்திரிகன்" எனும் மாதாந்த சஞ்சிகையை வெளியிட் டார். இது 8 பக்கங்கள் கொண்ட தமிழ் ஆங்கில செய்திகள், கட்டுரைகள் அடங்கிய போலிப் பெருமை யற்ற மாதாந்த சஞ்சிகையாகும். ஆனால் சில நாட்க ளின் பின் இது நிறுத்தப்பட்டது. பின் 1947இல் அருட்திரு. O. தம்பிமுத்து அடிகள் "த பேகன் (The Beacon)" எனும் மாதாந்த மாதாந்த சஞ்சிகையை ஆரம்பித்தார். நிதி நிலைமைகள் மோசமாக இருந்தும் இச்சஞ்சிகை சில வருடங்களுக்கு வெளியிடப்பட்டது. பின் இதுவும் தடைப் பட்டது. ஆயர் அதிவந். தியோகுப் பிள்ளை ஆண்டகை யின் வருகையின் பின் 1968இல் நடைபெற்ற திருகோண மலை – மட்டக்களப்பு மறை மாவட்ட ஒன்றியத்தின் வருடாந்த கூட்டத்தின்போது மாதாந்த சஞ்சிகை பற்றிய கேள்வி எழுப்பப்பட்டது. இக் கருத்தை ஆயர் வர வேற்றார். மீண்டும் மறைமாவட்ட மாதாந்த சஞ்சிகை ஆரம்பிப்பதற்கான முடிவெடுக்கப்பட்டு ஆயர் அதிவந். தியோகுப்பிள்ளை ஆண்டகையின் ஆலோசனைப்படி "தொண்டன்" எனும் பெயர் தீர்மானிக்கப்பட்டது. 1968ஆம் ஆண்டு மார்கழி மாதம் மறைமாவட்ட ஒன்றி யத்தின் செயலாளராகப் பணியாற்றிய திரு. எஸ். அன்ரனிப்பிள்ளை ஆசிரியராக செயற்பட முதல் "தொண் டன்" சஞ்சிகை வெளியிடப்பட்டது. இச் சஞ்சிகையும் காலப்போக்கில் பல நிதி நெருக்கடிகளைச் சந்தித்தா லும் அதிவந். தியோகுப்பிள்ளை ஆயரின் உற்காகத் தோடு தொடர்ந்து வெளியிடப்பட்டது. சில காலத்தின் பின் "தொண்டன்" ஆசிரியருக்கான பொறுப்பு மறை மாவட்ட மறைக்கல்வி இயக்குனரிடம் ஒப்படைக்கப் பட்டது. பின் இப்பணி சமூகத் தொடர்புகள் இயக்குனரி டம் ஒப்படைக்கப்பட்டது. காலப்போக்கில் தொண்டன் சஞ்சிகை பல வடிவங்களைப் பெற்று தற்போது மறை மாவட்ட கத்தோலிக்கருக்கு மட்டுமல்ல அதற்கு வெளியே இருப்போருக்கும் அரும்பணியாற்றி வரு கின்றது.

ஓய்வுபெறும் குருக்களுக்கு ஓர் இல்லமும் நோயுற்ற குருக்களுக்கு வைத்தியசாலையில் சிறப்பு இடமும் தேவை என்பதை ஆயர் கிளெனி சிந்தித்து செயற்பட் டார். ஆயர் இல்லத்தோடு சேர்ந்தாற்போல் குருக்கள் இல்லம் அமைக்கப்பட்டு 1969 கார்த்திகை 24ஆம் நாள் திருத்தந்தையின் பிரதிநிதி அதி வந். லூசியானோ ஸ்டொரேரோ ஆண்டகையால் ஆசீர்வதிக்கப்பட்டது, இதற்கு அடுத்த வருடம் வைத்தியசாலையில் குருக்க ளுக்கான சிறப்பு இடம் கட்டி முடிக்கப்பட்டது.

1970 ஆவணி மாதம் திருகோணமலையில் சமூக சேவை கள் நிலையமும், இளைஞர் விடுதியும் திறந்து வைக்கப் பட்டன. இளைஞர் விடுதி 40 இளைஞருக்கு உதவியது. மறைமாவட்டம் முழுவதற்குமான கத்தோலிக்க சமூகப் பணியை ஆற்றுவதற்கு நடுநிலையமாக சமூக சேவை கள் நிலையம் அமைந்தது. பின்னர் இளைஞர்களுக் கான தொழில்நுட்பப் பயிற்சியை வழங்க மட்டக்களப்பில் புனித வளனார் சபை சகோதரர்கள் மேற்பார்வையில் தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றினை ஆயர் ஆரம்பித்து வைத்தார்.

1972 கார்த்திகை 21ஆம் நாள் ஆயர் அதி.வந் கிளெனி ஆண்டகை ஆயராகிய வெள்ளி விழாவை மறை மாவட்டம் சிறப்புறக் கொண்டாடியது. அனைத்து மறை மாவட்ட ஆயர்களும் சமூகம் தந்திருந்தனர்.

1972 இறுதியில் யாழ் புதிய ஆயராக உதவி ஆயர் அதி.வந் தியோகுப்பிள்ளை நியமனம் பெற, ஆயர் கிளெனியின் முன்னை நாள் செயலாளரும் இக்காலப் பகுதியில் யாழ் மறைமாவட்ட நிர்வாகியுமான அருட் திரு. எல்.ஆர் அன்ரனி திருகோணமலை – மட்டக்களப்பு மறைமாவட்டத்திற்கு நியமனம் பெற்றார். 1973 தை 9ஆம் நாள் ஆயர் அதி.வந் தியோகுப்பிள்ளை யாழ்ப்பாணத்தில் பொறுப்பேற்ற பின், ஆயர் எல்.ஆர் அன்ரனி ஆண்டகை புதிய பொறுப்புக்களை ஏற்க மட்டக்களப்பிற்கு வந்தார். 1973ஆம் ஆண்டு சித்திரை மாதம் ஆயர் எல்.ஆர் அன்ரனி தலைமையில் ஆயர் கிளெனி நிதிக்குரிய செயற்குழுவை தெரிவுத் செய்து பின் அதற்கு மறைமாவட்ட நிர்வாகச் செயற்குழு என்று பெயரிட்டார். மறைமாவட்ட வரவுக்கேற்பச் செலவுகளை சரி செய்வதும், மறைமாவட்ட நிதிப் பொறுப்பாளருக்கு நிதி வசதி செய்து கொடுப்பதும் இக்குழுவின் பணிக ளாகும்.

1973 நடுப்பகுதியில் ஆயர் கிளெனி தனது இராஜினாமா கடிதத்தை உரோமைக்குச் சமர்ப்பிக்க பல ஆலோசனை களின் பின் உரோமை 1974 ஆரம்பத்தில் இராஜினா மாவை ஏற்று பங்குனி மாதம் அறிவிக்க அதே ஆண்டு சித்திரை மாதம் ஆயர் கிளெனி அமெரிக்கா பயண மானார்.

தனது 26 வருட பணிவாழ்வில் ஆயர், மறைமாவட்ட (சுதேச) குருக்களை உருவாக்கும் பணியை தனது தலையாய பணியாகச் செயற்படுத்தினார். இந்த இலட் சியத்தை நிறைவேற்ற மட்டக்களப்பில் சிறிய குரு மடத்தை உருவாக்கினார். இக்குருமடம் மட்டக்களப்பில் இயங்கியபோது தினமும் மாலை 6.30 முதல் 7.30 வரை இரு குருமட மாணவர்கள் வந்து ஆயரைச் சந்திப்பது வழக்கமாக இருந்தது. இதன் மூலம் எதிர்கால குருக் களைப் பற்றிய தெளிவான அறிவை ஆயர் பெற்றிருந் தார். சிறிய குருமடம் திருகோணமலைக்கு மாற்றப்பட் டதன் பின்புகூட ஆயர் மாதத்திற்கு ஒரு தடவை திருகோணமலைக்குச் சென்று குருமட மாணவர்களைத் தனியாகச் சந்திப்பார். இவ்வாறு இளமைத் துடிப்பும், விசு வாசமும் உள்ள குருக்களை ஆயர் உருவாக்கினார். தனது 26 வருட பணியில் மறைமாவட்டத்திற்கு 27 சுதேச குருக்களை உருவாக்கினார். இவர்களுள் 24 பேர் ஆயராலும், மூவர் உரோமையிலும் குருப்பட்டம் பெற்ற னர்.

தமிழ்மொழியின் பாவனை அனைத்துக் கருமங்களிலும் பரவி வருவதால் அமெரிக்கரான ஆயர் கிளெனி தமிழ் மொழியில் தனது பணிகளை ஆற்ற முடியாத நிலையில் தான் இராஜினாமா செய்யவேண்டிய ஒரு சூழ்நிலைக் குத் தள்ளப்பட்டார். பணியாற்றக்கூடிய சக்தி இருந்த தால் ஆயர் தனது இராஜினாமாவுக்குப் பின் அமெரிக்கா வில் டெக்சாஸ் மாநிலத்தில் ஸ்பானிய மொழி பேசும் கத்தோலிக்கருக்காக தனது இறுதி நாட்களைக் கழித் தார்.

ஆயர் இக்னேசியஸ் கிளெனியின் மாற்றத்தோடு மறை மாவட்டம், மறைமாவட்டக் குருக்களின் நிர்வாகத்தின் கீழ் வந்தது. 1893இல் மறைமாவட்டத்தைப் பொறுப் பேற்றதிலிருந்து இதற்கு வேண்டிய அடித்தளத்தை இட்டு கட்டியெழுப்பிய திருப்தியுடன் இயேசுசபையினர் பொறுப் புக்களைக் கையளித்தனர். கட்டியெழுப்புவது என்பது இலகுவான காரியமாக இருக்கவில்லை. ஆயருக்கும் இயேசு சபைக்கும் பல அழுத்தங்கள் கொடுக்கப்பட்டன. இப்போது இயேசு சபையினர் சுதேச குருக்களுடனும் தமது அமைப்புக்களுடனும் கிழக்கில் மறைபரப்புப் பணியை பெருக்குவதில் புதிய ஆயருடனும் மறை மாவட்ட குருக்களுடனும் இணைந்து செயற்பட ஆயத்த மாயிருந்தனர்.

1974இல் திருநிலைப்படுத்தப்பட்ட அதி.வந் எல்.ஆர். அன்ரனி ஆண்டகை ஆயராகும் முதல் மறைமாவட் டக்குரு எனும் சிறப்பை திருகோணமலை – மட்டக் களப்பு மறைமாவட்டத்திற்குப் பெற்றுத்தந்தார்.

ஆயர் அன்ரனி இருந்த போது பங்கு ரீதியிலும் மறை மாவட்ட ரீதியிலும் மேய்ப்புப்பணிச்சபைகளை உருவாக் கும் பணி கொடுக்கப்பட்டிருந்தது. ஆயர் கிளெனிக்கு இரு நிலைகளில் அமைப்புக்களை உருவாக்கும் நோக்கம் இருந்தது. குருக்கள், துறவறத்தார், பொது நிலையினரை பிரதிநிதித்துவம் செய்யும் மேய்ப்புப்பணிச் சபைகள் ஒருபுறம்; தனித்த பொது நிலையினருக்கான அமைப்புகளாக மறைமாவட்டப்பங்கு ஒன்றியங்கள் இன் னொருபுறம். ஆனால் இவை நிறுவன அமைப்புக்களை பெருக்கி ஒருங்கிணைப்பில் குழப்ப நிலைகளை உரு வாக்கலாம் எனக் கருதி ஆயர் அதி.வந் எல்.ஆர். அன்ரனி இவ்விரு நிலைகளையும் ஆதரிக்கவில்லை. ஆயராகிப் பொறுப்பேற்றதும் திருகோணமலை – மட்டக் களப்பு மறைமாவட்ட ஒன்றியத்தை நிறுத்தி மறை மாவட்ட ரீதியில் பொது நிலையினரின் ஒன்றியத்தை உயர்த்தினார். அதே வேளை ஆயர் மறைமாவட்ட மேய்ப்புப் பணியை நிறுவினார். எனவே மறைமாவட்ட ஒன்றியத்திற்கு இட்டுச் செல்லும் பங்கு ஒன்றியம் மறைமாவட்ட மேய்ப்புப் பணிச்சபை வேண்டும் என்பது ஆயரின் நோக்கமாகும். இச்சிந்தனையோடு தேற்றாத் தீவு புனித யூதா ததேயு திருத்தலத்தை மறைபரப்புப் பணியின் மையமாகவும் அருட்தந்தை டிக்கோணிங் அடிகளை மறைபரப்புப் பணியின் இயக்குனராகவும் பிரக டனம் செய்தார்.

மட்டக்களப்பின் தெற்கே 29 மைல் தொலைவில் அமைந்துள்ள கிராமமான சொறிக்கல்முனைக்கு திருக் குடும்ப கன்னியரை பணிக்கென ஆயர் அதி.வந். எல். ஆர். அன்ரனி ஆண்டகை தருவித்தார். மட்டக்களப்பின் தெற்கே 2 மைல் தொலைவில் அமைந்துள்ள வீச்சுக்கல் முனையிலிருந்து பிரான்சிஸ்கன் சபைக் கன்னியரை பணிக்கென 14 மைல் தொலைவிலுள்ள தேற்றாத் தீவுக்கு இடமாற்றம் செய்தார். வாகரையில் தம் பணி களை நிறைவு செய்த பிரான்சிஸ்கன் சபைக் கன்னி யரை சிங்கள மக்கள் வாழும் அம்பாறையில் பணியாற்ற உற்சாகப்படுத்தினார். இவ்வாறு மறைபரப்புப் பணிக் கான தனது முக்கியத்துவத்தை ஆயர் செயற்படுத் தினார்.

இக்காலத்தில் மறைமாவட்டம் முழுவதும் அமுல்படுத்து வதற்கென மறைமாவட்ட மறைக்கல்வி ஆணைக் குழு சிறந்த திட்டம் ஒன்றை வரைந்தது. குழந்தை ஒரு குடும் பத்தின், சமூகத்தின் அங்கம் எனும் கோட்பாட்டில் சமூகத்தை உருவாக்குவதில் திட்டங்கள் செயற்படுத் தப்பட்டன. எனவே குழந்தைகள், ஆசிரியர்கள், இளை ஞர், பெற்றோர் எனப்பிரித்து திட்டங்களோடு செயற்பட ஆரம்பித்தது. இதைச் செயற்படுத்த பயிற்சி பெற்ற மறை போதகர்களும் நெறியாளர்களும் தேவையாக இருந்தது. இதனடிப்படையில் மறைபோதகர்கள், இளைஞர் அமைப் புக்கள், ஆசிரியர் சங்கங்கள், குடும்பநல அமைப்புக்கள் நெறிப்படுத்தப்பட்டன. திருகோணமலையிலும் கல்மு னையிலும் பணிகளை இலகுபடுத்துவதற்காக மறைக் கல்வி நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

1975 மார்கழி 19ஆம் நாள் வடமத்திய மாகாணத்தில் அனுராதபுரம் தனி மறைமாவட்டமாக செயற்படத் தொடங்கியது. அதி.வந். எல். ஆர். அன்ரனி ஆண்டகை ஒன்பது வருடங்கள் பணியாற்றினாலும் 1977, 1978, 1981 ஏற்பட்ட கலவரங்களும் 1978இல் மறைமாவட்டத்தின் பல பகுதிகளை பாதித்த சூறாவளியும் மறைமாவட்டத்திற்கு பின்னடைவை ஏற்படுத்தியது. மறுபுறமாக நோக்கும் போது திருச்சபை சமூகப்பணியில் ஈடுபட இவை ஏதுவாக இருந்தன. சூறாவளி 40,000 வீடுகளை அழித்தாலும் திருச்சபை மட்டும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்க ளுடன் புனர்வாழ்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டது.

கொழும்பு செடெக் நிறுவனத்தின் இயக்குனர் அருட்திரு. ஜோ. பெர்னான்டோ அடிகள் எமது மறைமாவட்டத்திற்கு வந்து தோளோடு தோள் கொடுத்து புனர்வாழ்வுப் பணி களில் வழிநடத்தினார். சமூக விழிப்புணர்வு, சமூகம் கட்டியெழுப்பப்படல் என்று அனைத்து மட்டங்களிலும் விழிப்புணர்வும், வழிகாட்டலும் கொடுக்கப்பட்டது. “சூறா வளி“ எனும் பத்திரிகை புனர்வாழ்வு சம்பந்தமான செய்தி களை உள்ளடக்கி இரு மாதங்களுக்கொரு தடவை வெளியாகியது. மறைமாவட்டத்தில் திட்டமிடப்பட்ட படிப் படியான புனர்வாழ்வும் மீளக்கட்டியெழுப்பலும் செயற் படுத்தப்பட்டன.

சாதி, மதம், இனம் என்ற பேதமில்லாமல் புனர்வாழ்வுச் செயற்பாடுகள் இடம்பெற்றதால் கத்தோலிக்கத் திருச் சபையின் இப்பணி அனைவரின் வரவேற்பையும் பெற் றது. ஆனாலும் புனர்வாழ்வின் மூலம் மக்கள் ஒன்றுபட்டு சிந்தித்து, செயலாற்றி, பகிரும் சமூகமாக உருவாக வேண்டும் எனும் திருச்சபையின் ஆவல் முழுமையாக நிறைவேறவில்லை. குருக்களில் பலர்கூட கத்தோலிக்க சமூகப் பணியின் நோக்கத்தை முழுமையாகப் புரிந்து கொள்ளவில்லை. ஆயினும் பல குருக்கள் சமூகங்க ளைக் கட்டியெழுப்புவதற்கான தமது செயற்பாட்டில் வெற்றி கண்டனர். ஒருவகையில் சமூகங்களுக்கிடை யேயான புனர்வாழ்வு, புரிந்துணர்வு போன்றவை உரு வாக சூறாவளி ஏதுவாக அமைந்திருந்தது.

சூறாவளி ஏற்படுத்திய பாதிப்பால் மறைமாவட்ட திருச் சபை நிலைகுலையாமல் சாதி, மதம், இனம் என்ற பேதமின்றி சமூக சேவையில் ஈடுபட்டிருந்த காலத்தில் தான் மறைமாவட்ட சமூக சேவைகள் ஆணைக்குழு “எகெட்“ (EHED) (கிழக்கு மனித, பொருளாதார முன்

னேற்றம்) எனும் பெயரோடு செயற்பட ஆரம்பித்தது. தனது மக்கள் மேல் திருச்சபை கொண்டுள்ள அக்கறையை வெளிப்படுத்துவதும், வறியவரின் முழுமையான வளர்ச்சி சம்பந்தமான கிறிஸ்துவின் போதனைகளுக்கு சான்று பகர்வதும் இவ்வமைப்பின் நோக்கங்களாகும். இந்நோக்கங்களை அடைய கீழ்மட்டத்திலிருந்து குருக்களை உருவாக்கி விழிப்புணர்வைக் கொடுத்து செயற்பட்டது ஆணைக்குழு.

தொடர்ச்சியான இனக்கலவரங்களால் மலைநாட்டுப் பகுதியிலிருந்து பல தமிழர்கள் அகதிகளாக எமது மறைமாவட்டத்திற்கு வந்தனர். 1978ல் சூறாவளி ஏற்படுத்திய இயற்கை அனர்த்தமும் குருக்களை பல வழிகளிலும் சமூக சேவையில் ஈடுபட வைத்தன. இப்பணிகளை இலகுபடுத்த குருக்களுக்கு மோட்டார் சைக்கிள்கள் வாங்கிக் கொடுத்து மறைபரப்புப் பணிக்கு ஆயர் புதிய திருப்பத்தைக் கொடுத்தார்.

1978இல் மறைமாவட்ட இளைஞர் ஒன்றியம் ஆயரால் நிறுவப்பட்டது மறைமாவட்ட சரித்திரத்தில் ஒரு முக்கியமான மைல்கல்லாகும். இளைஞரை கிறிஸ்தவக் கோட்பாட்டில் வழிநடத்துதலும் இளைஞருள் பொதுநிலையினரின் பணியை ஊக்குவிப்பதும் இதன் நோக்கங்களாகும்.

திருகோணமலையிலும் மட்டக்களப்பிலும் குருக்கள் ஒன்றாகக்கூடி தமது பணி அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வது இயேசு சபை மிஷனரிகள் ஆரம்பித்து வைத்த ஒரு பழக்கமாகும். தமக்கு பங்கில் பல பணிகள் இருந்தாலும் இந்த ஒன்று கூடலுக்கு வருவதற்கு குருக்கள் தவறுவதில்லை.

ஒன்றுகூடலின்போது சமூக, பொருளாதார, அரசியல், இறையியல் விடயங்கள் கலந்துரையாடப்படுவதுண்டு. குருக்கள், துறவறத்தார் மத்தியில் செய்திகளைப் பகிர்வதற்காகவும் ஒரு சஞ்சிகை வெளியிடப்படவேண்டுமென மட்டக்களப்பு ஒன்றுகூடலின்போது கருத்துத் தெரிவிக்கப்பட்டது. இப்பணி அருட்தந்தை ஆர். எஸ். லோப்பு அடிகளுக்குக் கொடுக்கப்பட 1981 ஏப்ரல் மாதம் முதல் செய்திகள், பிறந்த நாள் வாழ்த்து, நகைச்சுவை, சிந்தனைக்கு சில துளிகள் போன்ற விடயங்களோடு 'BAT NEWS' என்ற தலைப்போடு சஞ்சிகை வெளியானது. (BAT என்பது மட்டக்களப்பை சுருக்கமாகக் குறித்து நிற்கிறது). இப்பணி 3 வருடங்கள் தொடர 1984 வைகாசி மாதம் முதல் INTERNOS (Inter Diocesan News) எனும் மாதாந்த சஞ்சிகை மறைமாவட்ட மட்டத்தில் வெளியிடப்பட்டது.

மறைமாவட்டத்தின் வளர்ச்சி, பருமன், பணியின் தேவைகள் என்பவற்றைக் கருத்திற் கொண்டு ஆயர் அதி.வந்.எல்.ஆர்.அன்ரனி ஆண்டகை மறைமாவட்டம் இரண்டாகப் பிரிந்து மேலும் பல பணியாற்ற வேண்டுமெனும் நோக்கில் உரோமைக்கு விண்ணப்பித்தார். அதற்குரிய நேரம் முறையே உணரப்படாததால் உரோமையிலிருந்து சாதகமான பதில் கிடைக்கவில்லை.

இந்தியா-பெங்களூர் தேசிய விவிலிய மறைக்கல்வி, திருவழிபாட்டு ஆணைக்குழுவின் இயக்குனர் அருட்தந்தை. டி. எஸ். அமலோற்பவதாஸ் அடிகள் தலைமையில் 1982 தை மாதம் மறைமாவட்டத்தில் பணியாற்றும் அனைத்துக் குருக்களுக்குமான ஞான ஒடுக்கமும், கருத்தரங்கும் நடைபெற்றது. இந்நாட்களில் செபத்திலும், தியானத்திலும் ஈடுபட்ட குருக்கள் மறை மாவட்டத்தின் அடிப்படைத் தேவைகளையும், பணிகளையும் முன்வைத்தனர்.

முன்வைக்கப்பட்ட கருத்துக்களாவன:

1. 2ம் வத்திக்கான் திருச்சங்கத்தின் படிப்பினையை அடிப்படையாக வைத்து இறைவனும் மனிதனும் திருச்சபையும் உலகும் வாழ்வும் சரித்திரமும் போன்ற விடயங்கள் சம்பந்தமாக புதிய கண்ணோட்டத்தைக் கொண்டிருத்தல்.

2. மறைமாவட்டத்தின் சமூகங்களுக்கான அமைதியை உருவாக்குதல்.

3. நீதியும் சமத்துவமும் உருவாகுவதற்கு மறைமாவட்டத்தின் சமூக, பொருளாதார, அரசியல், சமய, கலாசார நிலைமைகளை ஆராய்தல்.

4. மறைமாவட்டத்திற்கென பரந்த, தெளிவான திட்டம் வகுத்தல்.

5. குருக்கள் தொடக்கம் மக்களிடையே நல்ல சமூகங்களை உருவாக்குதல்.

மேலே குறிப்பிட்ட விடயங்களால் சமப்படுத்தப்பட்ட குருக்கள் மறைமாவட்டத்திற்கென பின்வரும் கொள்கையை உருவாக்கினர்.

"திருகோணமலை – மட்டக்களப்பு மறைமாவட்டம் 2ம் வத்திக்கான் சங்கத்தின் படிப்பினைகளை அடிப்படையாகக் கொண்டு கடவுள் மனிதன் உலகம் திருச்சபை சரித்திர வாழ்க்கை போன்றவற்றை இறை நோக்கோடு புதிய உலகத்தைக் கண்ணோக்க விளைகிறது. இதன் மூலம் கிறிஸ்து இயேசுவே போதித்த நற்செய்தியாக இறையரசின் முழுமையான வெளிப்பாடாகவும் அமைகின்றது. மனிதர்களைக் கொண்ட சமூகங்களை உருவாக்கி ஏழைகள் ஒடுக்கப்பட்டவர்களுக்காக, தமது பணியில் முன்னுரிமை கொடுத்து தமது வாழ்வால் கிறிஸ்து இயேசுவுக்கு சான்று பகர்வதன் மூலம் இக் குறிக்கோள் நிறைவேற்றப்படுகிறது.

இக்கொள்கையினை அமுல்படுத்த ஆயரால் அங்கீகரிக்கப்பட்ட சிறப்புக் குழு பணிக்கப்பட்டது. செயற்படுத்தும் குழு தனது பணியை மட்டக்களப்பிலும், திருகோணமலையிலும் கலந்துரையாடல், கருத்தரங்குகள் மூலம் ஆரம்பித்தாலும் எதிர்பாராத ஒரு செய்தி அனைத்து செயற்பாட்டுக்கும் முட்டுக்கட்டையாக அமைந்தது. ஆயர் அதி.வந். எல். ஆர். அன்ரனி ஆண்டகை தனது சுகயீனம் காரணமாக திருத்தந்தையிடம் சமர்ப்பித்த இராஜினாமாக் கடிதம் ஏற்றுக் கொள்ளப்பட்டதாக 1982 மார்கழி மாதம் செய்தி கிடைத்தது. இதைத் தொடர்ந்து புதிய ஆயரின் தெரிவுக்கான ஆயத்தங்கள் நடைபெற்றன.

1982 தை மாதம் நடைபெற்ற குருக்களுக்கான ஞான ஒடுக்கத்தின் பின் குழுவாழ்வுச் சகோதரிகளுக்கான புதிய திட்டம் மறைமாவட்ட மறைக்கல்வி நடுநிலையத்தால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. மறைமாவட்டத்தின் பின்தங்கிய பகுதிகளில் குருக்களோ துறவறத்தாரோ பணியாற்றாத பகுதிகளில் மறை பணியினை ஆற்றுவது இவ்வமைப்பின் நோக்கமாகும்.

திருகோணமலை-மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் புதிய ஆயராக அதி.வந்.எல்.ஆர்.அன்ரனி ஆண்டகையைத் தொடர்ந்து பணியாற்ற, திருத்தந்தையின் மறைபரப்பு

சபையின் தேசிய இயக்குனரும், யாழ் ஆயரின் செயலாளருமாகப் பணியாற்றிய அருட்தந்தை யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அடிகள் 1983 சித்திரைத் திங்கள் 7ம் நாள் உரோமையில் கருதினால் மேதகு றோசி என்பவரால் திருநிலைப்படுத்தப்பட்டு ஆனித் திங்கள் 7ம் நாள் மட்டக்களப்பில் பணியேற்றார். எமது மறைமாவட்டத்தில் புதிய ஆயரின் ஆரம்பப் பணிக் காலத்திலேயே இனக்கலவரங்கள் மோசமாக வெடித்த தால் மேய்ப்புப் பணியில் பல தடைகளும், சவால்களும் ஏற்பட்டன. ஆயினும் மறை மாவட்டத்தில் ஆன்மீக வளர்ச்சிக்காக பல முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன.

1983ஆம் ஆண்டு இனக்கலவரத்தின் பின் பாதுகாப்பு, ஆன்மீக வளர்ச்சி, ஆயரின் நேரடி மேற்பார்வை போன்ற காரணங்களினால் திருகோணமலையில் அமைந்திருந்த சிறிய குருமடம் மட்டக்களப்பிற்கு மாற்றப்பட்டது. இதன் பின் குறுகிய காலத்திலேயே 13 ஆக இருந்த குருமட மாணவர்களின் எண்ணிக்கை 42 ஆக உயர்ந்தது. திரு கோணமலையில் வெறுமையாக்கப்பட்ட சிறிய குருமடக் கட்டிடம் மேய்ப்புப்பணி நிலையமாகவும், தியான இல்ல மாகவும் மாறியது.

பொது நிலையினருக்கான பணியும் பயிற்சியும் புதிய ஆயரின் காலத்தில் மேலும் ஊக்கப்படுத்தப்பட்டது. குருக்களோடு பொதுநிலையினரும் பயிற்சிக்கென இந்தியாவிற்கு அனுப்பப்பட்டனர். ஆயர் அதி.வந்.எல். ஆர்.அன்ரனி ஆண்டகை காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட குழு வாழ்வு சிறப்புப் பயிற்சியும் ஊக்குவிக்கப்பட்டு பயிற்சியை முடித்தோர் வாகரை, கொக்கட்டிச்சோலை, ஆயித்தியமலை, அளிகம்பை, களுவங்கேணி, இருதயபுரம் (மூதூர்) போன்ற இடங்களுக்கு பணிக்கென அமர்த்தப்பட்டனர். இவர்களுக்கான பயிற்சி நிலையமும் ஆயித்தியமலையிலிருந்து மேலதிக வசதிகளுக்காக மட்டக்களப்பிற்கு மாற்றப்பட்டது.

மறைக்கல்விப் பணியில் சிங்களமொழி பேசும் கத் தோலிக்கருக்கு உதவும் முகமாக சிங்களப் பிரிவு ஆரம் பிக்கப்பட்டது. 1984இல் மறைமாவட்ட மறைக்கல்வி நிலையம் மட்டக்களப்பில் மூன்று நாள் விவிலியக் கண் காட்சியை ஒழுங்கு செய்து நடாத்தியது. விவிலியத்தைப் பெறுவதிலும் வாசிப்பதிலும் மக்கள் மத்தியில் ஆர்வம் ஏற்பட இக்கண்காட்சி உதவியாக இருந்தது.

அருட்தந்தை ஹென்றி பொன்னையா அடிகளின் குருத்துவ பொன் விழாவினை மறைமாவட்டம் சிறப்பா கக் கொண்டாடியது. பொன் விழா கண்ட முதல் மறை மாவட்டக் குரு இவராகும். இதனை மையமாக வைத்து தேவ அழைத்தலை மக்கள் மத்தியில் உருவாக்க தேவ அழைத்தல் கண்காட்சி ஒழுங்கு செய்யப்பட்டது. அருட் தந்தை ஹென்றி பொன்னையா அடிகள் மறைமாவட் டத்தின் முதலாவது மறைக்கல்வி இயக்குனராகையால் மறைக்கல்வி நடுநிலையம் இதனை சிறப்பிக்க "அருள் வழி செல்வோம்" எனும் மறைக்கல்வி நூல் ஒன்றை வெளியிட்டது. பல பாடங்கள் அமைந்த ஆசிரியர் கைநூலாகிய இந்நூல் வெளியிடப்பட்டு குறுகிய காலத் திலேயே இரண்டாம், மூன்றாம் பதிப்புகள் வெளிவந்தன.

மறைமாவட்டத்தில் கல்வியின் மந்தநிலை காரணமாக ஆயரின் பணிப்பின் பேரில் தொண்டராசிரியர்கள் மறை மாவட்டத்தின் மறைக்கல்வியினூடாக கல்வித் திணைக் கள சம்மதத்துடன் பாடசாலைகளில் பணியாற்றினர். இவர்களுக்கு சிறு தொகை அன்பளிப்பாகவும் வழங் கப்பட்டு வந்தது. காலப்போக்கில் இவர்கள் அரசாங்க நியமனம் பெற்றார்கள்.

ஆயரது 10 வருட பணியின் முக்கிய கட்டமாக 1993 அமைந்திருந்தது. திருகோணமலை-மட்டக்களப்பு மறை மாவட்டம் ஆரம்பமாகி (1893) 100 வருடங்கள் பூர்த்தி யாகும் நிலையில் ஆயரோடு இணைந்து மறைமாவட் டமே தன்னைத் தயார் செய்தது. 1993 தை மாதம் திரு கோணமலை பேராலயத்தில் நூற்றாண்டு நிகழ்வுகள் திருப்பலியுடன் ஆரம்பமாகின. ஆரம்ப நிகழ்வுகள் திருமலையில் இடம்பெற, ஆவணி 28, 29ஆம் நாட்களில் மட்டக்களப்பில் சிறப்பு நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்ப ட்டன. திருத்தந்தையின் பிரதிநிதியும், இலங்கையின் பல பகுதிகளிலிருந்தும் ஆயர்களும் வருகை தந்திருந்தனர். இத்தினங்களிலே கலை நிகழ்ச்சிகளும், சிறுவர் - இளைஞர் கருத்தரங்குகளும், சிறப்புப் பவனியும் திருப் பலியும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. ஆவணி 29ஆம் நாள் சிறப்புப் பவனியின்போது அடை மழை காரணமாக திருப்பலிகள் மட்டக்களப்பு வெபர் அரங்கிலும், புனித மரியாள் இணைப்பேராலயத்திலும் நடைபெற்றன. நூற்றண்டு நிறைவு நிகழ்வுகள் 1993 கார்த்திகை மாதம் கல்முனையில் இடம் பெற்றன.

*நிறைவாக:*

மறைமாவட்டம் ஆரம்பமாகியபோது திருகோணமலைக்கு ஒருவரும் மட்டக்களப்பிற்கு ஒருவருமாக இரண்டு அமல மரித் தியாகிகள் சபைக் குருக்களே பணியாற்றினர். 10 ஆலயங்களும் 17 மறைபணி நிலையங்களும் அன்று இருந்தன. 6690 கத்தோலிக்கரே இருந்தனர். 1895ல் 3 இயேசுசபையினரின் வருகையோடு அமலமரித் தியா கிகள் வெளியேறினர். தற்போது 50,000க்கு மேலான கத்தோலிக்கரையும் பல மறைபரப்பு நிறுவனங்களையும் 30 பங்குகளையும் கொண்டு மறைமாவட்டம் வீறுநடை போடுகின்றது.

இதன் வளர்ச்சிக்காக உழைத்த ஆயர்கள், குருக்கள், துறவறத்தார், பொதுநிலையினரை நாம் என்றும் அன்புட னும், நன்றியுடனும் நினைந்து இருகரம் கூப்புகின்றோம்.

*அருட்கலாநிதி டொமினிக் சாமிநாதன்*
ஓய்வுபெற்ற சிரேஷ்ட விரிவுரையாளர்

*திரு. A. அருளானந்தம்*
ஓய்வுபெற்ற பிரதம கணக்காய்வாளர்

*திரு. L. அலெக்சாண்டர்*
ஓய்வுபெற்ற அதிபர்